
THE OOLIAN Reg. No. M. 1509

ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

மலர் 14. 7—9—34. இதழ் 10.



ஸ்வீடன் தேசத்து மன்னரின் அரண்மனை. 15-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. —N.I.A.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கச. சென்னை, பவஹு ஆவணிமீ ௨உ வெள்ளி (7-9-1934) இதழ் ௪ம.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடி லாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்நிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெங் நாளும் வாழ்க!

ம ண ம்

மணம் என்பதை ஒரு தெய்வத் தன்மை பொருந்திய தெனவும் அது மதசம்பந்தமான தெனவும் ஒரு கூட்டத்தார் கருதுகின்றனர். மேலும் அது பிறப்புப்பற்றிய ஒரு வகுப்புக்கு உட்பட்டதென வும் அவரால் கருதப்படுகிறது. மணம் என்பது, ஆண்—பெண் இருவரின் வாழ்க்கைச் சேர்க்கையேயன்றி வேறன்று. இதைப் பொருள் விளங்காத அளவில் ஏதோ ஒன்றெனக் கருதிக்கொள்தல் அறியாமை.

மணம், பிள்ளைப்பேறு ஒன்றே நோக்கமாகத்தான் செய்துக் கொள்தல் வேண்டும் என ஒரு பழயவர்களின் சிறுகட்சி கூறுகிறது. பிள்ளைப்பேற்றை விரும்பாது மண வாழ்க்கை விரும்பும் கட்சியும் இருக்கிறது. அந்த ஆராய்ச்சியில் இங்கு புகவில்லை. மணம் செய்துக்கொள்தல் ஒரு பெண்ணும் ஆணும் ஒருவர்க்கொருவர் சார்பாக இருந்து இவ் உலகில் பிறந்த பயனை அடைதற்காகவே என்றுகொண்டு மேலே போவோம். மண வாழ்வை வேண்டாது தனி வாழ்வு விரும்பும் ஆணும் பெண்ணும் இருக்கலாம். அவர்கட்கு இங்கு இடமில்லை. “அஃதும் பிறன் பழிப்ப தில்லாயின் நன்று” என்று வள்ளுவர் கூறியவாறு தனி வாழ்வு சீரிய வாழ்வாக இருக்குமேல் அது நல்லதாக இருக்கலாம்.

உலகில் பெரும்பாலோர் மண வாழ்க்கையையே—ஆண், பெண் சேர்ந்து வாழும் வாழ்க்கையையே -விரும்பி நிற்கின்றனர். அம்மண வாழ்வு விரும்புவோர் எப்படி அமைகின்றனர் என்பதே ஆராயத் தக்கது. ஹிந்துக்கள் என்போர் சம்பந்தப்பட்டவரை, பழய மணமுறை பொருளற்ற ஒன்றாகவே, அறிஞர் அருவருக்கத் தக்கதாகவே இருக்கின்றது. வாழ்க்கைக்குத் துணையாகத் தேர்ந்தெடுக்கப்படும் இருவரும் ஒருவர் கருத்தை ஒருவர் அறியாமலேயே பிறரால் சேர்க்கப்படுவதுபோன்ற கொடுமை பிறிதொன்றிருக்க முடியாது. பழக்கத்தில் இது ஏதோ ஒருவகையாக் நடந்து கொண்டிருக்கின்றதே யொழியக் கொஞ்சம் இதனை நுண்ணறிவோடு ஆராயப் புகும் எவரும் இச்செயலை அங்கீகரிக்க முடியாது.

வாழ்வைவிட முக்கியம் வேறொன்று கிடையாது. வாழ்வில், இயற்கையில் பெண்ணும் ஆணும் கலந்து வாழ்தலிலேயே இன்பம் காண்கின்றார் உலகில் பெரும்பாலார். அவ்வாழ்விற்குச் சேரவேண்டிய ஆணும் பெண்ணும் எப்படி அமைதல்வேண்டும் என்பதே வினா. இருவரும் பெரிதும் கருத்தில் ஒத்திருத்தல் வேண்டும்; கல்வியில் ஒத்திருத்தல் வேண்டும்; குணம், பிற ஆகிய எல்லாவற்றினுமே பெரும்பான்மை ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். இன்றேல் அவர் வாழ்க்கை சுவை பயக்காது; வாழ்வில் அவர் இன்பம் காணமாட்டார். இன்றைய இந்துமதக் கட்டாய மணங்கள் போதிய இன்பத்தை இல்வாழ்வோர்க்குத் தந்து நிற்கவில்லையென ஐயமற உரைக்கலாம்.

விரும்பிய ஒரு பெண்ணை விருப்பம்கொண்ட ஆண் மணப்பதே இன்பம் காணும்வழி. பழந் தமிழர்கூட மண வினையை இவ்

வாறே கொண்டனர். இன்றைய அறிவு உலகமும் அவ் வழியேதான் இயங்குகின்றது. மணத்தை, வகுப்பு — சமயம் — மொழி முதலியன தடைசெய்யா; அவைகள் தடுக்கவிடுதல் தகாது. மெய்க்காதல் தோன்றியவிடத்து எத்தத் தடையுமின்றி மண வினை நிகழவேண்டுவதே. இம்முறையில் மணம் பல நடைபெறத் தொடங்கினல் தமிழ்நாடு நல்ல சிறந்துவிடும் என்பதில் தடையில்லை.

கலப்பு மணங்கள் இன்று தமிழ் நாட்டில் பெருகி வருவது மகிழ்ச்சிக்குரியதே. ஆனல் அவைகள் அனைத்தும் காதல் மணங்கள் என்று கொள்ளுதற்கில்லை. மணம் காதல் கலந்து நடைபெறுதலே சாலச் சிறப்பு. காதல் மணமே வாழ்வைப் புனிதப்படுத்தும். மணத்தில் வகுப்புப் பார்த்தல் என்ற கொள்கை பலராலும் இன்று நழுவவிடப் பட்டு வருகிறது. சமீபத்தில் காந்தியடிகளை "உங்கள் மகனுக்குஎன் பிராமணப் பெண்ணை மணக்க அனுமதி தந்திர்கள்" என ஒருவர் கேட்டதற்கு "மணஞ் செய்து கொள்வதைச் சாதி தடை செய்யாது" என அடிகள் விடுத்த பதில் சீர்திருத்தக்காரர்கட்கு ஆக்கம் தருவதாகும்.

மணத்தில் விலகிக் கொள்தலுக்குச் சட்ட சம்மதம் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம். வாழ்க்கை பிடிக்காது வெறுப்பு அதிகப்படுங்கால் விவாக விலக்குச் செய்துகொள்ள விரும்புவோர்க்குக் கட்டாயம் இடந்தரல் வேண்டும். இதுபற்றி ஒரு மசோதாக் கொணர்ந்து இந்தியச் சட்டசபையில் நிறைவேற்ற வேண்டுமென்பது சில அறிஞர் கருத்து. இது அவசியம் வேண்டுவதே. இதனல் ஆடை மாற்றுவது போல் விவாகத்தையும் விலக்கையும் அவ்வளவு எளிதாகக் கருதுகின்ற சிலர் கருத்தை நாம் ஆதரிக்கின்றோம் என எண்ணற்க! வாழ்க்கையே பாழாகும் சந்தர்ப்பங்களில் கையாளச் சட்டத்தில் இடமிருக்க வேண்டுவது அவசியம்.


வாழ்க்கையின் முக்கியமான மணம் சீரிய முறையில் ஆக்கப்பட வேண்டுவது இன்றியமையாதது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இடி முழக்கம்

ஜான்ஸிபார் இந்தியர்களின் துயரம்


ஜான்ஸிபார் ஆப்ரிக்காவில் ஒரு சுல்தானின் ஆதிக்கத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்பில் இருந்து வரும் ஒரு தேசம். அதில் இந்தியர்கள் ஏராளமாகக் குடியேறி இருக்கின்றனர். அவர்களின் நிலைமை இப்பொழுது வெகு நெருக்கடியாக இருக்கிறது. ஏனெனில் அவர்களைப் போல் எத்தனையோ வெளிநாட்டார் குடியேறி இருந்த போதிலும் இந்தியர்களை பட்டுந்தான் அன்னியர்களாக ஜான்ஸிபார் அரசாங்கம் கருதுகிறது. இப்பொழுது சமீபத்தில் அமுலுக்கு வந்த சட்டம் அன்னியர்களுக்குத் தீங்கிழைக்கக் கூடியதாக விருக்கிறது. இச் சட்டத்தால் அராபியர்களும், ஆப்பிரிக்கர்களும் பிரிட்டிஷ் ரெஸிடன்டின் அனுமதி இல்லாது மற்றத் தேசத்தினருக்கு நிலம்விற்பனை செய்யக்கூடாதாம். இன்னும் இதே மாதிரி ஆரோபியருக்குச் சலுகை காட்டும் விதம் சட்டமிருக்கிறது. இந்தச் சட்டத்தினல் இந்தியருக்கு ஜான்ஸிபாரில் நிலம் வாங்க உரிமையில்லாமல் போய் விடுகிறது. இதே மாதிரி 1923ல் கென்னியா என்றபகுதி இந்தியரைத் தடைசெய்ய ஒரு சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. இப்பொழுது ஜான்ஸிபாரிலும் இந்த உரிமை பறிமுதல் செய்யப்பட்டது. இந்திய அரசாங்கம் இந்த அட்டூழியத்திலிருந்து இந்தியரை விடுவிக்க முயலுமா?

விதவையின் கண்ணீரைத் துடை



சென்னையில் 'ஸ்ரீராமஜெப'த்தில் சிரக்கல் ராஜாவான திரு. வி. கே. கோளவர்மா வுக்கும் திரு. ஏ. டி. வி. நம்பியாரின் புதல்விக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது. படத்தில் தம்பதிகள் விருந்ினரோடு காணப்படுகிறார்கள்.

—P. P. B.



இலக்கியப்பகுதி

குறிப்பறிதல்

ராய. சோ.

வள்ளுவனர் காமத்துப்பாலின் இரண்டாவது அதிகாரம் 'குறிப்பறிதல்' என்பது. பூஞ்சோலையிலே கண்ட மங்கையின் அழகால் தாக்கப்பெற்று மயங்கி நின்ற இளைஞன், தான் விரும்பும் அம்மயிலின் குறிப்பு எது என ஆராயத் தொடங்குகின்றான். குறிப்பை அறிவதற்குக் கூறிய அதிகாரமே குறிப்பறிதல் என்பது. இவன் அவளைக் காதலித்தால் போதுமா? அவள் குறிப்பை—உள்ளக்கிடக்கையை—இவனைக் காதலிக்கிறாளா என்பதை—அறிந்து கொள்தல் வேண்டுமல்லவா? அவள் குறிப்பை அறிந்துக்கொள்ளாமல் ஒழுங்கு மீறிய செய்கையிற் புகுவது இழிவன்றோ? மேலும் அவள் நினைவு இன்னதென்றே அறியாமல் அவள்மீது தான்கொண்ட ஆசை ஒன்று காரணமாக மட்டும், ஒரு பெண்ணைக் கூடுமானாலும் ஆற்றலால் பெறுவதில், விரும்பும் இன்பம் சிறிதும் இராது என்பதை நன்னறிவுடையான் அறியா திருப்பனே? 'எதிரியைப் பற்றிய கவலையில்லை; தான் மட்டும் விரும்பினால் போதும்' என்பது இராவணன் அறம்; இது வள்ளுவர் அறமன்றோ? எனவே, நமது வள்ளுவரின் இளைஞன், தான் விரும்பும் கட்டழகி தன்னை விரும்பினாலொழிய அவளை அடைவதில் பயனில்லை யெனக் கருதி, அவள் தன்னை எவ்வாறு நோக்குகின்றாள் என்ற குறிப்பை அறிகின்றான். அவன் குறிப்பை அவள் அறிந்துகொள்ள முயலவில்லையா என்ற கேள்விக்கு இடமே யில்லை. அவனது பரபரப்பு வெளிப்படையே யன்றோ? எனவே அவன் குறிப்பை அவள் அறியத் தேவையில்லை யாகிவிட்டது. அப் பெண் தன்னைக் காதலிக்கிறாளா என்ற குறிப்பை— அவன் அறியத்தொடங்குகின்றான்.

உள்ளக்கிடக்கையைத் தெற்றென அறிவுறுத்துவது கண்ணே யென்பது அவனுக்குத் தெரியும். உடனே கண்ணை ஆராய்கின்றான்.

" இரு நோக்கு இவள் உண்கண் [உள்ளது; ஒரு நோக்கு
நோய்நோக்கு; ஒன்று அந்நோய் [மருந்து"

இப்பெண்ணுடைய மை தீட்டிய கண்ணுள்ளே இரண்டு பார்வை யிருக்கின்றது; அவ் இரண்டனுள் ஒரு நோக்கு எனக்கு நோய் செய்யும் நோக்கு; மற்றொரு நோக்கு அந்நோய்க்கு மருந்தாகிய நோக்கு என எண்ணுகின்றான். அவளுடைய பார்வை இவனுக்கு இரண்டு விதமாகப் படுகின்றது. முன்னையது இவனுடைய உள்ளத்தே கிளர்ச்சியை உண்டாக்கிக் காமநோயைத் தருகின்றது; உடனே இன்னொன்று முதல் செய்த நோய்நோக்கிற்குத் தானே மருந்தாக அமைகின்றது என அவன் காண்கின்றான். அவள் செய்த நோயை ஆற்றவல்ல மருந்து அவளிடம் உண்டேயன்றி வேறெங்கும் பெற முடியாதன்றோ? "மந்திரம் இல்லை, வேறோர் மருந்தில்லை, மையல் நோய்க்கு." நோய் நோக்குச்செய்த அவள், அது அவனைக்கொல்ல விட்டு விடாது மருந்து நோக்கையும் அருளினாள் எனக்கண்டதும் அவன் அடைந்த

களிப்பிற்கு எல்லை சொல்ல முடியுமோ?

"கண் களவு கொள்ளும் சிறு [நோக்கம்
காமத்திற் செம்பாகம் அன்று [பெரிது"

என மகிழ்கின்றான் தலைவன். தலைவியின் மருந்துப் பார்வை—நல்ல நோக்கு—தன் மேல் வீழ்ந்தவுடன் மெய்யுறு புணர்ச்சியில் ஒரு சரி பாதிக்கு மேல்தான் நுகர்ந்துவிட்டதாக இறுமாந்து இன்பக் கடலாடுகின்றான் இளைஞன். யான் காணாமல் இந்நங்கை என்மேல் செலுத்துகின்ற அருகிய களவுப் பார்வை, சேர்க்கையின்பத்தில் ஒரு நேர் பாதியை மட்டும் தருகின்றது என்று சொல்ல முடியாது; அதில் சரி பாதிக்கு அதிகமான இன்பத்தையன்றோ ஈகின்றது; எனக் கூறுகின்றான் என்றால், அவன் மேல் வீழ்ந்து களவுகொண்ட விழியினால் அவன் எவ்வாறு மருட்டப்பட்டான் என்ற இயற்கையைச் சொல்லவும் வேண்டுமோ? பார்வையிலே பெற்றுவிட்டான் பாதிக்கு அதிகமான இன்பத்தை!

"நோக்கினாள்; நோக்கி இறைஞ்சி [னாள்;
அஃது அவள் யாப்பினுள் அட்டிய [நீர்"

நோக்கினாள் :—என்னைப் பார்த்தாள்; நோக்கி :—பார்த்ததும், இறைஞ்சினாள்:—(நாணத்தால்) தலை குனிந்தாள்; அஃது:—அவள் அப்படிச்செய்த அக்குறிப்பானது, யாப்பினுள் :—(எங்கள் இருவரிடத்தும் தோன்றிய) அன்பு என்ற பயிருள், அவள்—அட்டிய நீர் :—(அப்பயிர் வளர்வதற்காக) அவள் பாய்ச்சிய நீராயிற்று. என்னைக் காதற் பார்வை பார்த்து நாணி அவள் தலை கவிழ்ந்த குறிப்புச் செயலானது எங்கள் காதற் பயிரை வளர்க்க அவள் கொட்டிய நீராயிற்று என இறும்பூதெய்துகின்றான்.

"யானோக்குங்காலை நிலநோக்கும் [நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்"

யான் அவளைப் பார்க்குங்கால் என்னை எதிர்த்துப் பார்க்காமல் தரையைப் பார்த்துக் குனிந்து நிற்கின்றாள்; நான் அவளைப் பார்க்காது கண்ணை வாங்கிக்கொண்டவுடன், அவள் என்னை நிமிர்ந்து பார்த்து மெதுவாகச் சிரிக்கின்றாள். அதுதவிர,

"குறிக்கொண்டு நோக்காமை [யல்லால் ஒரு கண்
சிறக்கணித்தாள் போல நகும்."

நோக்கக் குறித்து என்னைப் பார்க்காமல் ஒரு கண்ணைச் சுருக்கிக்கொண்டவள் போலப் பாவனை செய்து—(கடைக்கண் வீசி) உள்ளே மகிழ்கின்றாள். எனவே அவள் குறிப்பு நன்றே என உணர்கின்றான் தலைமகன். குறித்த ஐந்து குறளாலும் அந்நங்கை தன்னைக் காதலிக்கின்றாள் என்ற குறிப்பைச் செவ்வனே அறிகின்றான் இளைஞன்.

தொடக்கத்தில் இரண்டு பார்வையைச் செலுத்தினாள் அவள்; அவற்றுள் ஒன்று இவனுக்கு நோய் செய்தது; பிறிதொன்று அந்நோயைத் தணித்தது. பிறகு அவள் கள்ளப் பார்வையை அள்ளிபெறிந்தது; அது கண்டு மயங்கி இன்பத்தில் பெரும்பகுதியைத் திளைத்தவனானான் இவன். பின்னை அவள்



திருமணத் தம்பதிகள். சிரக்கல் ராஜாவான திரு. வி. கே. கோள வர்மாவும் அவர் மனைவியும். —P.P.B.

இவனை ஒரு பார்வை பார்த்து அப்படியே தலைகுனிந்துவிட்டாள்; அதனால் காதற்பயிர் வளர்ந்து செழித்து விட்டது. அதன் பின், இவன் அவளைப் பார்த்தான்; அவள் பூமியை நோக்கினாள். இவன் திரும்பினான்; அவள் மெதுவாக இவனை நோக்கிப் புன் முறுவல் பூத்தாள். கடைசியாகக் குறிவைத்து இவனை வெட்டுப் பார்வைப் பார்த்துக் கொண்டே இமயல் கடைக்கண் வீசி இளகுகை செய்து விட்டாள்.

எனவே அவள் குறிப்பு நன்றே என இவன் தெளிதற்குப் போதிய காரணங்கள் கிடைத்து விட்டன. தான் அவளைக் காதலிப்பது போலவே அவளும் தன்னைக் காதலிக்கின்றாள் என உணர்ந்தான் அவன். ஆனால் ஒரு சிறு இடையூறு வந்தது. அதுவும் உடனே நீங்கி விடுகிறது.

இந்நிலையில் தலைவியின் இச்செயலையும் அவள் வயப்பட்டு ஒரு பூமான் மயங்கி நிற்பதையும் அறிந்த தலைவியின் தோழி தலைவியைக் கடிந்து ஏதேதோ சொல்லுகின்றாள். தலைவி என்ன செய்தாள்! தோழியை மறுத்து "நான் அவனைக் காதலிக்கத்தான் செய்வேன்" என்று சொல்லவில்லை; அதற்கு நாணுகின்றாள் அவள்; அம்மனிதனை வெறுக்கின்றவள் போல் காட்டிக்கொண்டு அவனை வெறுத்துச் சில சொல்கின்றாள் வாய்விட்டு; கோபப்பார்வை பார்க்கின்றாள்; அவள் உரை காதில் வீழ்ந்தது; அவள் வெறித்த பார்வையும் கண்டான். என்றாலும் அவன் ஏமாறவில்லை. அவ்வழகியின் உரை வெற்றுரை யெனவும் அக் கடுஞ் சொற்குள்ளும் காதற் கலப்பையும் அவன் அறிந்தான். அவ்விளைஞன் நுண்ணறிவினன்; அவன் எளிதில் ஏமாறக் கூடியவனல்லன். அவள் வெறித்த பார்வையுள் அடங்கியிருந்த காதல் வெள்ளத்தை அவனோ காணாது விடுபவன்?

"உறாஅதவர் போல் சொலினும் [செறாஅர் சொல்
ஒல்லை உணரப்படும்"

"செறாஅச் சிறு சொல்லும் செற்றார் [போல் நோக்கும்,
உறாஅர் போன்று உற்றார் குறிப்பு"

என மேலும் ஊக்கங் கொள்கின்றான் வள்ளுவரின் இளைஞன்.

அவள் பொருந்ாதவள் போல் பேசினும் உண்மையில் உள்ளத்தே வேறுபாடு இல்லாதவர் சொல்லின் பயன் விரைவில் அறியப்படும்; வருத்தப்படுத்தாத கடுஞ் சொல்லும் பகைத்தவர் போற் காட்டுகின்ற கோபப் பார்வையும் பகைப்பவர் போன்று வெளிக்குக் காட்டுகின்ற நட்பினரது குறிப்புஅல்லவோ? இது எனக்குத் தெரியாதோ, என எண்ணமிடுகின்றான் அக்கூர்த்த மதியினன்.

ஆனாலும் என்ன இவள் இப்படிச் செய்கின்றாள் என ஒரு விதமாகப் பார்த்தான் அவன். அவள் உடனே

இவன் தன்மை கண்டு நெகிழ்ந்து மெதுவாகச் சிரித்து விட்டாள். ஒரு கணத்தே ஆனந்தம் பொங்கி விட்டது அவனுக்கு. அவள் பூத்த சிரிப்பால் ஒரு அழகுக் குறிப்பைக் கண்டு கொண்டான்.

"அசையியற்கு உண்டோர் ஏஎர் [யானோக்கப்
பசையினன் பைய நகும்"

"யான் பார்க்க, எனது பார்வையைக் கண்டவுடன் எனக்கு இரங்கி மெதுவாகச் சிரிக்கின்றாள் அவள்; அசைகின்ற நுணுகிய இயல்பினையுடைய அப் பெண்ணிடத்தே உண்டு காதற் குறிப்பு" எனப் பேரானந்தப் பெருவாரிதியில் திளைத்து விட்டான். குறிப்பறிதல் அதிகாரத்தில் இதுவரைக் கூறிய எட்டுப் பாக்களும் தலைவன் கூற்று. இனி இரண்டு பாட்டுக்கள் தோழி கூற்று. அனைத்தையும் கண்டாள் தோழி. இனித் தான் ஒதுங்கிக் கொண்டு காதலர்களைத் தனி விடுத்தலே தகுதியென உணர்கின்றாள் தோழி. தோழி தன்னுள்ளே சொல்லிக் கொள்ளுகின்றாள்.

"ஏதிலார் போலப் பொது நோக்கு [நோக்குதல்
காதலார் கண்ணே உள"

"கண்ணொடு கண்ணிணை நோக் [கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல."

அயலாரைப்போல ஒருவரை ஒருவர் பொதுநோக்காகப் பார்த்துக் கொள்தல் காதலாரிடத்தேயே நிகழக்கூடியன; ஒருவர் கண்ணொடு இன்னொருவர் கண்கள் பார்வையில் ஒத்துவிட்டால் பிறகு வாய்ச் சொற்கள் ஒரு பயனையும் தாரா; என நினைக்கின்றாள் தோழி. கருத்தென்ன? வாயினால் தன்னிடம் மறுத்துப் பேசுகின்றாள்; ஆனால் செய்கை முற்றும் மாறாக இருக்கின்றது. கண்ணொத்து விட்டது; நோக்கம் பொதுவில் வீழ்கின்றது; வீண் வாய்ச் சொற்களில் என்ன பயன் எனக்கருதி இனி நமக்கு வேலை இங்கு இல்லை எனத் தோழி விலகிவிடுகிறாள். பிறகு சொல்லவும் வேண்டுமா? காவிலே கருத்தொத்த காதலர் சேர்க்கை! காதலுக்கு இருவரும் வயப்பட்டார்; கூடினர்; களித்தார்; குறிப்பறியப் பட்டது; கூட்டுறவு நேர்ந்தது; கருதிய இன்பம் கைகூடிற்று. இன்பம் துய்த்து மகிழ்ந்த உணர்ச்சி அடுத்த அதிகாரம் 'புணர்ச்சி மகிழ்த'லில் வெளிப்படும்.

2

மின்வெட்டு

மோட்டார் வேகத்தைத் தடுக்க வேண்டுகோள்.

—செய்தித் தலைப்பு.

என்ன? மோட்டாரிடமா?

* * *

சிறைத் தண்டனையைவிடக் கசையடியே அதிக பலனுள்ளது. மாஜிஸ்திரேட்டின் கருத்து.

—செய்தித் தலைப்பு.

ஐயோ பாவம்!

* * *

மேலான ஆகாரத்திற்கான மேலான பீடர்.

—விளம்பரம்.

ஆஹா! மேலான.

* * *

ரோஜா முள்ளும் முள்ளுதான்.

—விளம்பரம்.

ஆஹா! என்ன அரிய உண்மை!

* * *

நீங்கள் செய்யவேண்டியது என்ன?

—விளம்பரம்.

அது எங்களுக்குத் தெரியும்.

* * *

'நான் துரோகம் செய்யவில்லை' ஸ்ரீ ராமசாமி முதலியார் விளக்கம்.

—செய்தித் தலைப்பு.

வேறு செய்ததுதான் என்ன?

* * *

வேலையில்லாத் திண்டாட்டம். படித்தவர்களுக் குபகாரம்.

—செய்தித் தலைப்பு.

ஆஹா! என்ன உபகாரம்!

* * *

கைதியின் குடுமியை வெட்டிய போலீஸார்.

—செய்தித் தலைப்பு.

போலீஸாருக்குப் புதிய தொழிலா?

* * *

சீமாந்தானில்............தமிழ்ப் பள்ளிக்கூடம்............

—செய்தித் தலைப்பு.

ஏமாந்தானுக்கு எதிர்ப்பா?

* * *

வருகிறது! தீபாவளிப் பண்டிகை.

—விளம்பரம்.

உண்மை!

* * *

நாடக மேடை நினைவுகள்.

—கட்டுரைத் தலைப்பு

நினைத்தால் தூக்கம் வாராது!

* * *

பைத்திய நிவாரணி.

—விளம்பரம்

சில அரசியல்களுக்குத் தேவை.

* * *

ஏமாற்றும் வித்தை.

—கட்டுரைத் தலைப்பு

அதற்கு அரசியல் என்றும் பெயர்.

* * *

இந்தியரே அன்னியர்.
ஜான்ஸிபார் இந்தியர் துயரம்.

—கட்டுரைத் தலைப்பு

அங்கும் அப்படித்தானா?

* * *

முயல்கள் யாத்திரை

—செய்தித் தலைப்பு

ஆமைகளை இப்பொழுதாவது வென்றுவிடுமா?

* * *

வைத்தியர்—புலி

—கட்டுரைத் தலைப்பு

இருவரும் ஒரே மாதிரித்தான்.

* * *

நீண்ட நாள் வாழ்வதெப்படி?

—கட்டுரைத் தலைப்பு

சாகாமலிருந்து.

* * *

"ஹா! செத்து விட்டேன்.

—கட்டுரைத் தலைப்பு

இப்பொழுதாவது தெரிந்ததா?

* * *

"ரொம்ப மணக்கிறதே?"

—விளம்பரம்

மூக்கைப் பிடித்துக்கொள்.

* * *


பலிக்குமா ஜோஸியம்?

—கட்டுரைத் தலைப்பு

ஜோஸியரைக் கேட்டால் தெரியும்.

* * *

விகடத்திரள்



தனலட்சுமி:—அக்கா, நீ யாரை விவாகம் செய்து கொள்வாய்?

சகுந்தலா:—தங்காய்! நான் கிங்காங் என்பவர் மகனைத்தான் விவாகம் செய்து கொள்வேன்.

தனலட்சுமி:—ஐயோ! அது குரங்கு அல்லவா?

* * *

ஜகன்னாதாச்சாரி:—என்டா! உன் விடத்தில் மிதியடி இருக்கிறதா?

சக்கிலியன்:—உங்களுக்கு எத்தனை மிதியடி வேண்டும்.

* * *

பிரகாசம்:—நண்பர்களுக்கு நான் புஸ்தகம் கொடுப்பதே யில்லை. ஏனெனில், இது சிநேகத்தைக் கெடுத்து விடும்.

கண்ணன்:—நாம் ஒரு போதும் நெருங்கிய நண்பர்களாக இல்லையே.

* * *

ராஜன் லட்சுமியை நந்தவனத்தில் கண்டு கட்டி யணைத்துக்கொண்டு, "நான் உன்னை முத்தமிட்டால் என்ன செய்வாய்!" என்றான்.

லட்சுமி:—அம்மாவைக் கூப்பிடு வேன்.

ராஜன்:—அம்மா இல்லை என்று சொன்னயே!

லட்சுமி:—ஊம், அதனால்தான் தைரியமாகக் கூப்பிடுவேன்.

* * *

துரைசாமி:—எனது சிநேகிதன் பத்து ரூபாய் கேட்டான். கொடுத்தேன். நோட்டே எழுதிக் கொடுக்காமல் போய்விட்டானே. இதற்கு என்ன செய்யலாம்.

பெரிய தம்பி:—இருபது என்று நீ எழுதினால், அவன் பத்துதானே கொடுத்தாய் என்று பதில் எழுது வான். அதுவே நோட்டு ஆகிவிடு கிறது.

—எம். என். ஜி.

* * *



"மணி என்ன?"

"பன்னிரண்டு இருக்கும்".

"அதற்குமேல் ஜாஸ்தியாக இருக்குமென்று நினைத்தேன்."

"இந்தப் பக்கத்திலே பன்னிரண்டிற்கு மேல் அதிகமாகாது. அதற்கப்புறம் ஒன்றிலிருந்துதான் ஆரம்பிப்பது வழக்கம்."

* * *

"நாளையிலிருந்து சாப்பாட்டை மாற்றப் போகிறேன். இனிச் சாதம் சாப்பிடுவதில்லை. காய்கறிதான் ஆரோக்யமானது."

"என்ன! டாக்டர் சொன்னரா?"

"இல்லை; அரிசிக்கடைக்காரன் கடன் கொடுக்க மறுத்துவிட்டான்"

* * *

ஹோட்டல்காரர் (வெளியே பார்த்துக்கொண்டு) "மழைபோல இருக்கிறது."

சாப்பிட்டுவிட்டுச் செல்லுகிறவர்:—ருசியும் அப்படித்தான் இருக்கிறது.

* * *

பல் வைத்தியர் (சிறு பையனின் பற்களைப் பிடுங்கிவிட்டு) "பயப்படாதே வளர்ந்துவிடும்" என்றார்.

சிறுவன்:—சாயங்காலம் முறுக்குத் திங்க வளர்ந்துடுமோ?

* * *

பிரம்மச்சாரி:—திருமணம் என்பது கொடுக்கல் வாங்கல் மாதிரித்தான்.

கஷ்டப்பட்ட புருஷன்:—ஆமாம். நாம் கொடுக்காவிட்டால் அவள் வாங்கிக் கொள்ளுகிறாள்.

* * *

மகன்:—அப்பா மரியாதை என்றால் என்ன?

தகப்பனர்:—அதுதான் நாம் மற்றவர்களைப் பற்றி நினைத்திருப்பதைச் சொல்லாமலிருப்பது.

* * *

ராமன்:—பெண்கள் நம்மைவிடப் புத்தியில் குறைந்தவர் என்று சொல்லுவது முட்டாள்தனம்.

கிருஷ்ணன்:—ஆமாம். யாராவது கேட்டுவிடப் போகிறார்கள்.

* * *

சாமி:—அடிக்கடி பேசுகிற பெண்ணைக் கலியாணம் செய்துக்கொள்ள இஷ்டமா அல்லது இன்னொரு விதமான............

முத்து:—இன்னொரு விதம் என்ன இருக்கிறது?

* * *

வியாபார தந்திரம்

நிர்வாண பட்டணத்தில்கூட நீர்ச்சீலை விற்கும் திறமை.

காந்தி திருப் பல்லாண்டு.

—————(●)—————

ராய. சொ.

(உரிமை ஆக்கியோனுடையது.)

பாயிரம்.

சகமாண்டோர் ஆயிரத்தெண் ணூற்றைம்பத் தைந்தின்மேற் சார்ந்து நின்ற
மிகுமாங்கீ ரசஆனி மேவிருபத் தொன்பானுள் மேலோர் வாழப்
புகுகாந்தி யடிகட்குப் புனைந்தனனற் பல்லாண்டு புனித வேலூர்த்
தருமானர் தனிச்சிறையில் ராயசொக்க லிங்கனருந் தமிழில் மாதோ.

சீர்கெழு மாநிலம் யாங்கணும் ஈடில்லான்!
சீலத்தால் ஞாலமாள்வான்!
நார்நிறை உரையலால் வேறுரை அறியாதான்!
நல்லறமே நவிலுநாவான்!
ஆர்கலி பொங்கியே ஆரவா ரஞ்செயினும்
அமைதியிழ வாதஐயன்!
பார்புகழ் அருந்தவக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (க)

மிடி, பிணி, படிறு, பொய், வெஞ்சினம், வீணசை,
மெலிவு, குடி, காமமோடு,
மடி, கொலை, மற்றேர் மண்ணுள் மடமையொடு
மாணுத அன்னயாவும்
அடியுடன் களைந்திட அவனியில் தோன்றியுயர்
அறம்வளர்த் தருளுமெங்கள்
படிதனில் உயர்ந்தசீர்க் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (உ)

மாரதர் அதிரதர் முதலிய வல்லாண்மை
மன்னர்சீர் நீதிகண்ட
போரதில் இணையிலா வீரா பலர்வாழ்ந்த
புரையில்நா டிற்றைநாளில்;
பாரதில் சமம்பெறு தொன்னலர்க் குட்பட்ட
பான்மைதொலை யப்பிறந்த
பாரதர் முடிமணிக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (ங)

ஆவியே அணையான்! அவனி தனக்கென்ன
அறிஞரெனும் பெருமைமிக்க
நாவலர் பலருரை நம்பன்! நலந்திகழும்
நாட்டுவிடு தலையினின்று;
காவலர் கன்றினர் ஆயினும் அஞ்சாதே
கடமைபுரி கருணைகொண்ட
பாவிரி கீர்த்தியெம் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (ச)

எங்கள் உயிரனன்! இந்தியத் தாய்செய்த
எண்ணிலுயர் தவத்துதித்தான்!
தங்கும் ஆ ிவினர் தனிமனம் அகலாத
சாத்வீக னைசீலன்!
பொங்கும் மங்களம் எங்கும் தங்கிடவே
புரியவரு மோகனப்பேர்ப்
பங்கம் இல்குணக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (ரு)

ஆடக வரைதொட்டே அழகார் குமரிவரை
அருளொழுகு நாடுதன்னில்
நாடு முயர்மக்கட் பிறப்பில் நடுவின்றி
ஞானமொரு சிறிதுமின்றிக்
கோடி யொருபிரிவார் தீண்டார் எனக்கூறும்
கொடுமையைக் கொலப்பிறந்த
பாட னுடைச்சிறப்புக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (சு)

துறவிக்கு வேந்தன் தரும்பென் றுரைத்தஉயர்
தொல்லுரையை உலகமெங்கும்
அறிவிக்க வந்தவன்! அறந்தவிர் ஆறென்றும்
அறியாதான்! அருமையாளன்!
குறைமிக்க ஆட்சியின் கொடுமை நனியாய்ந்து
கூர்த்தமதியோ ருவப்பப்
பறைவிக்கும் எம்பெரும் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (எ)

மால்பெற்ற தீமை அனைத்தும் துறந்தபெரு
மாண்புமுழு தும்மடைந்து
நூல்பெற்ற உண்மை நுணுகி உணர்ந்தரிய
நோன்புதலை மேற்றரித்து
நூல்பெற்ற ஆழி கரங்கொண் டுயர்ச்சிபெறு
நுவலரிய சீலனான
பால்பெற்ற இன்னுரைக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (அ)

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறுயிரம்
சொல்லாண்ட தூய்மையன்! தொன்மை அறஞ்
துரிசிலாத் திருமனத்தான்! [சொற்ற
வில்லாண்ட மெய்ம்மையன்! மேவா இடத்திலு
விரிந்தபுகழ் வீசுமேலோன்! [உம்
பல்லாண்டு வாழ்கென்று காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! (கூ)

வாழிய உலகெலாம் பல்லாண்டு! வாழ்க
நின்னறம் பல்லாண்டு!
வாழிய ஒருகதர் பல்லாண்டு! வாழ்க
நின்புகழ் பல்லாண்டு!
வாழிய நாட்டினம் பல்லாண்டு! வாழ்க
பெற்றதாய் பல்லாண்டு!
வாழிய அடியவர் பல்லாண்டு! வாழ்க
காந்திநீ பல்லாண்டு! (௰)




பு ரா ண வி நோ த ம்

(வைசம்பாயனன்)

திருவிளையாடற் புராணத்திலே பன்றிக் குட்டிக்குப் பால்கொடுத்த படலம், பன்றிக் குட்டிகளை மந்திரியாக்கிய படலம் என்ற இரண்டு படலம் இருக்கின்றனவே; அவற்றைச் சிவனடியார்களெல்லாம் நன்றாய்ப் படித்திருப்பார்கள். அதில் தாய்ப் பன்றியை இழந்த குட்டிப் பன்றிகள் பசித்து வருந்துவதைப் பொறுக்காது பரமசிவனே தாய்ப்பன்றியாகத் திருவவதாரம்செய்து பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தார். குட்டிகளெல்லாம் பாலைக் குடித்தது தான் தாமதம்; உடனே பன்றி முகத்தோடு ‘மனுஷாள்’ மாதிரி கைகால் எல்லாம் உண்டாகிப் பள்ளிக்கூடமெல்லாம் படித்து பாண்டிய ராஜாவுக்கு மந்திரிமார்கள் ஆகிவிட்டார்கள். அவர்களுக்குப் பழைய மந்திரிமார் வீட்டுப் பெண்களைக் கல்யாணமும் செய்தார்கள். பிறகு பிள்ளைகளும் பிறந்திருக்கும். ஆனால் எந்த முகத்தோடு பிள்ளைகள் பிறந்தன என்று என்னைக்கேட்டு விடாதீர்கள். எப்படி நாலுகாற் பிராணியாகிய பன்றி பால் குடித்தவுடனே மனுஷனாக மாறினதோ, அப்படித்தான் சகல காரியங்களும் ஆகாயத் தாமரைபோல நடந்திருக்கும். இதற்குமேல் இதைப் பற்றி ஆராய்ச்சிசெய்து மூளையைப் பறிகொடுக்க வேண்டாமென்று விட்டுவிட்டேன்.

மேற்படி புராணத்திலே இன்னொரு விநோதமிருக்கிறது. அதென்ன தெரியுமா! பொற்றாமரைக் குளத்திலே மீன், தவளை முதலியன கிடையாது அதற்குக் காரணம் திருவிளையாடற் புராணத்திலே என்ன சொல்லுகிறார்? நாரைக்கு முத்திகொடுத்தார் பரமசிவன். நாரை கேட்டுக்கொண்டபடி மேற்படி குளத்திலே மீன் தவளை முதலியன அறவே இல்லாமல் செய்துவிட்டார் பரமசிவன்; பார்த்தீர்களா? இன்றைக்கும் ஷை குளத்திலே மீன் வகையறாக் கிடையா. புத்தியை ஒருவன் நன்றாகச் செலுத்தி யோஜித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்காமற் போகாது. நம்மவீட்டில் கேணி இருக்கிறது. அதில் வெளியிலிருந்து தண்ணீர்வர இடமில்லை. வீட்டுத் தண்ணீர் மழைத் தண்ணீர் தான் நிரம்பியிருக்கிறது. அதைப் போலத்தான் பொற்றாமரைத் தீர்த்தத்திலும் வெளியிலிருந்து தண்ணீர்வர இடமில்லை. கோயிலில் உள்ள அபிஷேகத் தண்ணீரும் மழைத் தண்ணீரும் ஊற்றுத் தண்ணீருந்தான் இதில் சேருகின்றன. அப்படியிருக்க மீன் முதலியவை எப்படி வரமுடியும்? இதை இப்படிச் சொன்னால் தீர்த்த மகிமை கெட்டுவிடுமே என்றுதான் பரஞ்சோதியார் பச்சைப் புளுகாகப் பொருந்தப் புளுகிவிட்டார். ஆனால் இன்னொரு தீர்த்தம் இருக்கிறது. ‘எழு கடல் தீர்த்தம்’ அப்பப்பா! அதை நினைக்கும் போதே வாந்தியெடுக்க வருகிறது. அது ஒரு புண்ணிய தீர்த்தம்!



சென்னை டி. வி. வி.க்கும் எம். ஆர். வி.க்கும் நடந்த கிரிக்கட் விளையாட்டு. படத்தில் இரண்டு கட்சியினரும் காணப்படுகிறார்கள்.

—P.P.B.

சேர்ந்து வாழ்வதே
சிறந்த வலிமை!

பயம்!

(சோ. வி.)

அன்று பொழுது போகவில்லை. தேகாரோக்கியத்திற்குக் கடல் காற்று நல்லதாமே! பீச் ரோட்டில் நடந்து கொண்டே போனேன்.

எவ்வளவு தூரம் போனேன் என்று எனக்குத் தெரியாது. கடற் காற்றும் மன வோட்டத்திற்குச் சாந்தியளித்தது. நானும் நடந்துக்கொண்டே போனேன். ஏறக்குறைய திருவல்லிக்கேணி ரேடியோ ஸ்டாண்டு கூப்பிடு தூரத்தில் வந்து விட்டது.

காலும் வலித்தது.

பாதையின் பக்கத்திலிருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்தேன்.

நல்ல நிலா.

அடி வானத்திலே மெல்லிய பூப்பஞ்சை வைத்து ஜிகினா வேலை செய்தது மாதிரி வெண் மேகங்கள்— எனது வரையற்ற மனம்போல்—கடலையும் வானையும் பிரித்துக் கூட்டின.

மேலே சிதறுண்ட கனவுகள்போல், இலட்சியங்கள் போல், நட்சத்திரங்கள்.

பின்புறத்திலே கடல். ஆமாம்! கடல். எனது எண்ணங்களைத் தட்டிக் கொடுக்கும் பாவனையாக அலை எழுப்பி 'உம்' 'உம்' என்று ஒப்புக் கொள்ளும் கடல்.

மனதிற்குக் குதூகலம் வந்தது. கால்கள் நடப்பதற்கு மறுத்தன.

வீட்டிற்குச் சென்று என்னத்தைத் தூக்கி நிறுத்தப் போகிறேன்! இன்னும் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டுப் போனால் என்ன?

இருக்கும்பொழுது....................

பெரிய ஆஜானுபாகுவான வெள்ளைக்காரன், குறுகக் கத்தரித்து விடப்பட்ட தலை, அகன்ற நெற்றி, நீண்ட நாசி, குறுகக் கத்தரித்து விடப்பட்ட மீசை, மெல்லிய மனவுறுதியைக் காண்பிக்கும் உதடுகள், கிரேக்க சிற்பியின் கனவு போன்ற தேக அமைப்பு. மொத்தத்தில், புத்தியும் தேகபலமும் கூடிக் கலந்து பரிணமித்த மனிதன்.

அந்தக் கண்களில் எதிலும் ஆசை பூர்த்தியாகாத நோக்கு, அறியவேண்டிய அவா. ஐந்து நிமிஷம் சும்மாயிருப்பது சாவுக்கு நிகர் என்று உழைப்பில் நாட்டம் மிகுந்த தேகப் படபடப்பு.

பொதுவிலே, அந்தப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குத் தங்கள் இரத்தத்தையும் வாழ்க்கையையும் அர்ப்பணம் செய்தார்களே, அந்த நாடோடிகள், அந்த மகத்தான கூட்டத்தின் தனிக் குணம் இந்த வெள்ளைக்காரனின் ஒவ்வொரு சலனத்திலும் தெரிந்தது.



அண்ணாமலை யூனிவர்ஸிடி வைஸ்-சான்ஸிலரின் புத்திரனான ஹென்ரி ரங்கநாதம், ஆகாய விமானப் படையில் ஆபீஸராக முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்தியர்களுக்கு இந்தப் பதவி இப்பொழுது தான் கிடைத்திருக்கிறது.

—P. P. B.

வந்தவன் என் பக்கத்தில் நேராக வந்து உட்கார்ந்தான். அவனிடத்தில், அந்தமிடுக்கு, வெள்ளையரின் சாம்ராஜ்யப் பெருமையில் பிறந்த அந்த மிருகத்தனம், அது அவனிடம் காணப்படவில்லை.

கண்ணிலே நல்ல குணம்; கட்டுறுதியுள்ள உடல்.

எனக்கு அவனிடம் பேச வேண்டுமென்ற ஆசை. எப்படி யாரம்பிப்பது?

அவனுக்கு அந்தப் பிரச்னையே தோன்றவில்லை. சாதாரணமாக, இயற்கையாக மனிதனுக்கு மனிதன் பேசுவது மாதிரி என்னை வசப்படுத்தி விட்டான். புதிய, அன்னிய நண்பன் என்ற ஹோதா எங்களுக்குள் மறைந்து போயிற்று.

பேசுவது ஒரு தனிக் கலை. அது அவனுக்குத் தெரிந்து இருந்தது. சளைக்காமல் கேட்டுக் கொண்டே இருக்கலாம். பேசுவது என்றால் ஒரு மனிதனுடைய தனிப் பிரசங்கம் என்று நினைத்து விடுகிறார்கள் பலர். அவன் அப்படியல்ல. பக்கத்திலிருப்பவனைப் பதில் சொல்ல வைத்துச் சம்பாஷணைப்பந்தை உருட்டி விடுவதில் நிபுணன்.

அன்று பல சங்கதிகள் பேசிவரும் பொழுது நான் முதலில் நினைத்தது சரிதான் என்று பட்டது. அவன் ஒரு மகத்தான நாடோடி. துருவங்களிலிருந்து, அக்னிப் பிழம்பான பாலைவனங்கள் வரை உலகத்தில் அவனுக்குத் தெரியாத பாகம் கிடையாது. அது மட்டுமல்ல. நல்ல ரஸிகன். அவன் மனம் ஒரு இலட்சிய உலகில் வசித்து வந்தது. அதனால், ஒரு பூர்த்தியாகாத ஆசை, ஒரு ஆதர்சம், அவனைப் பிடர் பிடித்துத் தள்ளிக்கொண்டு சென்றது. அவன் இஷ்டப்பட்டாலும், அவனால் ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்க அவனது மனம் இடங் கொடாது.

"நீங்களும் பயந்திருக்கிறீர்களா?" என்று அவரது தேக அமைப்பை உற்று நோக்கினேன். அவர் சொல்வதை நம்ப முடியவில்லை.

அவரும் சிரித்துக்கொண்டு "நானும் பயந்திருக்கிறேன். நீங்கள் ஏன் சந்தேகப் படவேண்டும்?" என்று கொண்டே தன் பையிலிருந்து ஒரு சுங்கானை எடுத்து நிரப்பிவிட்டு, வாயில் வைத்துப் பற்ற வைத்துக் கொண்டு ஒரு இழுப்பு இழுத்து, புகையை மிகுந்த ஆர்வத்துடன் ரஸித்தார். கண்கள் ஏதோ யோசிப்பது போல் கனவு கண்டன.

"ஆமாம், நான் பயந்திருக்கிறேன். நான் சொல்லுகிறதைக் கேளுங்கள். பயம் தைரியசாலிக்கும் அசையாத நெஞ்சு படைத்தவனுக்கும் தான்வரும். கோழைத்தனம், பயமல்ல. பயம்

தில் தோன்றும் ஒரு நடுக்க நினைப்பு. உள்ளத்தையே, உயிரையே அப்படிக் குலுங்கி விடுகிறது. பயம் சாவு நிச்சயம் என்று நாம் எதிர்பார்க்கும் சமயத்தில் தோன்றுது. ஆமாம். தெரிந்த அபாயத்தில் பயம் தோன்றுது. அது எதிர்பாராத சம்பவங்களில், இன்னதென்று அறியமுடியாத ஒரு சக்தியின் சூழ்ச்சியில், மிகவும் சாதாரணமான தொந்திரவுகளில் வந்துவிடும். குண்டுக்கும், கத்திக்கும் அஞ்சாதவன், நள்ளிரவில் திடீரென்று பிசாசைக் கண்டால், பயம், புத்தியை வலிமையைச் சிதற அடிக்கும் பயம் இன்னதென்று தெரிந்து கொள்வான்."

"எனக்குப் பயம் என்றால் இன்னதென்று தெரியும். ஒரு தடவை பட்டப் பகலில்—அது பத்து வருஷங்களுக்கு முந்தி—அனுபவித்தேன். மற்றொருதரம் போன டிசம்பரில் ஒரு இராத்திரியில் அனுபவித்தேன்.

"ஆமாம்! நான் எத்தனையோ தடவை எமனுடன் போராடியிருக்கிறேன். மனிதனுடைய மிருகத்தனத்தின் பேரில் எனது சக்தியால் வெற்றி பெற்று இருக்கிறேன். எத்தனை சண்டைகள்! தரையிலும் கடலிலும்! அவைகளில் ஒரு தடவையாவது பயந்தேனு!

"நான் பத்து வருஷங்களுக்கு முன் ஆப்பிரிக்காவிற்குச் சென்றிருந்தேன். அங்கெல்லாம் உயிர் துச்சம். சாவிற்கு எப்பொழுதும் தயார். அதுதான் மனிதனுக்கு வரும் தீங்கில் எல்லாம் லேசானது என்று நினைக்கிறார்கள் அந்தப் பிரதேசத்திலிருப்பவர்கள். அங்கு அந்தப் பாதுகாப்பற்ற இரவிலே கவலையற்ற தூக்கம். எங்களுக்கு எங்கள் நாட்டிலே அப்படியல்ல. ஒவ்வொரு விநாடியும் செத்துக் கொண்டிருக்கும் கோழைத்தனம். நீங்களே பாருங்களேன், மேல்நாட்டு அரசியல்களின் சந்தேகத்தை! ஆயுதம்! படைகள்! ஆயுதம்! சந்தேகம்! சந்தேகம்...

சற்று மௌனம்.

"அப்பொழுது நடந்ததுதான். நான் தெற்கு ஸஹாரா பாலைவனத்தைக் கடந்து விட்டேன். உலகத்திலுள்ள பிரதேசங்களிலே அது பார்க்கவேண்டிய இடம். பாலைவனம் என்றால், இந்தக் கடற்கரை ஓரத்திலே கோவணம் மாதிரி நீண்டு கிடக்கிறதே இப்படியிருக்குமென்று நினைத்துக் கொண்டீர்! அது மணல் சமுத்திரம். எங்கு பார்த்தாலும், மணல், மணல், மணல். திடீரென்று ஒரு பேய்க்காற்று வந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவ்வளவுதான். இவ்வளவு நேரம் செத்துக் கிடந்த மாதிரி இருந்த மணல் அலைமேல் அலையாக எழும்பிக் குவியும்.

"அந்த எல்லையற்ற மௌனத்திலே மணல் மலைகள் பெரியதும் சின்னதுமாக இருக்கும். அதில் ஏறி ஏறி இறங்க வேண்டும், பாலை வனத்தைக் கடக்க வேண்டுமானல், அங்கே நிழலா?"

"குதிரைகள் முட்டளவு மணலில் புதைந்து புதைந்து தான் நடக்கும். களைப்பு என்பதற்கு அர்த்தம் அந்தக் குதிரைகளுக்குத் தெரியும். அதில் ஏறிச் செல்லவேண்டிய விதிபடைத்த மனிதனுக்குத் தெரியும்.

"அப்பொழுது நாங்கள் இருவர் சென்றோம். கூட நான்கு ஒட்டகங்கள் எங்களுடைய சாமான்களுக்கு, அதன் ஓட்டிகள். எங்களால் பேசமுடியாது. அவ்வளவு நாவறட்சி; கானலினுலும், களைப்பினுலும். மூச்சுத் திணறுகிறது. திடீரென்று எங்களில் ஒருவன் பயந்து ஓலமிட்டான். நாங்கள் திடுக்கிட்டு நின்றோம். ஆமாம்! திடுக்கிட்டு விட்டோம்! அந்தப் பிரதேசத்திலே வழி தவறிய பிரயாணிகளுக்குத்தான் அந்தக் காரணம் சொல்ல முடியாத நிகழ்ச்சி தெரியும்.

"எங்கோ கிட்டத்தான், எவ்வளவு கிட்டவென்று எங்களுக்குத் தெரியவில்லை, ஒரு முரசொலி! அதற்குத்தான் பாலையின் முரசு என்று பெயர். முதலில் காதுகளைத் துளைக்கும்படியாக, மனது இடிந்து சுக்கலாகப் போகும்படியாகக் கேட்டது. சற்றுநேரம் ஒன்றுமில்லை. பிறகு அந்தச் சாவின் அறிகுறியான, பயங்கரமான மௌனத்தை வெருட்டி எல்லையற்ற வானத்தை நிறைத்து முழங்கியது அந்த முரசொலி.

"ஒட்டகைக்கார அராபியர்கள் 'ஐயோ! மரணம் நெருங்கிவிட்டது' என்று கூவினார்கள்.

"அவர்கள் கூவி முடியவில்லை, என்னுடைய நண்பன் குதிரையிலிருந்து விழுந்தான்; சூரிய கிரணத்தினால் அடிக்கப்பட்டு. அவனை உயிர்ப்பிக்க வெகு கஷ்டப்பட்டோம். முரசொலி, டம், டம், டம் என்று காதைத்தொளைத்தன. இறந்த எனது நண்பனைக் கூர்ந்து கவனித்தேன். பயம் தோன்றியது.

"பயம்!

"நெஞ்சை அப்படியே அமுக்கி உயிரைக் கசக்கிவிடும், பயம்! அதற்குச் சந்தேகமில்லை. பயந்தான்.

"சுற்றி நாலுபுறமும் மணற்குன்றுகள். ஜன சஞ்சாரத்திற்கும் எங்களுக்கும் இடையே இருநூறு மைல். எனது நண்பன் இறந்து போனான். நான் எப்பொழுதோ?..............."

இண்டோ - கம்மர்ஷியல் பாங்கி,

லிமிடெட்.

சென்னை, மதுரை, மாயவரம், ஈரோடு,
கும்பகோணம், காரைக்குடி, திருவாரூர், விருதுநகர்.

பஜார் பிராஞ்சு:—260, சைனுபஜார் ரோட், சென்னை.

சப் ஆபீஸ்கள்:—சீயாழி, சிதம்பரம்.

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் நடத்தப்படும். நிபந்தனைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

107, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. சென்னை.

S. N. N. சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.

"அந்த முரசு—அதன் காரணம் என்ன?" என்று நான் கேட்டேன்.

"பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். காரணம் என்னவென்று சொல்லுவது? தூரத்திலுள்ள மேளங்களின் சப்தம் காற்றில் கலந்து எதிரொலிக்கிறது என்கிறார்கள். அங்கிருக்கும் ஒரு விதப் பூச்சியின் ஓலை சலசலப்பதின் சப்தம் என்கிறார்கள். உண்மையில் அது கானல் இருக்கிறதே அதுமாதிரி ஒலியின் சப்த மயக்கம். பிறகுதான் ஸையன்ஸ்படி அது எந்தக் காரணத்தினால் உண்டானது என்று தெரிந்துகொண்டேன். பயந்தது நிச்சயம்...........

"இன்னொரு தடவை பயந்தேனே அது பிரான்ஸ் தேசத்துக் காடுகளில்.

"அன்று, இரவு வெகு சீக்கிரம் வந்து விட்டது. அவ்வளவு மேகம். நல்ல மழைக் காலம். அப்பொழுது எனக்கு வழிகாட்டியாக ஒரு குடியானவன் வந்தான். வானத்திலே மேகங்கள் ஒன்றையொன்று பிடர்பிடித்துத் தள்ளிக்கொண்டு ஓடின. காற்று சண்டைக்கு வந்து விட்டது. மரங்கள் தலைவிரித்தாடின. மரக்கிளைகள் பரிதாபகரமாக, பயங்கரமாக, முக்கி முனங்கிக் கொண்டு உறுமின. என்ன கம்பளிச் சட்டை போட்டுக்கொண்டு இருந்தும் குளிர் எலும்பைத் தாக்கியது.

இனிமேல் செல்லமுடியாது என்று கண்டு, பக்கத்திலிருந்த ஒரு காவல்காரன் குடிசைக்கு அழைத்துச் சென்றான். அந்தக் காவல்காரன் இரண்டு வருஷத்திற்கு முன் ஒரு திருடனைச் சுட்டுக் கொன்றவன். அதிலிருந்து அந்தத் திருடனுடைய பேய் வந்து அவனைத் தொல்லை செய்வதுமாதிரி அவனுக்கு ஒரு பிராந்தி—பயம். அவனுடன் அவனுடைய இரண்டு புத்திரர்களும் அவர்களுடைய மனைவிகளுடன் வசித்து வருகிறார்கள். இது அந்தக் குடியானவன் எனக்குப் போகும்பொழுது கூறினான்.

"இருள் அதிகமாகி விட்டதால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. கடைசிபாகத் தூரத்திலே சற்று வெளிச்சம். நெருங்கினோம். ஒரு குடிசை. கொஞ்சம் பெரியதுதான். வழிகாட்டி கதவைத் தட்டினான். உள்ளிருந்து பயத்தினால் திக்கு முக்கடித்த ஒரு குரல், யார் என்று கேட்டது. குடியானவன் பதில் சொல்லக் கதவு திறந்தது. உள்ளே சென்றோம்.

"நான் உள்ளே கண்ட காட்சியை ஒரு நாளும் மறக்க முடியாது. அந்த அறையின் நடுவில் பஞ்சுப் பெட்டி போல் நரைத்த ஒரு கிழவன் கையில் குண்டு போட்ட துப்பாக்கியுடன் நின்றான். இரண்டு முரடர்கள் கையில் கோடாரியை ஏந்திய வண்ணம் நின்றார்கள். சற்று தூரத்தில் வெளிச்சம் படாத இருட்டுப் பாகத்தில் இரண்டு பெண்கள் சுவற்றுப் பக்கமாகத் திரும்பி முழங்காலில் நின்று கொண்டு இருந்தார்கள்.

"திடீரென்று கிழவன் பெண்களைப் பார்த்து எனது சௌகரியத்திற்கு ஒரு அறையைச் சுத்தம் செய்யச் சொன்னான். அவர்கள் அசையவில்லை.

"மறுபடியும் கிழவன் சொல்லுகிறான், 'முன்பு ஒரு மனிதனைக் கொன்றேன். போன வருஷம் அவன் வந்தான். இன்னும் அவன் வருவான்!

"அந்தக் குரலைக் கேட்டதுமே எனது மனம் கிடுகிடுத்துப் போய்விட்டது. இரத்தம் அப்படியே உரைந்து போய் விட்டது.......................இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமலிருக்க முயன்றேன். முடியவில்லை.

"கதவுப் பக்கத்தில் ஒரு சடை நாய் படுத்துறங்கிற்று. அதற்கு இந்தப் பயம் தெரியுமா?

வெளியே சண்டமாருதம். மழையும் காற்றும் சொல்ல முடியவில்லை. திடீரென்று 'சட்டச் சடசடா' என்று ஒரு இடி முழக்கம். கண்ணை வெட்டும் மின்னல். சாத்தான் உடனே பிரசன்னமாயிருந்தாலும் ஆச்சரியப் பட்டிருக்க மாட்டேன்.

"அங்கிருந்தவர்கள் எல்லாம் ஏதோ மந்திர சக்தியில் கட்டுப்பட்டவர்கள் போல, எதையோ எதிர்பார்ப்பவர்கள் போலக் கவனித்துக்கொண்டு இருந்தார்கள். வெகுதூரம் நடந்ததினால் களைப்பு இவர்களைத் தேற்றுவதற்கு எடுத்துக் கொண்ட சிரமம் எல்லாம் சேர்ந்து எனக்குத் தூக்கத்தை வருவித்தது. படுக்கப்போக எழுந்தேன். அப்பொழுது அந்தக் கிழக் காவல்காரன், ஒரே பாய்ச்சலில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, 'அதோ வந்துவிட்டான்! வந்துவிட்டான்! காத்திருக்கிறேன்!' என்று கூக்குரலிட்டான். உடனே பெண்களும் ஓடிப்போய் முன்போல் சுவருடன் ஒட்டி நின்றார்கள். கிழவனுடைய புத்திரர்கள், மறுபடியும் கோடாலியைத் தூக்கிக்கொண்டார்கள். அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றேன். அப்பொழுது அந்த நாய் விழித்துக்கொண்டு பயங்கரமாக ஊளையிட்டது. அது ஏறக்குறைய மனிதனுடைய குரல்மாதிரி இருந்தது...........

"எல்லாரும் அந்த நாயையே கவனித்தோம். அசையாமல் நின்றுகொண்டு, எங்கள் கண்களுக்குத் தெரியாத எதையோ எதிர்நோக்குவது போல் தெரிந்தது. அதற்கு மயிர் எல்லாம் சிலிர்த்து நின்றது."


"எனக்கு வழி காட்டிவந்த குடியானவன், 'நாய்க்குத் தெரிகிறது, நாய்க்குத் தெரிகிறது!" என்று கூப்பாடு போட்டான். அந்தத் திருடனைக் கொல்லும்பொழுது அந்த நாயும் கூட இருந்ததாம்."

"என்னை யறியாமலே பயம் என்னைப் பிடிக்கத் தொடங்கியது........அங்கிருந்தவர்கள் பயத்தால் எதையோ எதிர் நோக்கி யிருந்தார்கள்.........அந்த நாய் எதையோ பார்க்கத்தான் செய்தது.... ஒருமணி நேரம் இப்படி ஊளையிட்ட வண்ணமாக இருந்தது. அதன் குரல்! அதை நினைக்கும் பொழுதே குடல்

ஸயன்டிபிக்
தங்க ஆபரணங்கள்

(உண்மையான தங்கத்திற்குப் பதிலானது)

ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளாலும், அரசாங்க மந்திரிகளாலும், மற்றும் பிரக்யாதி பெற்றவர்களாலும் புகழப்பெற்றது.



(காட்லாக் இனாம்.)

தி ஸயன்டிபிக் கோல்ட் பாங்கிள்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஹெட்டாபீஸ்:—43, பைராகிமடம் தெரு, தபால் பெட்டி 203, மதராஸ்.

நடுக்கம் எடுக்கிறது. காரணமில்லாத அடக்கமுடியாத பயம் என்னைப் பிடித்தது. எதற்குப் பயம்? எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் ஏதோ பயப்படக்கூடியது ஒன்று இருக்கிறது என்று தெரிந்தது.

"என்ன செய்வது என்று எனக்குத் தெரியாமல் திக்பிரமை பிடித்தவர் போல், ஒரு சின்னச் சத்தத்திலும் நெஞ்சு வெடித்துப்போகும் நிலைமையில் இருந்தோம். அந்த நாய் அறையைச் சுற்றிச்சுற்றி மோப்பம் பிடித்தது....... எங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

"என்கூட வந்த வழிகாட்டிக்கு இதைத்தாங்க முடியவில்லை. திடீரென்று எழுந்து ஓடி நாயைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவை யடைத்து விட்டான்.

"அதற்கு அப்புறம் நிசப்தம்! இந்த நிசப்தம் எங்களுக்கு இன்னும் அதிகப் பயப்பிராந்தியை உண்டு பண்ணிற்று.

திடீரென்று ஏதோ ஒன்று சுவற்றருகில் நிற்பதாகத் தோன்றிற்று. தொடுவது போல், திறக்க முயற்சிப்பது போல் தெரிந்தது. பிறகு.......மறுபடியும் தெரிந்தது. இப்பொழுது ஜன்னலருகில். ஜன்னலில் ஒரு தலை தெரிந்தது. பிரகாசமான கண்கள்! ஏதோ ஒரு குரல் ஈனஸ்வரத்தில்.

"சமயற்கட்டின் பக்கம் ஏதோ அமளி. அந்தக் கிழவன் சுட்டான். அவன் புத்திரர்கள் ஓடி வந்து கதவை யடைத்து அதன் மீது மேஜையைச் சாத்தினர். அந்தத் துப்பாக்கிச் சத்தத்தில் எனது உயிரே போய்த் திரும்பியது. பயம்! உளறி யடித்துக்கொண்டு நின்றேன்.

"அன்று இரவு முழுவதும் அப்படித்தான். விடியும் வரைக் கதவைத் திறக்க எங்களுக்குத் தைரியம் வரவில்லை.

"வானம் வெளுத்தது.

"சிறு வெளிச்சம் சற்று தைரியத்தைக் கொடுத்தது. வெளியே சென்றோம்.

"அந்த நாய்தான். வாயில் குண்டு பட்டுச் சுவற்றடியில் இறந்துகிடந்தது."

அந்த வெள்ளைக்கார நண்பர் சற்று மௌனமாக இருந்தார். பிறகு,

"மனப்பிராந்தி இருக்கிறதே அதைப் போன்ற பயம் வேறு கிடையாது" என்றார்.


மஞ்சுகோவிற்கு இந்திய மந்திரி

திரு. ஏ. எம். நாயர் இப்பொழுது ஜப்பானியப் பிரஜை. முன்பு திருவாங்கூரில் இருந்து வந்தார். தனிமாகாணமான மஞ்சுகோவில் இப்பொழுது அவரை ஜப்பான் நீதிமந்திரியாக்கியிருக்கிறது.

பிளாக்குகள், ரப்பர் ஸ்டாம்புகள்

ஒரே முறை பரிட்சியுங்கள்.











ஸ்பார்ட்டன் அண்டு கம்பெனி,

156, பிராட்வே, சென்னை. O.



வாடா மல்லிகை

(சோ. விருத்தாசலம்.)

அவள் பெயர் ஸரஸூ; ஒரு பிராமணப் பெண். பெயருக்குத் தகுந்தது போல் இருக்கவேண்டும் என்று நினைத்தோ என்னவோ பதினேழு வயதிற்குள்ளேயே சமூகம் அவளுக்கு வெள்ளைக் கலையை மனமுவந்து அளித்தது. அவள் கணவனுக்குக் காலனுடன் தோழமை ஏற்பட்டுவிட்டால், அதற்குச் சமூகம் என்னசெய்ய முடியும்?

ஸரஸூ ஒரு உலாவும் கவிதை. இயற்கையின் பரிபூரண கிருபையில் மலரும் பருவம். காட்டிலே ரோஜா யாருமின்றி உதிர்ந்தால் அதைப்பற்றிப் பிரமாதமாக யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நந்தவனத்திலே, மனதின் களிப்பில் குலாவக்கூடிய இடத்திலே, தனிமை என்ற விதி ஏற்பட்டால் அதைப்பற்றிப் பரிதபிக்காமல் முடியுமா? இயற்கையின் போக்கைத் தடைசெய்து கொண்டு அவள் தியாகம் செய்கிறாள்; அவள் பரிசுத்தவதி என்று சமூகம் களித்துக்கொண்டு இருப்பது அதன் ரத்த வெறிதான். அவளுக்கு இந்த சமூகத்தில் உரிமையே கிடையாதா? அவள் நிலைமை என்ன? பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பிரஜையின் நிலைதானா? சமூகம் என்ன செய்ய முடியும்? வேதம் சொல்லுகிறது, தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது என்று பேத்திக்கொண்டு இருக்கும் மடையர்களிடம்..........?

ஸரஸூவிற்கு இதெல்லாம் தெரியாது. அவள் ஒரு ஹிந்துப்பெண். வாயில்லாப் பூச்சி. பெற்றோரையும், புருஷனையும், முன்னோரையும் நம்பித்தான் உயிர் வாழ்ந்து வந்தாள். பெற்றோர் கலியாணம் செய்துவைத்தார்கள். புருஷன் வாழ்க்கையின் இன்பத்தைச் சற்றுக் காண்பித்துவிட்டு, விடாய் தீருமுன் தண்ணீரைத் தட்டிப் பறித்த மாதிரி எங்கோ மறைந்துவிட்டான். அவனை இந்த உலகத்தில் இனிக் காண முடியாது. பிறகு,............கண்டால் தான் என்ன? அது போகட்டும். முன்னோர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி வைத்துவிட்டுக் கணவன் சென்றவிடத்தில் இருக்கிறார்கள். ஸரஸூ பெற்றோரைத் தட்டியது கிடையாது. பிறகு முன்னோரை எப்படி எதிர்க்க முடியும்? அவளும் பெண்தானே. அச்சம் என்பதுதான் அவளுக்கு அணிகலன் என்று சமூகம் சொல்லுகிறதே. பிறகு அவள் வேறு என்னவாக இருக்க முடியும்? அவள் உயர்தரப் படிப்பு படித்த பெண்ணா? நாலு விஷயங்களைத் தானாக ஆராய்ச்சி செய்துகொள்ள அவளுக்குத் திறன் ஏது? இயற்கையின் தேவை கட்டுக் கடங்காமல் மீறி ஒரு மிருகத்தின் முறட்டுத் தைரியத்தைக் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் அவளைச் சமூகம் தூற்றுவதற்குத் தயார்.

எந்த அமைப்பிலேயும் விதிவிலக்குகளான சிறுபான்மையோர் கஷ்டப்படத்தான் வேண்டும் என்று தத்துவம் பேசலாம். தத்துவம் நன்றாகத்தான் இருக்கிறது! சரஸாவின் உணர்ச்சிக்கு உரிமையில்லை—அவள் விதிவிலக்கு.

ஸரஸா எப்பொழுதும் மாடியின்மேல் காலை ஏழுமணிக்கே தலையை உலர்த்த வருவாள். அப்பொழுதே ஸ்நானமாகிவிடும். பெற்றோரின் பாசம் அவளைச் சமணமுனி மாதிரி ஒரு பெண்மையின் கோரமாக்கத் துணியவில்லை. அவள் அதை எடுத்திருந்தாலும் கவலைப்பட்டிருக்க மாட்டாள். வாழ்க்கைக்கே வசதியில்லாம லிருக்கும்பொழுது சிகை போவதுதானா பிரமாதம்?

அவளைப் பார்த்தால் யாருக்கும் கண் கலங்கும். அவள் கண்களிலே ஒரு நிரந்தரமான துயரம், போக்க வழியில்லாத துன்பம் குடிகொண்டிருக்கும். அவள் சிரிக்கத்தான் செய்கிறாள். குதூகலமாகப் பேசத்தான் செய்கிறாள். இவை யாவிற்கும் பின் சோகந்தான் நிலவும்.

பிரம்மச்சாரியாக, உண்மையான பிரம்மச்சாரியாக நீ இருந்து பார்த்திருக்கிருயா? வேறு ஒரு உயர்ந்த இலக்ஷியம் உனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, உன்னை அப்படியே விழுங்கி விடாவிட்டால் பிரம்மச்சரியம் உன்னைக் கொன்று விடும். உன்னை மிருகமாக்கி உனது உள்ளத்தைப் பேயாகச் சிதற அடித்து விடும். ஆனல் கட்டாயத்தின் பேரில் இப்படிக் கன்னிகையாகக் காலங் கழிக்க வேண்டிய நிலைமை?

அன்று ஸரசுவின் தம்பி சோமுவிற்குச் சாந்திக் கல்யாணம். முதலிலே ஸரசுவிற்குத் தாங்க முடியாத குதூகலம். தங்கள் வீட்டில் விசேஷம் வருகிறது என்று தான். தம்பியின் மீது இருந்த ஒரு ஹிந்துத் தமக்கையின் அளவு கடந்த பாசத்தினல்.

அன்று பகல் வந்தது...............

அன்று இரவு வந்தது. ஊரில் இருள். வீட்டில் ஒளி.

வீட்டில் ஒளி; ஸரஸுவின் உள்ளத்தில்?

அவளுக்கு என்னன்னவோ நினைவுகள் எல்லாம் குவிந்தன. அப்படித்தானே மூன்று வருஷங்களுக்கு முன், முதல் முதலாக அவருக்கு...........என்னன்னவோ தோன்றின. நேரமாக நேரமாக, அவள் மனதில், அந்த மூன்று வருஷத்திற்கு முந்திய சந்தோஷகரமான, வாழ்க்கையை ஓர் இன்ப ஒளியாக்க முயன்ற அந்த இரவின் ஒவ்வொரு சிறு சம்பவங்களும்..............அவர் முதலில் என்ன கூச்சப்பட்டார்! பிறகு அந்த உரிமை என்ற தைரியம் தானே................இவ்வளவு சீக்கிரம் அவள் வாழ்க்கை இருட்டி விடும் என்று அப்பொழுது கண்டாளா! என்னவோ சாஸ்வதமான அழியாத நித்திய வஸ்து வென்றல்லவோ...................

சோமுவையும் அவன் மனைவியையும் அழைத்துக் கொண்டு சென்றனர். கூச்சலும் அமளியும் அவளுக்குப் பொறுக்க முடியவில்லை.

அவளுக்குத் தன்னை மீறிய கட்டுக் கடங்காத ஒரு ஆவேசம் அவளைப் பிடர் பிடித்துத் தள்ளியது. பின்புறம் புழக்கடைக்குச் சென்று விட்டாள்.

நானும் பின் தொடர்ந்தேன். அவள் நிலை எனக்கு ஒருவாறு தெரிந்தது.

அவள் மீது ஒரு பரிதாபம். அதனல்....

புழக்கடையில் ஒரு பெண் தேம்பிக் கொண்டு இருந்த சப்தம் கேட்டது.

நெருங்கினேன். அவள்தான்.

"ஸரஸா!"

பதில் இல்லை.

இன்னும் நெருங்கித் தோளில் கையை வைத்தேன். உணர்ச்சியற்ற கட்டை போல் இருந்தாள்—உடல் தேம்புவதினல் குலுங்கியது.

"ஸரஸா! நான் இருக்கிறேன் பயப்படாதே" என்றேன்.

"நான் ஒரு ஹிந்துப் பெண்" என்று கூறிவிட்டுச் சடக்கென்று உள்ளே சென்று விட்டாள்.

நான் திகைத்து நின்றேன். ஹிந்துப் பெண் என்றால் உயிர்வாழ உரிமையில்லையா?...............

நான் எவ்வளவு நேரம் நின்றேனே! மறுபடியும் அவள் வந்தாள்.

"ஸரஸா! என்னை மன்னித்துவிடு. நான் கூறியது வேறு. நீ அர்த்தம் பண்ணிக்கொண்டது வேறு. நான் உன்னை மணம் செய்துகொள்ளுகிறேன்" என்றேன்.

"கொள்கைக்காக நீர் தியாகம் செய்துகொள்ள முயலுகிறீர். அது வேண்டாம்—மிஞ்சினல் நான் உமக்குப் போகக் கருவியாகத்தான், உமது தியாகத்தின் பலிபீடமாக நீர் கருதுவீர். அது எனக்கு வேண்டாம். நான் காதலைக் கேட்கவில்லை. தியாகத்தைக் கேட்கவில்லை. நான் தேடுவது பாசம்.......

"அது என்னிடம் இருக்கிறது;" என்றேன். இவளிடம் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை.

"அப்படியானல் திருமணம் வேண்டாம்.......பாசம் இருந்தால் போதும்," என்று சொல்லித் தலைகுனிந்தாள்.

"என்ன ஸரஸா இப்படிச் சொல்லுகிருய்—இரகஸியம் பாபம் அல்லவா. கலியாணம் இதை நீக்கிவிடுமே!"

"எனக்கு உமது தியாகம் வேண்டாம். உமது பாசம் இருந்தால் போதும்!"

"நீ ஒரு பத்தை!"

"உமது தியாகத்திற்கு நான் பலியாக மாட்டேன்—அதில் எப்பொழுதும் உமக்கு இந்தக்காலத்து நன்மதிப்பு ஏற்படும். தைரியசாலி என்பார்கள். அதை எதிர்பார்க்கிறீர். நான் பத்தையல்ல—நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன்!" என்றாள்.

எனது மனம் கலங்கிவிட்டது. வெளியேறினேன். ....

மறுநாள் அவள் பிரேதம் கிணற்றில் மிதந்தது. அதன் மடியில் "நான் எதிர்பார்த்தபடியே" என்று எழுதிய ஒரு நனைந்த கடிதாசி இருந்தது.

ஸோவியத்தும் சர்வதேச சங்கமும்

ஸோவியத் அரசாங்கம் சர்வதேச சங்கத்தின் அங்கமாக வெகு சீக்கிரம் சேர்ந்துவிடும் என்று படுகிறது.

பிரிட்டிஷ், பிரஞ்சு, இத்தாலிய அரசாங்கம் ஒவ்வொரு தலைநகரிலும் இருக்கும் தங்கள் பிரதிநிதிகளை அந்த அரசாங்கங்களில் அபிப்பிராயத்தை அறிந்து எழுதும்படியாக கட்டளை இட்டிருக்கிறது.

திருப்பூர் கலர் சேலைகள்

ஆரஞ்சு, பச்சை, சிகப்பு, நீலம் (Blue), மஞ்சள், ரோஸ், கனகாம்பரம், கத்தரிப்பூ, கோக்கி, சகுந்தலா, வைலட், புரௌன் (காபி கலர்), சந்தனம், சிலேட், செமண்ட் முதலான பல கலர்களால் உடல் பூராவும் போடப்பட்டதும், ஓரத்திலும் முந்தியிலும் பார்வைக்கு மிக நன்ருய் இருக்கும்படியான அழகான மூன்று கலர்களில் (F. T. C.) அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை 8 கஜம் சேலை 1-க்கு ரூ. 5-0-0.
„ 6 கஜம் „ 3-12-0.

(வி. பி. சார்ஜ் வேறு)

எம். வி. கே. கதர் ஒர்க்ஸ்,
திருப்பூர், (தென் இந்தியா).

இயற்கை வனப்பு

(வத்திலக்குண்டு - ராமய்யா)

"ஆமாம், உங்கள் ஊரிலே அந்த ஒற்றைத் தெருவிலிருந்து ஆற்றுக்குப் போகும் பாதையில் ஒரு பெரிய பூவரசமிருந்ததே அது இன்னுமிருக்கிறதா? நான் என் மைத்துனன் கலியாணத்திற்கு வந்திருந்த பொழுது பார்த்தது இன்னும் ஞாபகமிருக்கிறது. மேற்கே லோகல் பண்டு சத்திரத்திற்குப் பின்னாலிருக்கிற கருப்பணசாமி கோவில் எப்படியிருக்கிறது? இன்னும் கூட ஜனங்கள் ராத்திரிகளில் அங்கே போய்ப் 'பயந்து கொள்ளுகிறார்'களா?"

என்னால் பதில் சொல்லி முடியவில்லை. ஊரின் ஒரு சிறு அடையாளத்தைக் கூட விடாமல் வரிசையாகக் கேட்டுக் கொண்டேயிருந்தார் நண்பர். நானும் பின் தங்காமல் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தேன். ஆனாலும் அவருடைய உற்சாகத்தை என்னால் தொடர முடியவில்லை.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன் தான் எனக்கு அவருடன் அறிமுகம் ஏற்பட்டது. அதுவும் ரொம்ப வேடிக்கையான விதமாக.

டெல்லி சாந்தினி சவுக்குக் கருகில், கடைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தேன். எதிரில் வந்த மனிதனைக் கவனிக்கவில்லை. திடீரென்று நெற்றியில் ஒரு முட்டு. கண்ணுக்குள் நட்சத்திரங்கள் பளிச் பளிச் சென்று மின்னி மறைந்தன.

அந்த அவசரத்திலும் 'பார்க்கவில்லை. ஐயாம்ஸாரி' என்று தமிழும் இங்கிலீஷும் கலந்து மன்னிப்புக் கேட்டேன். ஆனால் அடுத்தவினாடி என் தவறு தெரிந்து விட்டது. முன்னிலுமதிக அவசரத்துடன் "தேக்காநஹி; மாப்கீஜியே" என்றேன் ஹிந்தியில்.

என்னுடன் மோதிக் கொண்ட மனிதனும் அவசரம் அவசரமாக 'மாப்........' என்று ஆரம்பித்தவன், சட்டென்று "பாவாயில்லை. நானும் கவனிக்காமலே வந்து விட்டேன்" என்று தெளிவான தமிழில் முடித்தான்.

உடனே அங்கு, அந்த மோதலினால் எழுந்த உணர்ச்சிகள் யாவும் மறைந்து விட்டன. நோவு கூட மறந்து போய் விட்டது எனக்கு. ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தோன்றும் கண்களுடன் ஒருவரை யொருவர் பார்த்தோம்.

இருவருக்கும் அறிமுகம் தொடர்ந்தது. சகஜமாக சொந்த ஊரிலிருந்து தொலை தூரத்தில், முற்றிலும் வேறான பாஷை பேசும் மனிதர்களிடையில் இருதமிழர்கள் தற்செயலாகச் சந்தித்தால் எழும் உணர்ச்சிகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. நெடுநாள் பிரிந்திருந்த ஒரு அண்ணன் அல்லது தம்பியை மறுபடி பார்ப்பது போலிருக்கும். ஆனால் அதில் ஆச்சரியக்கலப்பிருக்கும்.

நான் டெல்லிக்குப் போய் இரண்டு தினங்கள் தாம் ஆயின. அது வரை ஒரு தமிழனைக் கூடச் சந்திக்க எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவேயில்லை. நகரில் ஆயிரக்கணக்காகத் தமிழர்கள் பல பாகங்களில் இருக்கிறார்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர்களில் ஒருவனையாவது நான் காணவேயில்லை.

தற்செயலாக நேர்ந்த ஒருசிறு சம்பவம் எனக்கு அந்தச் சந்தோஷத்தையனுபவிக்கும் பாக்கியத்தைக் கொடுத்தது. அதைவிடாமல் இருவரும் முழுவதும் அனுபவித்தோம்.

நண்பர் சொந்த மாகாணத்தை விட்டுப் போய்ப் பதினைந்து வருஷங்களுக்கு மேலாகிவிட்டன வென்று சொன்னார். மறுபடி இந்தப் பக்கம் திரும்பி வாவேயில்லை. ஆகையால் தமிழ்நாட்டைப் பற்றிய விவரங்களைத் தனியாகச் சொல்லக்கூடிய ஒருவனைக் கண்டவுடன் மட்டுக்கு மீறிய மகிழ்ச்சி அவருக்கு.

சகஜமான,—எந்த வூர்—நீயார்—நான் யார்களெல்லாம் நடந்தன. நண்பரும் நானும் ஒரே தாலுக்கா வாசிகள் என்றறிந்தவுடன் எங்கள் மகிழ்ச்சி மேல் பஞ்சமத்தை யடைந்துவிட்டது. நண்பரின் கண்களில் புதிய ஒளி.

நண்பர் என்னிடமிருந்து சேதிகள் கேட்க ஆவலுடனிருந்தார். ஆனால் அவர்தான் அதிகம் பேசினார். அவ்வளவு உற்சாகம். ஆனால் அவர் கேட்ட கேள்விகள் பெரும்பாலும், அவர் சொந்த ஊரைப்பற்றியும், தாலுகாவைப் பற்றியும்தான்.

"எங்கள் ஊருக்கு நீங்கள் சமீபத்தில் எப்போது போயிருந்தீர்கள்? எத்தனை நாள் தங்கினீர்கள்? ஊரைச்சுற்றிப் பார்த்தீர்களோ! உங்களுக்கு இதெல்லாம் ருசியுண்டோ? நம் ஜனங்களுக்கு இந்த விஷயத்தில் ருசி குறைவுதான். ஒரு ஊருக்குப் போனால் தங்கள் காரியத்தைக் கவனித்துக்கொண்டு திரும்புவதுடன் சரி. அவர்களையும் மீறி அவர்களது கண்கள் அந்த ஊரின் அழகுகளை, இயற்கை யமைப்புகளை அகப் பிரக்ஞையில் பதிவு செய்கிறதே அவ்வளவுதான். அதற்குமேல் பிரக்ஞையுடன் வெளிப்படையான அபிருசியுடன் அதை யெல்லாம் பார்த்துத் தெரிந்துகொண்டு களிக்க ஆர்வமே கிடையாது.................இல்லை; ரொம்பக் குறைவு என்று சொல்லுகிறேன்"

இவ்வளவும் முகவுரை. இதற்கு மேல்தான் தகவல் சேகரிப்பு. "எங்கள் ஊர்க்கோவில் எப்படி யிருக்கிறது? அந்த மேல்புறம் மதிலில் வெடிப்பு இருந்ததே, சரிப்படுத்தி விட்டார்களோ? ஆற்றில் பாலத்தடியில் இருந்த மருதமரம் இன்னுமிருக்கிறதா?

"ஆற்றின் வடகரையில் பிள்ளைப் பூச்சிப் படித்துறைக்கு எதிரில் இருந்ததே பரமசிவம் பிள்ளை தோப்பு. இப்பவும் இருக்கிறதோ! போன தடவை வெள்ளம் வந்தபோது ஏதோ சேதம் என்று பத்திரிகையில் படித்தேன். அதுவும் பூராத் தகவல் இல்லை. இன்னும் இருக்கிறதா? அந்தப் பாக்கு மரங்கள்? ஏன்? விழுந்துவிட்டனவா? நான் சிறு பையனாகவிருக்கும்பொழுது அந்தப் பாக்கு மரங்களில் ஏறி ஊஞ்சல் ஆடுவோம்!

"அந்தக் கொன்றை மரம், அதில்தான் மரக்குரங்கு விளையாடுகிறது. அதிலிருந்து மணலில் குதித்து ஓட ரொம்ப சௌகரியம். ஊம்..........."

பெருமூச்சு.

அதற்குமேல் ஊரில் ஜனங்களைப் பற்றி அவர்கள் வாழ்க்கையைப் பற்றி ஜனனமரண விவரங்கள். அவர் இருக்கிறாரா? இவர் மகன் பர்மாவில் எங்கேயோ இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ராஜீய இயக்கங்கள் ஊரில் பிரதிபலிக்கின்றனவோ? அவற்றின்

பலா பலன்கள். மாறுதல்கள். மறுபடி ஊரைப்பற்றி.

அங்கிருந்து எங்கள் ஊர். "ஓ! நான் நாலைந்து தடவை வந்திருக்கிறேன். ஊருக்கு மேற்கே சாலையிலிருந்து ஊருக்குத் திரும்புமிடத்தில் இருந்ததே கல் மண்டபம். அது என்ன மண்டபம்? நவராத்திரிக் கடைசி நாள் அம்மன் "அம்பு போட"ப் போய் இறங்கும் மண்டபம். இன்னுமிருக்கிறதா? இடிந்து கிடக்கிறதா? அடாடா!"

நான் மறுநாளே டெல்லியை விட்டுப் புறப்பட வேண்டியதாகிவிட்டது. ஆனால் அதற்குள் நண்பரை மூன்று தடவை சந்தித்தேன்.

அது முதல் என் மனத்தில் ஒரே சிந்தனைதான். நம்முடைய கிராமங்களின் உருவம் மாறிக் கொண்டேயிருக்கிறது. இந்த மாற்றத்தை, வளர்ச்சியை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனாலும் அவற்றின் அழகைப் படம் பிடித்து வைத்துவிடலாம்.

ஊரைவிட்டுத் தொலை தூரத்திலுள்ள நமது தமிழ்ச் சகோதரர்களுக்கு இந்த அழகுப் படங்களை அடிக்கடி அனுப்பிக் களிப்பூட்டலாம். நமது கண்முன் நடக்கும் மாறுதலை நாம் நேருக்கு நேர் காணமுடியவில்லை. கண்டும் உணராமலிருக்கிறோம். நாமே இந்த மாதிரிப் படங்களை அடிக்கடி கண்டு, நமது பழைய ஞாபகங்களை, இளமையில் கழித்த சில சந்தோஷகரமான நாழிகைகளை, ஞாபகங்களை, நினைத்துக் களிக்கலாம்.

அப்படிப்பட்ட படங்களைப் பிடிப்பது எப்படி? தற்சமயம் நமது நாட்டில் அந்த மாதிரியான இயற்கை அழகுகளை, நிலப் பரப்புகளை வர்ணம் தீட்டிப் படம் எழுதும் சைத்திரிகர்கள் பெருகவில்லை. அவர்கள் வரும் வரை இந்த அழகுகள் காத்திருக்கவும் மாட்டா.

தற்சமயம் உள்ள நிலைமையில் எனக்கு ஒரே வழிதான் தோன்றுகிறது. இவைகளை எழுத்துச் சித்திரங்களில் சேமித்து வைத்து விடலாம்.

உலகில் உஷ்ணப் பிரதேசத்தில் உள்ள நாடுகளிலெல்லாம், நமது தேசம்தான் இயற்கை வனப்பில் சிறந்து விளங்குகிறது. இது நமது சொந்தச் சொத்து. நமது பிதுரார்ஜிதம். இதை நாம் காப்பாற்றிவைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று தமிழில் இந்த அழகுகளை உயிர் ததும்பும் கவிதையாகக் கொடுக்க வல்ல கவிஞர்களுங் குறைவாயிருப்பது நமது துர்ப்பாக்கியமே யாகும். ஆனால் இன்று அழகான, கம்பீரமான தமிழ் நடை எழுதும் மறு மலர்ச்சி எழுத்தாளர்கள் ஏராளமாகத் தோன்றி விளங்குகிறார்கள். அவர்கள்தாம் இந்தக் கடமையை மேற்கொள்ள வேண்டும்.

சிறுகதைகளில், சாதாரண வியாசங்களில், நாவல்களில், அங்கங்கே ரஸமாக இந்தக் காட்சிகளைப் புகுத்திவிடுவது சிரமமல்ல. அதோடு அவர்களது கதைகளுக்கும் "ஸ்தல வர்ணம்" ஏற்படும்.

தீண்டாமை

மகாத்மா காசியில் பெண்கள் கூட்டத்தில் பேசியது.

சமயம் என்றால் உணவுத் திட்டத்தையும் வரையறுத்து உயர்வு தாழ்ச்சிகளையும் கொடுத்துக் கொண்டு இருக்கும் ஒரு சமூகக் கட்டுப்பாடு என்று நாம் நினைத்திருக்கிறோம். அதைப் போன்ற பரிதாபகரமான மடமை வேறு ஒன்றும் கிடையாது. பிறப்பும் சிற்சில ஆசாரங்களை அனுஷ்டிப்பதும் மனிதனது உயர்வையோ தாழ்ச்சியையோ நிதானித்து விடாது. குண சம்பத்துத்தான் மனிதனது உயர்வை எடுத்துக் காட்டும் ஒரு அளவுகோல். மனிதனைச் சிருஷ்டிக்கும் பொழுதே கடவுள் இம்மாதிரி பிரித்து வைத்துவிடவில்லை. எந்த மதமாவது இம்மாதிரியாகப் பிரித்துவைக்க முயற்சித்தால் அதைத் தழுவிப் பயனில்லை. அது கடவுளுக்கு விரோதமானது. சத்தியத்திற்கு விரோதமானது;—சத்தியந்தான் கடவுள். சத்தியத்தின் வடிவாகவும், நியாயத்தின் வடிவாகவும், தர்மத்தின் வடிவாகவும் இருக்கும் கடவுள் ஒரு நாளும் நமது கோடிக்கணக்கான மக்களில் ஐந்தில் ஒரு பாகத்தைத் தீண்டத் தகாதவர்கள் என்று ஒதுக்கிவைக்க உடன்படார். ஆதலால் நீங்களும் இம்மாதிரியான எண்ணத்தை ஒழித்துவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தீண்டாமை என்பது அசுத்தமான செய்கையைப் பொறுத்ததுதான். அது நமக்குள்ளும், அங்கிருக்கிற மாதிரி, இருக்கத்தான் செய்கிறது. எல்லோரும் ஒவ்வொரு சமயங்களில் செய்யும் வேலைகளைப் பொறுத்தமட்டில் தீண்டாதவனாகத்தான் இருக்கிறோம். சுத்தம் செய்து கொண்டால் போய்விடுகிறது. எந்தத் தொழிலும் ஒரு மனிதனையோ பெண்ணையோ நிரந்தரமாகத் தீண்டாதவனாக்கி விடாது. நாம் எல்லோரும் பாவம் செய்தவர்கள்தாம். நமது ஆத்ம பொக்கிஷங்களான, கீதை, பாகவதம், துளஸிதாஸ் ராமாயணம், எல்லாம் ஒரே முகமாக, கடவுளின் நாமத்தைச் சொல்லி அவனைச் சரணாகதி யடைந்தால், பாபங்கள் நீங்கி விடுதலை யடைவோம் என்று கோஷிக்கின்றன. அது நமக்கு மட்டுமல்ல. எல்லா மதங்களுக்குப் பொதுவான உண்மை.

இந்தத் தீண்டாமை விலக்கிற்கு ஒரு சரியான காரணம் காண்பிக்கிறேன். உலகத்திலுள்ள ஜீவராசிகளில் எல்லாவற்றிலும் வித்தியாசம் இருந்து வருகிறது. மாட்டையும் பூனையையும் தனித்தனியாக வித்தியாசப்படுத்திக் காண்பிக்கவில்லையா? தீண்டாதார் என்ற தனி வகுப்பு, அது ஒரு தனி ஜாதி என்றால் அதற்கும் மற்ற மனித வகுப்பிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தாம். அவர்கள் மனிதனுக்குக் கீழ்ப்பட்ட வகுப்பு என்று சொல்வதற்குக் காரணம் என்ன? மனிதனுக்குக் கீழ்த்தரமான ஜீவராசிகள் எல்லாம் தீண்டாதார் தாமா? பிறகு ஏன் இந்த அநியாயம்? எங்கிருந்து தான் முளைத்தது இந்தப் பயங்கரமான அதர்மம்? உங்களுக்குள் எவருக்கேனும் இந்தப் பாபம் இருந்தால் அதைநீங்கள் உடனே தொலைத்து விட வேண்டும்.

அநேக நூற்றாண்டுகளாக வந்த இந்தப் பாபத்தைத் தொலைக்க நீங்கள் ஹரிஜனங்களுடன் பழகவேண்டும். அவர்களுடைய இல்லங்களுக்குச் செல்லவேண்டும். அவர்களுடைய குழந்தைகளை உங்களுடையது போல் பரிவுடன் தழுவ வேண்டும். அவர்களுக்கு வாழ்க்கையின் வசதிகள் இருக்கிறதா என்று நீங்கள் சென்று கவனிக்க வேண்டும். இவர்களுக்காக கதர் உற்பத்தி செய்ய—அதை அணிந்து கொள்ள, நீங்கள் சபதம் செய்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சிறிதாவது நீங்கள் ஹரிஜனங்களுக்காக உண்மையில் பாடுபடுகிறவர்களாவீர்கள். கடைசியாக ஹரிஜன நிதிக்கு உங்கள் தகுதிக்குத் தக்கபடி பண உதவி செய்ய வேண்டும். அந்த நிதியின் முழு நோக்கம் தீண்டாதார் என்ற பெயரே இல்லாமல் ஆக்குவதுதான்.

பாண்டியன் பாவை

(ராய. சொ.)

அறத்திற்கு இருப்பிடமான இந்திரப் பிரஸ்தம் என்னும் பதியினின்றும் விஜயன் என்ற ஒரு கட்டழகன் யாத்திரை புறப்பட்டான். அவனது பிரயாணம் தெற்கு நோக்கி ஆரம்பிக்கப்பட்டது. அவன் பழமையும் பெருமையும் வாய்ந்த பலப்பல ஊர்களில் தங்கி ஆங்காங்குள்ள அழகுகளை யெல்லாம் கண்டு களித்துக் கொண்டே வந்தான். ஊர் சுற்றப் புறப்பட்ட, முகில்போன்ற நிறமுடைய அப்பார்த்தன், வடநாடு கடந்து, தமிழ் நாட்டின் எல்லையாகிய திருவேங்கட மலை புகுந்து, தொண்டை நாட்டின் காஞ்சிப்பழம்பதி கண்டு, சோணாடேகிப் பொன்னம்பலம் திருவரங்கம் முதலிய மூதூர்களைக் கண்டு களித்து, தன் குற்ற முணர்ந்தவுடன், “பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன், யானே கள்வன் ;....கெடுக என் வாணாள்” எனப் பதறிக் கதறி மயங்கி வீழ்ந்த பாண்டியன் ஆண்ட பசுந் தமிழ்நாடு சேர்ந்தான் ; தலைநகராகிய மதுரை மாநகர் நண்ணினான்.

சந்தனங் கமழும்—தென்றல் தவழும்—தமிழறிஞர் மல்கிய மதுரை நகரில் ‘சித்திர வாகனன்’ என்னும் பாண்டியன் செங்கோல் செலுத்துகின்றான். தன்கூடல் புகுந்த நமது கதாநாயகன், பாண்டிய மன்னனை அரண்மனையிற் கண்டான். அப்போது விஜயன் பூண்டிருந்த கோலம் துறவுத் திருக்கோலம். அக்கோலங்கண்டு வணங்கிய வழுதியை வாழ்த்தினான் அர்ச்சுனத் துறவி. ‘அடிகள் ஈண்டெழுந்தருளிய தென்னை?’ என்றான் மன்னன். “கன்னியைக் கண்ணுற்று ஆட வந்தனம்” என்று விடை கொடுத்தான் சந்நியாசி. ‘கன்னியாகுமரிக் கடலாட வந்தோம்’ என்பது பொருள். ஆனால் பாண்டியன் கன்னியை வேட்டையாடப் போவதை அறிந்தேதான் அவ்வாறு கூறினனோ என்னவோ அந்த வஞ்சகத் துறவி.

அத்துறவியைத் தமது விருந்தினனாக ஏற்று, நமது சித்திராங்கத பாண்டியன், தனது அழகிய அரண்மனைப் பூஞ் சோலையினடுவே அவனுக்கு இருக்கை யீந்தான். அந்த, “காலையும் மாலை தானும் இல்லதோர் கனகக் கற்பச் சோலை”யிலே உண்டு இளைப்பாறி யிருந்தான் கபட சந்நியாசி. அதுகாலை, மின்னற் கூட்டங்கள் போலத் தோழியர் பலர் தன்னைச் சூழ்ந்துவர, விற்பிடித்த மன்மதன் தனக்கு முன்னே போந்து தன்னை வணங்கிவர, ஒளிபொருந்திய வயிர மணிகள் பதித்த நூபுரங்கள் ‘கணீர் கணீர்’ என்று ஒலிபரப்ப, இரண்டு பெரிய கருவிழிகளும் உருண்டுருண்டு ஓடிக் காதை அளந்து கொண்டிருப்ப, வளையணிந்த தோள்கள் குலுங்க “ஆதரித்து அமுதில் கோல்தோய்த்து அவயவம் அமைக்குந் தன்மை, யாதெனத் திகைப்பதல்லால் மதனற்கும் எழுத வொண்ணா” வனப்பெலாம் ஒருங்குதிரண்ட பாண்டியன் கன்னி, விளையாடுங் கருத்தோடு அவ்விரிமலர்ச் சோலையின் இடையே புகுந்தாள். கண்டான் நமது வேடத்துறவி. உடனே என்ன ஆனான்!

“‘பச்!’ என்ற திருமுகமும், ‘சே’ இதழும், ‘வெண்’ நகையும், ‘பார்வை’ என்னும் நச்சு அம்பும், அமுத ஊற நவிற்றுகின்ற ‘மடமொழி’யும் நாணும் பூணும், கச்சின்கண் அடங்காத ‘கனதன’மும் ‘நுண்இடை’யும் கண்டு, சோர்ந்து, ‘பித்தன்’ போல் ஆயினன் ; அப்பெண் கொடி மெய்நலமுழுதும் பெறுவான் நின்றான்” ஆகிய நமது துறவி. அர்ச்சுனத் துறவி இவ்வாறு பித்துப் பிடித்தவன்போல் மயங்கி நிற்கின்றான். நமது தமிழ் மன்னன் மகளாகிய மெல்லியலாள், தன் தோழிகளுடன் நறுமணமலர் பல கொய்து விளையாடி அச்சோலையில் இவள் விளையாடற்காக அமைக்கப்பட்ட ஓர் செய்குன்றை—மண்மேடையை அடைந்தாள். பார்த்துக் கொண்டே யிருந்தான் துறவி. அவனால் சகிக்க முடியவில்லை. “தேன் பிறந்த சொல்லாளைச் சேராமல் நாம் வீணுக்கு ஏன் பிறந்தோம் பூமியில்” என்று எண்ணிவிட்டான்.

துறவி, தன் துறவு வேடத்தைக் களைந்தான். தவ வேடத்தைத் துறந்து தன்னுடைய இயல்பான வடிவத்தைக் காண்பிக்கும் ஒன்றே அந்நங்கையை இழுக்கப் போதியது என அவன் உணர்ந்தான். ஆம்! என்ன ஐயம்? நமது கதாநாயகன் மெய் வடிவு கண்டால் யாரே அதன் வயப்படாதிருக்க முடியும்? அப்பொழுதுதான் அலர்ந்த நீலத் தாமரையை வென்ற திருமுகமும் மாதரார் வெட்டும் விழியை எதிர்த்துப் பாய்ந்து வீழ்த்தும் ஒளிவிடுங் கண்களும் அழகிய கிராப்புத் தலையும் அகன்ற மலைபோன்ற மார்பும் நீலமேனியில் தூய வெண்கதராடையும் “ஆடவர் பெண்மையை அவாவுதோள்”களும் தோன்ற, இளங்கட்டுடலுள்ள ஓர் பேரழகன்—“வில்லாளரானார்க் கெல்லாம் மேலவன்” இவனே என்று ஐயமற உரைக்கக் கூடிய தோற்றத்தோடு, பொன்னைப் பழிக்கும் நிறத்தொடு பொலியும் பூக்களைச் சுமந்து நிற்கும் ஓர் குளிர்ந்த செண்பகமரத்தின் அடியிலே, மின்னலையொத்த மேனியுடைய நுண்ணிடையாள் விழிகட்கு நேராக அவள் அப்படியே சொக்கத்தக்க மாதிரியில் நின்றான் ஓர் இளைஞன்.

பறவைகள் திரியும் தடாகங்கள் கொண்ட—வண்டுகள் பாட—மயில்கள் ஆட—கிளிகள் தமிழ் பயில—வளம் மல்கும் சோலையுள் செய்குன்றின் நின்ற சிறிய அணங்கு, தன் கூரிய கண்களால் கண்டாள், ஆண்டு நின்ற அக்குமரனை. கண்டதும் காதல்! இருவர் கருத்தும் ஒன்றையே நாடி விட்டன. மனம் ஒன்றுபட்டால் பிறகு என்னவேண்டும்? உள்ளக் கருத்தை அறிவிக்கும் திருப்பணியைக் கண்கள் ஏற்றுக்கொண்டன. கண்கள் தங்கு தடையின்றி உறவாடி விட்டன. “கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின்” பிறகுத் தாமதமேன்?

உண்மைக் காதலுக்கு மதமேது? வகுப்பேது? மொழியேது? பிற எது? அவன் வடநாட்டான்; இவள் தமிழ்ப் பெண். இருவரும் ஒருவரை யொருவர் இன்னார் எனக்கூட அறியமாட்டார். தங்கள் தலைவியின் நிலைமையை அறிந்த தோழிகள் தலைவியைத் தனிவிடுத்து விலகிவிட்டார். பிறகு என்ன! சொல்லவும் வேண்டுமா? களவியற் சேர்க்கை—கந்தர்வ மணம்! கரைகாணா வின்பம்! கருத்தொத்த இருவர் கலப்

யைத் தடைசெய்ய வல்லார்யார்? பிறகு தான் ஒருவரையொருவர் அறிந்துக் கொண்டனர். அறிந்ததும் இருவர்க்கும் எல்லையில்லாப் பெரு மகிழ்ச்சி. அவனே பாண்டு மைந்தன்! இவளோ பாண்டியன் பாவை! "கண்ணே! நேரமாகி விட்டது; நீபோ! சேடியர் தேடுவர்." என்றுரைத்தான் விஜயன். உடனே பிரிவு. பிரிவுக் கலக்கம் பற்றி விட்டது.

சென்றாள் சித்திராங்கதை. சேடியரிடம் நிகழ்ந்த அனைத்தையும் ஒளியாது உரைத்து விட்டாள் அவள். அதுவரை அவ் இன்பம் இன்னதென அறியாதிருந்த அழகி, தான்பெற்ற புது இன்பத்தின் பின்னே நேர்ந்த பிரிவைச் சகிக்கலாற்றாளாகி விட்டாள். அவளால் விஜயனை நீங்கிய தனிமையைப் பொறுக்க முடியவில்லை. நடக்கும் செயலையும் இழந்தாள் நங்கை; தோழியரால் எந்தப்பெற்றுக் கன்னிமாடம் சேர்க்கப்பெற்றாள். ஆண்டுத் தோழியர் அணையிற் கிடத்தினர். அவள் உணவு எடுக்கவில்லை; உறக்கம் கொள்ளவில்லை; இரவு முழுமையும் பேய் பிடித்தவள்போல் வாய்விட்டுப் புலம்பிக் கொண்டேயிருந்தாள். தாதிகள் இரவெல்லாம் மருங்கே யமர்ந்து தேற்றிக் கொண்டேயிருந்தனர். எனினும் அவள் துயர் தணியவில்லை. இரவு முறைப்படி கழிந்தது. செவிலித் தாயர் விடிந்ததும் பாண்டியன் பால் இந்நிகழ்ச்சியை இயம்பி விட்டனர்; 'எழில் விஜயற்கு ஈடழிந்தாள் மலர்க்காவில் நமது கன்னி' என உரைத்தனர். அது கேட்ட தமிழர் கோமன், 'அப்படியா? விஜயன் ஈண்டெழுந்தருளியது நமது தவப் பயனே' என இறுமாந்தான். இனிவ் வாறாக, அவன் நிலையென்ன?

காதலியை உடனே பிரிந்த பார்த்தன், கரைகாணாத் துயர்க்கடலுள் ஆழ்ந்தான். "வழுதி திருமகள் தொடுத்த மையலினால், வடிவமும் தன்மனமும் வேறாய் பொழுது விடிவளவும் மதன் பூசலிலே கருத் தழிந்து, பூவாம் வாளி உருத கொடும் புண்வழியே, ஊசி நுழைத்தெனத் தென்றல் ஊர, ஊர, விழிதுயிலா விஜயனும் அவ் விபுதருடன் தயிலுணர்ந்து, விதியும் செய்தான்." இரவெல்லாம் அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவன் தூங்குபவன்போல் கிடந்தான்; விடிந்ததும் எழுந்தான்; துறவி வேடத்தைக் கட்டிக்கொண்டு, காலைக் கடனை முடித்துத் தொலைத்தான்; முறைப்படி பாண்டியன் அவைக்களஞ் சென்றான்; பித்தன்போல் அங்கு வீற்றிருந்தான். "பஞ்சவரில் நடுப்பிறந்தோன், பஞ்சவன்பேரவை எய்திப் பஞ்சபாண வஞ்சகன் செய் வஞ்சனையால், மதிமயங்கியிருந்துழி, அம்மதுரை வேந்தன், சஞ்சரிக நறுமலர்த்தார்த் தனஞ்சயன் என்று அறிந்து, எழுந்து, தழீயிக் கொண்டு, ஆங்கண், அஞ்சல்! இனி உனக்குரியாள் யான் பயந்த கடற்பிறவா அமுதம், என்றான்" அவ்வளவுதான்! பாண்டியன் திருமண ஓலை போக்கினான்.

"அண்டர்பிரான் அளித்த சிலையாண்டகையை அலங்காரம் அனைத்தும் செய்து, மண்டபம் ஒன்றினில் அறுகால் வண்ண மணிப் பலகையின் மேல் வைத்தார்." பூமடந்தை யனையாளைப் பூட்டிய வெண்தாள மணிப்பூண்களாலே, நாமடந்தை நிகராக்கி நாயகன் தன் வலப்பாகம் நண்ணுவித்தார்.

"இந்திரனும் சசியுமென—இறையோனும் உமையும் என—எம்பிரானும் செந்திருவும் என—காமதேவும் இரதியும் என," தருமன் தம்பியும், பாண்டியன் பாவையும் திருமணங் கண்டனர். கலப்பு மணக் காதலர், "நோக்கிய கண் இமையாமல் நோக்கி நோக்கி, நண்ணிய மென்புலவியிலே நொந்து நொந்து, தேக்கிய செங்கனி யிதழ் ஆரமுது உண்டு உண்டு, சேர்த்தியகை நெகிழாமற் சேர்ந்து சேர்ந்து, இன்பம் துய்த்துப் பெருவாழ்வு வாழ்ந்தார்.

நாணிக் கண் புதைத்தல்

ராய. சொ.

நாணிக்கண் புதைத்தல் என்பது ஒரு அகப் பொருள் துறை. அது பழைய துறைகளுள் ஒன்று. நாணி—கண்—புதைத்தல் என்ற மூன்று சொற்கள் கொண்ட ஒரு தொடர் அது. நாணி—வெட்கப்பட்டு, கண்—கண்ணை, புதைத்தல்—மூடிக் கொள்தல். நாணிக்கண் புதைத்தல் என்பதற்கு வெட்கி விழியைப் பொத்திக் கொள்தல் என்பது பொருள். இது பெண் மகளின் செய்கையாகவே கருதப்படுகிறது.

தன் காதலனைக் கண்டு நாணிக் கண்ணைப் பொத்திக் கொள்ளுகின்றாள் பெண். காதலியின் நாணங்கண்ட காதலன் அவளைக் கண்ணைத் திறக்கச் செய்கின்றான். அவன் கண்ணை மூடிய காதலியை நெருங்குகின்றான்; அவளைப் பலபடப் புகழ்கின்றான்; அன்னாள் எழிலை அலங்கரிக்கின்றான்; அவள் மாட்டுத் தான்கொண்ட காதலை—தனது பேரன்பை அவள் உணர உரைக்கின்றான்; "ஏ! அன்பே! காதற்கனியே! கரும்பே! பொன்னே! மணியே! நீ விழி திறப்பதில் தாமதம் நேருமானால் நான் உயிர் தரியேன்! கண்ணைத் திற!" எனக் கெஞ்சுகின்றான். காதலியின் கண் பொத்திய மெல்லிய வளைக் கரத்தைத் தன் கையினால் திறக்கின்றான். இம்முறையில் காதலன் வாயிலாகக் கண் புதைத்த நங்கையை நோக்கிப் பாடப்படுவது நாணிக்கண் புதைத்தல் என்னும் துறை. இக் கருத்துக் கொண்ட துறைப் பாக்கள் இரண்டும் அதனைக் காட்டும் சித்திரமும் அடுத்த பக்கத்தை அலங்கரித்து நிற்கின்றன.


காதலே உயிர்!

அன்பர்களே!

இந்தியச் சட்டசபைத் தேர்தல் சமீபித்துவிட்டது. நீங்கள் யாருக்கு வோட்டுப் போடப்போகிறீர்கள்?

"சந்தேகமென்ன? காங்கிரஸ்காரருக்கே"

என்று சொல்லுங்கள்.



நாணிச் சண் புதைத்தல் துறை.

ராய. சோ.

(உரிமை ஆக்கியோனுடையது.)

தோன்று புகழுடைக் காந்தி யறம்வளர்
தோகையரே!
ஈர்ந்து விடுபெனை என்று கருதிகொல்?
எல்வினைகள்
சேர்ந்த கரங்கொடு தீய விடஞ்சேர்
சினவடிவேல்
போன்ற பெருவிழி பேணி இறுகப்
புதைத்ததுவே!

பேணி அருந்தவக் காந்தி யறம்புரி
பெண்அணங்கீர்!
மாணும் அவனறம் போற்றும் அடியனை;
மாமழைக்கண்
காணில், உமக்குக் கருது குறையெது?
சண்திரவீர்!
நாணிக் கருங்கயற் கண்புதை கையெடும்!
நாரியரே!

காந்தி கலித்துறை யந்தாதி.

கொள்ளைக்காரன் துணிகரம்!

ராத்சைல்டைக் கொள்ளையடிக்க முயற்சி

கருப்புக்கைச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவனிடமிருந்து ராத்சைல் பிரபுவிற்கு திடீரென்று ஒரு கடிதம் கிடைத்தது. அதில் 30400 பவுன் கொடுக்கா விட்டால் அவரையும் அவர் குமாரத்தியையும் கொன்று விடுவதாயும். அந்தத் தொகையை ஒரு ஹோட்டலில் குறிப்பிட்ட இடத்தில் வைத்துவிட வேண்டும் என்றும் கண்டிருந்தது.


உடனே போலீஸ் துப்பறிபவரான ஜான் புராதரோ என்பவரிடம் இந்தக் கேஸ் ஒப்புவிக்கப்பட்டது. முதலில் இருவரும் ஒன்று கூடி யோசித்துப் பணம் சேர வேண்டிய தினத்தைச் சற்று ஒத்திப் போடும்படி பத்திரிகையில் ஒரு குறிப்பு வெளியிட்டார்கள். கருப்புக்கைச் சங்கம் அம்மாதிரிச் செய்யாது என்ற பதில் வந்தது.

இருந்த மாதிரியில் கொள்ளைக் கூட்டம் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி விடுவார்கள் போலிருந்தது. புராதரோ பிரபுவையும் அவருடைய மகளையும் ஜாக்கிரதையான போலீஸ் காவலில் காப்பாற்றி வந்தார். திடீரென்று 500 பவுன் மட்டும் கொடுத்தால் போதுமானது என்று ஒரு கடிதம் வந்தது. இம்மாதிரி திடீரென்று தொகை குறைந்ததினல் குற்றத்தைக் கண்டு பிடிக்க ஒரு நம்பிக்கைக்கு இடமிருந்தது.

அந்தக் கடிதம் எழுதியவனைப் பிடிக்க ஒரு தந்திரம் செய்தார். பண முடிப்புப் போன்ற ஒரு பொய் முடிப்பு ஒன்றைத் தயாரித்து அந்த இடத்தில் வைத்து விட்டு, வரும் பொழுது பிடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார். ஆனல் அந்த ஹோட்டலில் குறிப்பிட்ட அறையைச் சோதித்ததில், அங்கிருந்த அல்லது அறையின் சமீபத்திலிருந்து ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்தது. ஏனென்றுல் அந்த அறையைச் சுற்றி மறைந்து நிற்பதற்கு வசதியில்லை.

இந்தச் சமயத்தில் ஒரு மின்சார இஞ்சினியர் ஒரு தந்திரம் செய்யக் கற்றுக் கொடுத்தான். ஹோட்டல் சொந்தக்காரரையும் கைக்குள் போட்டுக் கொண்டு, சுவற்றில் ஒரு மின்சார மணியை வைத்தார்கள். அதை நாற்காலியுடன் சேர்க்கப் பட்டிருந்ததால், யாரும் அதில் உட்கார்ந்தவுடன் மணியடிக்கும்படியாகச் செய்யப்பட்டிருந்தது.

இதுவுமல்லாமல் அந்தப் பணமுடிப்பின் மீது ஒரு விதமான மருந்தைத் தடவி யிருந்ததால் அந்தப் பவுடர் குற்றவாளியின் கையில் ஒட்டிக்கொள்ளும். பவுடரானது தண்ணீர் பட்டவுடன் சிவப்புக் கறையாக மாறிக் கையில் ஒட்டிக் கொள்ளுவதால் வெகு எளிதாகக் கண்டு பிடித்து விடலாம் என்று நம்பியிருந்தார்கள்.




சென்னை வைத்திய கலாசாலை பரிசளிப்பு விழாவில் மேஜர் ஜெனரல் ஸர். பிராங் கோனர், ஐ. எம். எஸ். தலைமை வகித்தார். படத்தில் அவரும் மற்றவர்களும் நிற்கிறார்கள். —P.P.B.

இதே மாதிரிச் செய்து வைத்து விட்டு அவர்கள் பக்கத் தரையில் காத்திருந்தார்கள். மணிச் சப்தம் கேட்டது. துப்பறிவர்கள் ஓடிச் சென்றார்கள். அங்கு ஒரு வாலிபன் கையைப் பின்புறமாக வைத்துக் கொண்டு வந்தான். உடனே புராதரோ அவனைக் கைது செய்து சோதித்ததில் அவன் தான் குற்றவாளி என்பதை நிரூபிக்கும் சாட்சியங்கள் அகப்பட்டன. அவன் ஹென்ரிக் கிமெஷ் கோர்டன் என்ற ஜெர்மனியன். நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். 'காஸனேவாவும் லாட்யூடும்' என்ற புத்தகத்திலிருந்து இதைக் கற்றுக் கொண்டானும். அவனுக்குப் பதினைந்து மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.


கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை

ரங்கவதி என்ற இடத்திலிருந்த ஒரு கோவில் பூசாரிக்குப் பணம் வெகு அவசியமாக இருந்தது. அதற்காக ஒரு தந்திரம் செய்தான். கருங்கல்லில் சிறு சிறு கருப்புப் புள்ளிகள் தோன்றுவது சகஜம். ஆனல் அவன் ஜனங்களின் மூடநம்பிக்கையைத் தனக்கு உபயோகப் படுத்திக் கொள்ளுவதற்காக, தெய்வத்தின் கோபத்தால் இம்மாதிரியான ஒரு வைசூரி கல்லில் தோன்றுகிறது. கோவிலுக்குக் காணிக்கை செலுத்திப் பூஜை செய்தால் தெய்வத்தின் கோபம் தணிந்துவிடும் என்று தண்டோரா அடித்துத் தெரிவித்தான். ஆனல் அவனுக்குப் பணம் கிடைக்குமுன் இம்மாதிரியான மோசடிக்காக அவனைப் போலீஸார் கைதுசெய்து விட்டார்கள்.



கல்கத்தா மேயர் நளினரஞ்ஜன் சர்க்காருக்கு சென்னை சேம்பர் ஆப் காமர்ஸ் ஒரு விருந்து கொடுத்தபொழுது எடுக்கப்பட்டது. படத்தில் சர்க்கார், திவான் பகதூர் கோவிந்ததாஸ், சதுர்ப்புஜதாஸ், கான்பகதூர் ஆடம் ஆஜி மகமத் சேட், குமாரராஜா முத்தையச் செட்டியார், எஸ். எம். சௌத்திரி, ராவ் பகதூர் கோபால மேனன் முதலியோர் காணப்படுகிறார்கள்.

—P. P. B.



பார்ஸிலோனாவில் தோணிப் பந்தயம்.

—S. P. B.



ஜெர்மனியிலிருக்கும் நியூரம்பர்க்கில் தேசப் பயிற்சி விளையாட்டிற்குச் செல்லும் ஊர்வலத்தின் காட்சி. —S. P. B.




சென்னை ரிப்பன் கட்டிடத்தில் கல்கத்தா மேயருக்குச் சென்னைக் கார்பொரேஷன் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தார்கள்.
படத்தில் சர்க்கார். மேயர் முதலியோர் காணப்படுகிறார்கள். —P. P. B.




பாங்கர், கே. வி. எ. எல். ராம. அழகப்பச் செட்டியார், பார்-அட்-லா-வைச் சென்னைத் துறைமுகத்தில் வரவேற்கும் காட்சி. —P. P. B.



தென்னாப்பிரிக்காவில் இருக்கும் சுதேசக் குடிகள். நாகரிகத்தின் வலையில் விழாத மக்கள். —N. I. A.



பெல்ட் நதியின்மீது ஒரு ரயில்வேப் பாலம் கட்டப்படுகிறது. அதன் ஒரு பாகம் படத்தில் தெரிகிறது. —S. P. B.



பிரக்யாதிபெற்ற காப்டன் குக்கின் வீட்டை மறுபடியும் மெல்போர்னில் கட்டுகிறார்கள். கிளஸ்டர் பிரபு வருமுன், அவர் பார்வையிடக்கூடியபடி முடித்து விடுவார்கள். —N. I. A.

பவளத் தீவு

அல்லது

பாவையின் பராக்கிரமம்

(திரு. கே. வீ. எஸ். வாஸ்)

பவளத் தீவு என்பது பாழடைந்த மதில்களும், கோட்டைச் சிகரங்களும், மூடுபட்ட அகழிகளும் குவிந்த ஓர் சிறு தீவு. உலகில் சர்வமும் அநித்யமானவைகளே என்னும் அறிய உண்மையைக் கண்களுக்கு முன் பிரத்யக்ஷமாய் எடுத்துரைப்பதே போல் ஒரு காலத்தில் மிகவும் உன்னத நிலையிலிருந்த இச்சிறு அழகிய தீவு சீர் குலைந்து, நம் கதை தொடங்கும் சமயம் அத்தீவைச் சுற்றியுள்ள பல தீவுகளுக்கும் முடிவேந்தனான பல்லவராயன் என்பவனின் ஆயுதசாலையாக உபயோகிக்கப்பட்டு வந்தது. யுத்தகாலங்களைத் தவிர இத்தீவிலேயே காப்பாளிகளாக வசிக்கும் சிலரைத் தவிர வேறு ஒருவரும் இங்கு வருவதுமில்லை; வர அனுமதிக்கப்படுவதுமில்லை. பல்லவராயனின் ஆயுதங்கள் யாவும் இங்கே வைக்கப்பட்டிருப்பதால் இரவு பகலாய் இத்தீவு பகைவர்களிடமிருந்து பாதுகாக்கப்படுவதற்கெனச் சிலர் மட்டும் எப்பொழுது மிங்கேயே யிருப்பார்கள். தீவின் மத்தியிலுள்ள ஓர் உன்னத சிகரத்தின்மீது ஓர் சுழல் விளக்கு இரவு முழுதும் காணப்படும். அங்கிருந்து ஒருவன் இரவு முழுதும் சமுத்திரத்தின் நாலாபுறங்களிலும் பூதக் கண்ணாடியி னுதவியால் பார்த்த வண்ணமாகவே யிருப்பான். சில மைல்களுக்கப்பால் கடலில் கப்பல்கள் வருவது தென்படின் உடனே அபாய மணி சிகரத்தி னுச்சியிலிருந்து அடிக்கப்படும். அந்த ஒலிகேட்டமறுநிமிடம் பக்கத்துத் தீவிலுள்ள படைகளெல்லாம் சண்டைக்குத் தயாராகிவிடும். இச்சிறு தீவு கைப்பற்றப்படின் பல்ல்வாராயனின் அரசாங்கமே கைப்பற்றப்பட்டது போலாகையால் மிகவும் நம்பிக்கையுள்ள ஆட்களே காவல் வைக்கப்பட்டிருந்தார்களென்பது கூறாமலே விளங்கும்.

* * *

ஓர் அமாவாசை தினத்தன்று இரவு எட்டு மணியிருக்கும். எங்கும் ஒரே காரிருள் கவிழ்ந்து நிற்கின்றது. கார் மேகங்கள் கவிழ்ந்த வானத்தில் காது செவிடுபடும்படி இடியும், கண்கள் கூசும்வண்ணம் மின்னலும் தோன்ற, மழையும் சிறுசிறு தூற்றலாகத் தூறிக் கொண்டிருக்கிறது. சமுத்திரக் கரையினின்று மாலைக் காற்று வாங்கச் சென்ற கலாவதி யென்னும் பெண் இருட்டில் தட்டுத்தடுமாறிக் கொண்டு மெள்ள நடந்து வருகிறாள். வானத்தில் திடீரென ஓர் மின்னல் தோன்றவும் தனக்குச் சுமார் ஐம்பது கஜத்திற்கப்பால் ஒரு மனிதன் அதிவேகமாக நடந்து வருவது நன்கு புலப்பட்டது. கலாவதி உடனே பக்கத்திலுள்ள ஓர் பாழ்மனையில் நுழைந்துகொண்டு தன்னை நோக்கி வருபவன் யார் என்று கவனிக்கலானாள். மறுமுறை வானம் மின்னியபொழுது அதே உருவத்தை மறுபடி உற்று நோக்கினாள். "ஹா! வீரசிங்கன்!" என்ற வார்த்தைகள் அவளை யறியாமலே அவள் வாயினின்று கலவரத்துடன் வெளிவந்தது. ஒரு சமயம் அவன் தன்னைத் தேடிக் கொண்டுதான் வருகிறானோ வென்று முதலில் அச்சமுற்றாள் கலாவதி. "சீ! சீ!! நான் இங்கிருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் வேறெங்கோ போகிறான் போலிருக்கிறது. எதற்கும் அவன் இவ்விடத்தைத் தாண்டிச் செல்லும் வரையில் நான் இங்கேயே ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். என்னைக் கண்டு பிடித்துவிட்டால் இலேசில் விடான்!" என்று தீர்மானித்துக் கொண்டு கலாவதி பாழ் மனைக்குள் மறைவாக நின்றாள்.

இந்த வீரசிங்கன் யார்? இவனிடம் கலாவதி பயப்படவேண்டிய காரணமென்ன? கலாவதி யார்? என்றெல்லாம் வாசகர்கள் அறிய ஊக்கமுடனிருப்பார்கள். அத்தீவின் தலைமை உத்தியோகஸ்தனான பரந்தாமன் என்பவனின் மனைவியே கலாவதியாகும். பரந்தாமனும் வீரசிங்கனும் பல்லவராயனின் சேனையிலிருக்கையில் இருவரும் அப்பொழுது அரசியிடம் தோழியாக விருந்த கலாவதியைக் காதலித்தனர். கலாவதியோ பரந்தாமனையே காதலித்து அவனை மணம்செய்துக் கொண்டாள். இது வீரசிங்கனுக்குப் பரந்தாமனின்மீது பொறாமையைக் கிளப்பியதுடன் கலாவதியின்மீது வெறுப்பையும் கோபத்தையு முண்டாக்கியது. சில மாதங்கள் கழியவும் கலாவதிக்கு அரசியிடமுள்ள நட்பின் பயனாய்ப் பரந்தாமனுக்குப் பவளத் தீவின் தலைமை உத்தியோகஸ்தன் வேலை கிடைத்தது. கலாவதியும் பரந்தாமனும் பவளத்தீவை யடைந்தனர். அதே சமயம் வீரசிங்கனும் ஓர் உதவி உத்தியோகஸ்தனாகப் பவளத்தீவிற் கனுப்பப்பட்டான். இம்மூவரும் பவளத்தீவை யடைந்து பல மாதங்களாயினும் கலாவதி வீரசிங்கனின் கண்களிற்படாமல் வெகு ஜாக்கிரதையாக இருந்து வந்தாள். இன்று தற்செயலாய் அவன் எதிரில் வந்துவிடவும் அவன் என்ன செய்வானோவெனப் பயந்தாள். மேலும் வீரசிங்கன் மிருகத்தன்மையான முரட்டுச் சுபாவ முடையவனாதலின் கலாவதி அவனிடம் நடுங்கிப் பாழ் மனையிலொளிந்து கொண்டது ஓர் ஆச்சர்யமில்லை.

கலாவதி மூச்சை யடக்கிக்கொண்டு சந்தடி செய்யாத பூனைபோல் பாழ் மனையில் பதுங்கி நிற்கையில் அதன் முன்புறத்தில் இருவர் நின்று பேசுவது அவள் செவிகளில் நன்கு விழுந்தது. சற்று உற்றுக்கேட்டாள். ஒன்று வீரசிங்கனின் குரல் என்பதை அறிந்துக் கொண்டாள். ஆனால் மற்றொன்று புதிதாக விருந்தது. வானம் மின்னுகையில் சுற்றிலுள்ள இடுக்குகளின் வழியே அவர்களைக் கவனித்தாள். ஆம், இரண்டாவது மனிதனின் உருவம் நன்கு தென்பட்டது. அவன் தலைமுதல் கால் வரையில் கறுப்பு அங்கி யணிந்து இடுப்பில் பளபளவென்று ஜ்வலிக்கும் கத்தியும், முதுகில் கேடயமும் கட்டியிருந்தான். அவர்கள் குடித்துக்கொண்டிருந்த புகைச் சுருட்டின் நாற்றம் கலாவதிக்குத் தாங்க முடியவில்லை யாயினும் சகித்துக்கொண்டு சந்தடி செய்யாமல் அவர்கள் பேசுவதைக் கவனமாகக் கேட்கலானாள்.

"சூரநாதா! நான் சொல்கிறபடி செய்தாலன்றி நீங்கள் வெற்றிபெறுவது கடினம். இத்தீவின் கிழக்கு முனையில் நானும் என் ஆட்களுமே

காவலிருக்கின்றோம். ஆதலின் நீ உடனே வேகமாக உன் கப்பல்களிருக்குமிடத்திற்குச் சென்று அவர்களை எவ்வளவு விரைவாக அழைத்து வர முடியுமோ அவ்வளவு விரைவாகத் தீவின் கீழ்ப் புறமாயுள்ள மலைகளுக்குப் பின்புறமாக ஆயுதபாணிகளாகத் தயாராக நிறுத்தி வை. இது இரவு பத்து மணிக்குள் நடக்கவேண்டும். சிகரத்தின் சுழல் விளக்கு ஏற்றப்பட்ட பின் கடலில் கப்பல்கள் வந்தால், உடனே அபாய மணி யடிக்கும். உங்கள் பாடு திண்டாட்ட மாகிவிடும். ஆதலின் 10 மணிக்குள் எல்லோரையும் அங்கு நிறுத்திவிட்டு, நீ மட்டும் இந்த இடத்திற்கு வா. வருகிற வழியில் சிப்பாய்கள் யாரேனும் தடுத்தால், "பசுங்கிளி" என்ற குறிப்பு வார்த்தையைக் கூறு. உடனே விலகிவிடுவார்கள். உனக்காக நான் இங்கு காத்திருப்பேன். அதன் பின் உன்னைச் சுரங்கத்திலுள்ள ஆயுதசாலைக்கு இட்டுச் செல்கிறேன். அங்கு இருவரே காவலிருப்பதால் சுலபமாகக் கைப்பற்றி விடலாம். அதன் பின் உன் ஆட்களைக் கொண்டு மிகுதியைச் செய்துகொள்ளலாம்!" என்றான் வீரசிங்கன்.

"சுரங்கத்திற்குச் செல்லும் வழி எங்கிருக்கிறது!" என்றான் சூரநாதன்.

"ஓ! அதை இப்பொழுது கூற முடியாது. நம் ஒப்பந்தப்படி நீ இப்பொழுது என்னிடம் ரூ. 50,000 கொடுத்துவிட்டு உன் சிப்பாய்களைத் தீவின் கிழக்கு முனைக்குக் கொண்டு வரவேண்டும். அதன் பின் இங்கு வந்து மிகுதி ரூ. 50,000த்தைக் கொடுத்தால்தான் சுரங்க வழியைக் காட்டுவேன். காலதாமத மாகிறது. துரிதமாகப் பணத்தை எடு! என்றான் வீரசிங்கன்.

சூரநாதன் ஓர் பை நிறைய நோட்டுகளை வீரசிங்கனிடம் கொடுக்கவும் இருவரும் ஏதோ பேசிக் கொண்டே தீவின் தென் புறமாக நடந்தனர். கலாவதிக்கு அப்பொழுது தான் உயிர் திரும்பி வந்ததைப் போலிருந்தது. வீரசிங்கன் லஞ்சம் பெற்றுக்கொண்டு சதி செய்கிறான் என்ற விஷயம் தெரிந்ததும் தன் கணவனிடம் தெரிவிக்க வீட்டை நோக்கி ஒரே ஓட்டமாகத் தலைகால் தெரியாமல் ஓடினாள். ஆனால் பரந்தாமன் அவள் வருவதற்கு முன்னதாகவே சுழல் விளக்குச் சிகரத்திற்குப் போய் விடவும் கலாவதி கணவனைச் சந்திக்கவியலவில்லை. என்ன செய்வாள் கலாவதி? மணியோ ஒன்பதாகிவிட்டது. இன்னும் ஒரு மணி நேரத்தில் தான் வாளா விருந்தால் பல்லவராயனின் அரசாங்கம் பகைவர்கள் வசமாகிவிடும். கலாவதி வீட்டின் வெளிப் புறத் திண்ணையில் நின்று யோசித்துக் கொண்டேயிருக்கையில் அவ்வழியாக வீரசிங்கன் சூரநாதனுக்காகக் காத்திருப்பதாகக் கூறிய பாழ் மண்டபத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். கலாவதியின் மனதில் மின்னலைப் போல் ஓர் யுக்தி தோன்றியது.

"யார்! வீரசிங்கா அங்கே போவது?" என்று திடீரென, போய்க் கொண்டிருக்கும் வீரசிங்கனைப் பார்த்துக் கேட்டாள் கலாவதி.

தன்னை இதுவரையில் கூப்பிட்டுப் பேசாத கலாவதி இன்று அழைக்கவும் வியப்புற்று வீரசிங்கன் "யார் அங்கே கலாவதியா? ஏன்? நான்தான் வீரசிங்கன்!" என்று கூறிக்கொண்டே அருகில் வந்தான்.

"தாங்கள் ஏன் என்மீது இப்படிப் பாராமுகமாக விருக்கவேண்டும்? அடிக்கடி பழைய நாளைய சிநேகிதையான என்னைக் கண்டு பேசிவிட்டுச் செல்லத் தங்களுக்கு விருப்பமில்லையா?" என்று குயில் போல் வினவினாள் கலாவதி.

"ஏன் தங்களுக்கு வெறுப்பைத் தரக்கூடிய நான் உங்களைச் சந்திக்க வேண்டும்? என்னை விடப் பரந்தாமன் தானே தங்களுக்கு மனதிற்குகந்தவன்" என்று கூறிப் பெரு மூச்சு விட்டான் வீரசிங்கன்.

"ஆமாம்! அவரைப் பற்றி என்னிடம் தயவு செய்து பேசாதீர்கள். அவர் இவ்வளவு மிருகத் தன்மையானவர் என்று முன்னரே தெரிந்திருந்தால் அவரை ஒருக்காலும் நான் மணந்திரேன்! ஏன் நிற்கிறீர்கள்! உள்ளே வந்து ஏதேனும் சிற்றுண்டியருந்தி விட்டுச் செல்லலாமே!" என்று கலாவதி வருந்தியழைக்க, வீரசிங்கன் கலாவதி இப்பொழுது பரந்தாமனை வெறுக்கிறாளென்றும் ஒரு சமயம் அவனுடன் விவாகரத்துச் செய்துகொண்டு தன்னை மணம் செய்து கொண்டாலும் கொள்ளலாமென்றும் மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டு அவளுடன் வீட்டினுள் நுழைந்தான்.

கலாவதி அவனைத் தாழ்வாரத்திலமரச் செய்துவிட்டுச் சமயலறைக்குள் நுழைந்து மறு நிமிடம் கலவரத்துடன் அலறிக்கொண்டே வீரசிங்கனை யணுகி "அப்பப்பா! இந்த இழவு பூனை மிகவும் தொந்திரவு செய்கிறது! ரொம்பப் பயந்து விட்டேன்! தயவு செய்து சமயலறை மேஜை மீதுள்ள பலகாரங்களை நீங்கள் எடுத்து வருவீர்களா? சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்!" என்றாள் கலாவதி.

"அட பூனைக்கா இவ்வளவு பயம்! நீ இங்கேயே இரு! நான் போய்ப் பலகாரங்களை யெடுத்து வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே வீரசிங்கன் சமயலறைக்குள் நுழைந்தான். கலாவதி மறு நிமிடம் புலி போல் பாய்ந்து சமயலறைக் கதவை வெளிப்புறம் பூட்டிவிட்டாள். வீரசிங்கன் தான் அகப்பட்டுக்கொண்டதை யுணர்ந்து உரத்த குரலில் கலாவதியைச் சபித்தான். கலாவதியோ அவைகளைச் சிறிதும் சட்டை செய்யாது வீட்டின் வெளிப்புறக் கதவையும் பூட்டிக்கொண்டு தன் கணவனின் கைத்துப்பாக்கிகளில் ஒன்றை இரவிக்கையினுள் மறைத்து வைத்துக் கொண்டு பாழ் மண்டபத்தை நோக்கி விரைவாக நடக்கலானாள்.

* * *

கலாவதி இப்பொழுது தான் மிகவும் பயங்கரமானதோர் காரியத்திலிறங்கியிருப்பதை உணர்வாள். ஆம், பல்லவராயனின் முடி இருப்பதும் இழப்பதும் இனி அவள் செய்யத் துவக்கியுள்ள காரியத்திலேயே யிருக்கின்றது என்பதை நினைக்கவே அவளுள்ளத்திலோர் புதிய ஊக்கமும் தைரியமு முண்டாயது. தன் உயிரை இழக்க நேரினும் தனக்கும் தன் கணவனுக்கும் இது வரையில் உணவளித்த அரசனை அபாயத்தினின்று தப்புவிக்கவேண்டுவது தன் கடமை யென்பதை யறிந்தாள். முதலில் சுழல் விளக்குச் சிகரத்திலேறித் தன் கணவனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு வரலாமாவென எண்ணினாள். ஆனால் அதற்குள் சூரநாதன் வீரசிங்கன் இன்னும் வாராதது கண்டு சந்தேகித்து விபரீதமாக ஏதேனும் செய்துவிடின் என்ன செய்வதென அச்சப்பட்டாள். தன் கணவன்

எக்கதியாயினும் சரி உயிருள்ள வரையில் உணவளித்த அரசனுக்குச் சேவகம் செய்யவேண்டுவதே ஈசனின் ஆணை எனக்கருதி பாழ்மண்டபத்தை நோக்கி வேகமாக நடந்தாள்.

"யார் அங்கே? உடனே பதில்?" என்ற குரல் சற்று முன்னுலிருந்து வந்தது. கலாவதியின் ஹிருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. பேச நாவெழவில்லை. உடனே சட்டென்று அரசனது அபாய நிலைமை மனதில் நினைக்கப் பயமெல்லாம் எங்கோ பறந்துவிட்டது "பசுங்கிளி!" என்று பதிலளித்தாள் கலாவதி. உடனே ஒருவன் கலாவதிக்கு முன் வந்து நின்று "நீ யார்? எங்கே போகிறுப்?" என்று வினவினுன். தன்னைக்கேட்பவன் சூரநாதனே என்பதைக் குரலினுல் அறிந்துகொண்ட கலாவதி அவனைத் தனிமையாகச் சற்றுதூரம் அழைத்துச்சென்று, "நீங்கள் எதிர்பார்க்கும் மனிதருக்குத் திடீரெனக் காலில் காயம் பட்டுவிட்டதால் அவர் வர இயலவில்லை. அதற்குப்பதிலாக என்னையனுப்பினுர்!" என்றுள்


"அவர் செய்யக்கூடிய காரியம் உன்னுல் செய்யக்கூடுமா?" என்று சற்றுச் சந்தேகிப்பவன்போல் கேட்டான் சூரநாதன்.

"ஓ! என்னுல் அவரைவிட இன்னும் ஜாக்கிரதையாகச் செய்யக்கூடும்! அதற்காகவே அவர் என்னையனுப்பினுர்!" என்றுள் கலாவதி.

"அந்தக் காரியத்தைச் செய்தால் உனக்கு என்ன வெகுமான மளிக்கப்படுமென்று தெரியுமா?" என்றுன் சூரநாதன்.

"ஓ! ரூ. 50,000 கொடுப்பார்கள் என்று கூறினுர் வீரசிங்கர்! சரி, நாழிகையாகிறது. நான் சொல்லுகிறபடி கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அகப்பட்டுக் கொள்வோம். என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள். அதோ சிகரத்தின் மீதுள்ள விளக்குச் சுழன்றுகொண்டே வரும். நாம் இருக்கும் திக்கில் திரும்பும்போது சட்டென்று தரையுடன் தரையாகப் படுத்துக்கொள்ள வேண்டும். சிகரத்திலுள்ளவர்கள் நம்மைச் சந்தேகிக்கும்படி சிறிதும் நடந்துகொள்ளக்கூடாது. அகப்பட்டுக் கொண்டால், தூக்கு மேடையே தண்டனை என்பதை அறிந்துகொள்ளுங்கள்!" என்று கூறி மெள்ள நடந்தாள். அவள் பேச்சினின்று கலாவதி மிகவும் நம்பிக்கையானவளே யெனக் கருதி சூரநாதன் அவளைப் பின்தொடர்ந்தான்.

"ஹா! சுழல் விளக்கு நம் பக்கம் திரும்புகிறது! உஸ்! சட்டென்று படுத்துக் கொள்ளுங்கள்! அதோ அந்தச் செடி மறைவில்! சீக்கிரம்!!" என்று கூறிக்கொண்டே கலாவதி பக்கத்திலிருந்த செடி மறைவில் பதுங்கிக் கொண்டாள். சூரநாதனும் அவளைப் பின்பற்றி ஓர் புறமாக மறைந்து நின்றுன். சுழல்விளக்கு அந்தப் பக்கமாக மெள்ளத் திரும்பியது. உடனே அவர்களிருந்த விடத்தில் சூர்ய வெளிச்சத்தைப் போல் பளீர் என்று வெளிச்சமுண்டாகியது. அந்த ஒளியில் சிறிது தூரத்திற்கப்பால் ஓர் இடிந்த மாளிகையிருப்பதைக் கண்டு சூரநாதன் "அது என்ன? அங்கு என்ன இருக்கிறது!" என்றுன். "அதுதான் சுரங்கத்திற்குப் போகும் வழி! இங்கு சுழல் விளக்குச் சற்று அதிக நேரம் நிற்கிறது பார்த்தீர்களா? மேலிருந்து காப்பாளி அந்த மாளிகையை வெகு கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருப்பான்!" என்றுள் கலாவதி. சுழல் விளக்கு மறுபடி மெள்ள வேருேர் புறம் திரும்பவும் கலாவதி எழுந்து சூரநாதனை மாளிகைக்குள் இட்டுச் சென்றுள். மாளிகை இரு பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒருபாகம் ஆழமான அகழியால் சூழப்பட்டிருந்தது. இரண்டிற்கும் மத்தியில் நான்கடி அகலமுள்ள ஓர் பலகையே போடப்பட்டிருந்தது. "நண்பரே! இந்தப் பலகையைக் கடந்து இந்த மாளிகையின் மற்ருேர் பாகத்திற்குச் செல்லுங்கள்! அங்கு முன் அறையில் இருவர் காவலிருப்பர். இப்பொழுது அவர்கள் நன்கு உறங்கிக் கொண்டிருப்பார்களாதலின் பயமின்றிச் சென்று இருவரையும் படுக்கையிலேயே கொன்றுவிட்டுச் சுரங்கவழியைப் பூட்டிச் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டு வந்துவிடுங்கள். அதன்பின் இங்குள்ள வீரர்கள் உங்களையும் உங்கள் ஆட்களையும் எதிர்க்க முடியாது. முதலில் நீங்கள் அங்கு போவதற்கு முன் பணத்தைக் கொடுக்க வேண்டும்!" என்றுள், சூ



கல்கத்தா மேயர் நளினரஞ்சன் சர்க்காருக்கு, குமாரராஜா முத்தையச் செட்டியார் 'செட்டிநாட்டு ஹவுஸில்' ஒரு விருந்து நடத்தினர். படத்தில் ஸர். மகமத் உஸ்மான், குமாரராஜா முத்தையச் செட்டியார் முதலியோர் காணப்படுகிறுர்கள்.

—P.P.B.

நாதன்தான் கொண்டுவந்திருந்த பணப் பையைக் கலாவதியிட மளித்துவிட்டு அவளைத்தான் திரும்பி வரும்வரையில் அங்கேயே யிருக்கும்படி கூறிவிட்டு அகழியைக் கடப்பதற்குப் பலகையின் வழியே மெள்ள நடந்தான். ஹா! அவன் பலகையின்மீது பாதிவழி சென்றதும் கலாவதி சட்டென்று பலகையைத் தூக்கிக் கவிழ்த்துவிட்டாள். ஓ! வென்ற சப்தத்துடன் தலைகீழாய் சூரநாதன் அகழியில் விழுந்தான். கலாவதி ஆனந்தத்தால் ஓர் பெருங் கூச்சலிட்டுக்கொண்டு தன் வீட்டை நோக்கி ஓடினாள்

* * *

காலை மணி ஐந்திருக்கும் சுழல் விளக்குச் சிகரத்தினின் றிறங்கிய பரந்தாமன் தன் காதலியைக் காண ஆவலுடன் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் ஒரு நண்பன் குறுக்கிட்டு, "பரந்தாமா! உன் மனைவி உன்னை உண்மையில் காதலிக்கிறாளா?" என்று கேட்டான். பரந்தாமனுக்கு இக்கேள்வி பெரும் வியப்பை யளித்தது.


"என்ன பாஸ்கரா! நீ கேட்கும் கேள்வியின் அர்த்தம் ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே! என் காதலி கலாவதி என் பொருட்டுத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாக விருக்க, அவள் என்னைக் காதலிக்கிறாளா இல்லையா வென்று எப்படிச் சந்தேகிக்கக் கூடும்?" என்றான் பரந்தாமன்.

"நண்பா! நீ மோசம் போனாய்! நேற்றிரவு ஒன்பதரை மணி சுமாருக்கு உன் மனைவி வீரசிங்கனுடன் வீட்டுத் திண்ணையில் நின்று மிகவும் நேசமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள்!" என்றான் பாஸ்கரன்.

"ஓ! ஒருக்காலுமிராது! அப்படிப் பேசிக் கொண்டிருந்த போதிலும் அவள் களங்கமற்ற மனதை யுடையவளாகவே யிருப்பாள் என்பதில் சந்தேகமில்லை!" என்றான் பரந்தாமன்.

"அட பயித்தியமே! நீ ஏமாந்தாய்! அவனைச் சிற்றுண்டி யருந்திவிட்டுப் போகவேண்டுமென வற்புறுத்தி அவன் கைகளைப் பிடித்துக்கொண்டே உள்ளே இட்டுச் சென்றாள். அதுவுமன்றி நீ யிருக்கத் தன்மையாக விருப்பதாகவும் உன்னை மனதார வெறுப்பதாகவும் கூறியதை நான் என் செவிகளால் கேட்டேன்!" என்று கூறிவிட்டுச் சென்றான் பாஸ்கரன்.

பரந்தாமனின் உள்ளம் கடலைப்போல் கொந்தளித்தது. பாஸ்கரன் அவனது நெருங்கிய நண்பனதலாலும், மிகவும் நம்பிக்கையுள்ள மனிதனதலாலும் அவன் பொய் கூறுவானென்றெண்ண முடியவில்லை. இருந்தாலும் பேயை நம்பினும் பெண்ணை நம்பலாகாது என்ற பழமொழியை யெண்ணிக் கையில் துப்பாக்கியைப் பிடித்த வண்ணம் வெகு கோபமாக வீட்டை நோக்கி நடந்தான். கலாவதி கணவனைக் கண்டதும் ஓடிச்



முகம்மது நபியைப் பற்றி அவதூறாக எழுதப்பட்ட ஒரு புத்தகத்தைக் கண்டனம் செய்ய, சென்னை முஸ்லீம்கள் திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு பெரிய கூட்டம் கூடினார்கள். படத்தின் மத்தியில் காணப்படும் ஜனாப் வி. அப்துல் ஹாக்கீம் சாகிப் பகதூர் தலைமை வகித்தார். —P.P.B.

சென்று அவனிடம் நடந்ததை யெல்லாம் கூறி ரூ. 100,000-த்தையும் எடுத்துக் கொடுத்தாள். பரந்தாமனின் கோபம் பறந்தோடத் தன் மனைவியை யாலிங்கனம் செய்து முத்தமிட்டு "கண்மணி! உன் பராக்கிரமத்தை மெச்சினேன்! நீ இவ்வளவு தைரியமாக நடந்திராவிடில் நானும் நீயும், அரசரும் இந்நேரம் விண்ணுலகி லிருப்போம்!" என்று மெச்சி உடனே தன் சிப்பாய்களைக்கொண்டு வீரசிங்கனையும், தீவின் கிழக்குப் புறமாகவுள்ள சூரநாதனின் ஆட்களையும் கைதியாக்கினான். இவ்விஷயம் அரசருக்கும் அரசிக்கும் தெரியவே கலாவதிக்கு அரசாங்கத்தினின்று ஓர் வைரப் பதக்கம் பரிசாக வளிக்கப்பட்டது. அன்றுமுதல் அரசருடைய அன்பு இவ்விருவர்களிடத்தும் அதிகரிக்கத் தம்பதிகள் இன்பமாய் இல்லறம் நடத்தி வந்தனர்.

இரண்டாவது டிலிங்கர்

அமெரிக்கக் கொள்ளைக்காரனை டிலிங்கரைப் போல் ருமானியாவில் மிக்காஸ் வியர்ஸ் என்ற ஒரு கொள்ளைக்காரன் இருந்து வருகிறான்.

10 வருஷங்களாகச் சிரமப்பட்டு கடைசியில் அவன் குடிவெறியில் மயங்கிக் கிடக்கும்பொழுது பிடித்துவிட்டார்கள்.

"ஜெயிலிலிருந்து தப்பித்தவுடன் டிலிங்கரை விட அபாரமான செய்கைகளைச் செய்து காண்பிக்கிறேன்" என்று மாஜிஸ்திரேட்டிடம் கூறினான். இதுவரை இவன் 11 கொலைகளும் 142 கொள்ளைகளும் நடத்தியிருக்கிறான்.

குயில்--ஒரு நெட்டைக் கனவு

('கூத்தன்')

உலகம் அசட்டுத்தன்மை! மிருகத்தன்மை, பயம், கொடுமை என்ற அசுர வர்க்கங்களின் ஏகபோக மானுங்காணியாக இருக்கின்றன. அசட்டுத்தனமும் கோழைத்தனமும், இதைச் சில சமயம் போற்றுகின்றன. சில சமயம் இதைக்கண்டு பரிதபிக்கின்றன. இந்த அசட்டுத்தனத்தையும், மிருகத்தனத்தையும் உணர்ச்சி யுடையவன் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா?

"தனிமை கண்டதுண்டு—அதிலே
சாரமிருக்குதம்மா?"

இந்த இருளைப்போக்கி, ஒளியைக் கொண்டுவர முயலும் கவிஞனும் மலைத்து விடுகிறான். தனியிடத்திலே அவன் மனம் குமுறுகிறது, கொந்தளிக்கிறது.

நந்தவனத்தில் சாந்தி ஏற்படாதா? நந்தவனம் இயற்கையின் அன்பை ஊட்டுவதுபோல் அழகின் பெருமையைப் பரிந்து அளிக்கின்றது. கவிஞனது உள்ளம் அதை ஏற்கும் நிலையில் இல்லை. இருளின் ஒளி சிதறி மனத்தைக் கறுப்பில் மின்ன வைக்கிறது.

எங்கிருந்தோ ஒரு குயில் கூவுகிறது. அந்தக் குயிலின் ஏக்கம், சோகம் கலந்த குரல் கவிஞனது உள்ளத்தில் கலக்கிறது. இரண்டும் ஒன்றுபட்டது.

கவிஞன் இப்பொழுது சுற்றிலும் கவனிக்கிறான். அந்தச் சோகம் கலந்த குயிலின் குரலில் ஒரு நம்பிக்கை அவனுக்குத் தோன்றுகிறது. அவன் குதூஹலமடைகிறான். உலகத்தின் இன்ப ஒளி அவனுக்குத் தெரிகிறது.

சூர்யோதயம் ஒரு களிப்பை மனதிற்குத் தருகிறது. உலக இருள் அகலுகிறது. அதிலிருந்து எத்தனையோ கற்பனைகள், கனவுகள் அவனுக்குத் தோன்றுகிறது.

மறுபடியும் குயில் கூவுகிறது.

இப்பொழுது இந்த இன்ப ஒளித்திரளான இயற்கை வனப்பிலே அந்தக் குயிலின் சோகம் துணையை நாடுவது போல் படுகிறது. ஒரே விதமாகத் துடிக்கும் இரண்டு இருதயங்கள் பிணிக்கப்படுவதில் அதிசயமில்லை.

குயில் கவிஞனை யழைப்பதுபோல் கூவுகிறது.

கவிஞன் குயிலைத் தேடுவதுபோல் பாடுகிறான்.

அவன் உலகை மறந்துவிட்டான். குயிலும் அவனும் தவிர இந்த அகண்ட உலகில் வேறு ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை.

குயில் அவன் கண்களுக்குத் தென்படுகிறது. அவனை யழைக்கிறது. அந்த அழைப்பிலே, ஒரு கட்டுக்கடங்காத பாசம், ஒரு விள்ள முடியாத காதல் புலப்படுகிறது. குயில் அவனை வசீகரித்தது, அவன் உள்ளத்தை அப்படியே திருடிவிட்டது. குயிலுக்கு அவன் அடிமை. அன்பில் வசப்படாமல் யார்தான் இருக்கமுடியும்? அதிலும் ஒரு கவிஞன்...........

மறுபடியும் ஒரு கனவு..................

குயிலைத் தேடுகிறான். என்ன ஆவேசம்! என்ன காதல்! கட்டுக்கடங்காத காட்டாறு போன்ற மோகம். முன்பு குயில் இவனை நாடியது. இப்பொழுதோ? அங்கே குயில் இருக்கிறது.... குயில்மட்டுமா? ஒரு குரங்குடன் முன்போல் குலாவுகிறது. அதே காதல்! அதே உணர்ச்சி! கவிஞன் மனம் அப்படியே இடிந்துவிடுகிறது. நீசக்குயில்! வஞ்சனையான பெண்மை; உலகத்தின் இலக்ஷியங்கள் கனவுகள் எல்லாம் வெறும் பைத்தியக்காரத் தனமா? ஒப்புக்காகக் கூறும் மோசக்காரப் பேச்சா? ஒளியாக வந்தது கானலாக மறைந்ததே! இதுவும் இருளின் ஒரு பொய்த் தோற்றமா? எல்லாவற்றையும் ஒரேயடியாக நசித்து, ஒரே ஊழியின் இறுதிக் கூத்தாக முடித்து விட்டால்........... மனம் குமுறுகிறது. இருள் கவ்வுகிறது. மறுபடியும் இருள்........

மறுபடியும் ஒரு கனவு.

மறுபடியும் குரலோசை. ஐக்கியப் படாமல் இருக்க முடியுமா? காதல் ஏகச்சக்ராதிபத்தியமா? அவனால் குயிலின் பாசத்தைக் களைய முடியவில்லை. அதெப்படி முடியும்? உண்மைக் காதல் என்ன உத்தரீயமா?—நினைத்தபொழுது களைந்துவிடுவதற்கு. மறுபடியும் அந்தக் குயில் தென்படுகிறது. ஆனால் இப்பொழுது...............இப்பொழுது ஒரு மாடு. குரங்கின் கதி என்ன? இந்த மாட்டின் கதி என்ன? அதை எப்படி இவனால் நினைக்கமுடியும்?—அவனுக்குப் போட்டியாக, எதிரியாக இருப்பவர்களை, அதுவும் மிருகங்களை, மனம் குமுறுகிறது. இப்பொழுது கொன்றால்........ சற்று நேரங்கழித்துக் கொன்றால் என்ன? அவ்வளவு நேரமாவது குயிலின் இனிமையைக் கேட்டால் என்ன? கொல்ல வேண்டியதுதான்." கத்தியை வீசுகிறான்...........எல்லாம் மறைகிறது. இருள். இருள்.

மனதில் இடையற்ற கொந்தளிப்பு.

மறுபடியும் ஒரு கனவு...........

குயிலைத் தேடிச் செல்லவில்லை. மனங் கசந்துவிட்டது. அதை இன்னும் எப்படித் தேடமுடியும். திரும்பத் திரும்ப மனத்தைப் புண் படுத்திய குயிலை எப்படி நினைப்பது. காதலைக் களைய முடியவில்லை. உயிரைத் தின்னும் காதல், உள்ளத்தை உள்ளூரப் பூச்சியரித்த மாதிரி, வெறும் பொக்காக, பாழ் வெளியாக ஆக்கிய குயிலை நினைக்கக் கூடாது என்று அறிவு சொல்லுகிறது. உள்ளம் கேட்கிறதா. அம்மாதிரித்துன்பத்தில் ஒரு சுகத்தைக் காணும் பொழுது, குயிலிடம் ஒரு பாசம் வாராமல் இருக்குமா. இப்பொழுது அறிவு கொஞ்சம் திடப்பட்டு விட்டது. அல்லது உளம் கொஞ்சம் கோழையாகி விட்டதா? போக ஒப்பவில்லை. ஆனால் குயில்........அது துணையை வேண்டியே தவிக்கும் பொழுது. அது நாடுகிறது. தூரத்திலே குயில். கவிஞனுக்கு அறிவின் கட்டுப்பாடு எங்கோ பறந்தது. பேசாமல் தொடர்கிறான். முந்திய இடம், முந்திய குயில்...........ஆனால் இடையில் எவ்வளவு பெரிய சோக நாடகம் நடந்து முடிந்து விட்டது. கவிஞன் தனது உள்ளத்தின் ஆவேசத்தை, தன் காதலின் உரிமையால் ஏற்பட்ட கோபத்தைத் தழலாகச் சண்டமாருதமாகக் குயிலின் மீது கொட்டி விடுகிறான். இரண்டு கை தட்டினால் தானே சப்தம். இரண்டு மனம் போ

ஆலயப் பிரவேச மசோதா

(மகாத்மா எழுதுவது)

ஆலயப் பிரவேச மசோதா பிரேபித்தவர் கையாலேயே மாண்டது. இதன் முடிவு இதைவிடச் சற்று மரியாதையாக இருந்திருக்கலாம். அந்த மசோதா தன் சொந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள ஒருவரால் கொண்டுவரப் படவில்லை. சீர்திருத்த வாதிகளின் சார்பாகக்கொண்டு வரப்பட்டது. அதைக்கொண்டு வந்தவர் சீர்திருத்த வாதிகளின் அபிப்பிராயத்தைக்கேட்டு, அவர்கள் சார்பாக நடந்துக் கொண்டிருக்கவேண்டும் இப்பொழுது அவர் காங்கிரஸ்காரர்களின் மீது சொன்ன அபிப்பிராய பேதங்களும், அவர் கோபப்படவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். மசோதாவானது சமய சம்பந்தமானது. பம்பாயில் செப்டம்பர் 25-ந் தேதில் பண்டித மாளவியாஜியின் தலைமையின்கீழ் ஹிந்துக்களின் சார்பாகக் கூடிய கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்துதான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. அந்த அறிக்கை ஒவ்வொரு வாரமும் ஹரிஜன் பத்திரிகையின் தலைப்பில் இருந்து வருகிறது. அதை இப்பொழுது ஆசைப்பட்டவர்கள் வாசிக்கலாம். ஜாதி ஹிந்துவானாலும், ஹரிஜனனாலும், ஒவ்வொரு ஹிந்துவும் இந்த மசோதாவைப்பற்றிக் கவனித்து வந்திருக்கிறார்கள். இதில் மற்றவர்களை விடக்காங்கிரஸ்காரர்களான ஹிந்துக்கள் தாம் முக்கியமாக ஈடுபட்டார்கள் என்று நாம் சொல்ல முடியாது. விவாதத்தில் காங்கிரஸின் பெயரை இழுக்க அவசியமே இல்லை. அந்த மசோதா இம்மாதிரியான இறுதிக்கு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

ஹரிஜனச் சுற்றுப் பிரயாணத்தில் எனக்குச் சற்றும் ஓய்வு இல்லாததினால் பொதுக் கூட்டத்திலும் சனாதன ஹிந்துக்களுக்கு ஹரிஜனப் பத்திரிகையினுய் கொடுத்த வாக்குத் தத்தத்திற்கு இணங்க, டெல்லி சட்டசபை அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துக் கொள்ளும்படி ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியைக் கேட்டுக் கொண்டேன். அதில் மெஜாரிட்டி அந்த மசோதாவிற்கு ஆதரவு கொடுக்கவில்லை என்றால் அதை வாபீஸ் வாங்கிக்கொள்ளுவது என்று நினைத்திருந்தேன். அதைக் கடைசிவரை விவாதிப்பதோ அல்லது அதை வாபீஸ் வாங்கிக்கொள்ளுவதோ என்பதைத் தவிர இதில் வேறு பிரச்னையே கிடையாது. சனாதனிகளும் சீர்திருத்த வாதிகளும் இந்த மாதிரியான நிலைமை இருக்கிறது என்று நினைக்கவேயில்லை. அது இம்மாதிரி எழுந்த கிளைப் பிரச்னையினால் திடீரென்று முடிவடைந் திருக்கக்கூடாது.

அரசாங்கம் இந்த விவாதத்தில் எம்மாதிரி நடந்துகொண்டது என்பதை இப்பத்திரிகையில் ஆராய்ச்சி செய்யாமல் இருக்கவேண்டும் என்பதே இப்பத்திரிக்கையின் நோக்கம். கிடைத்த சமாசாரங்களை வைத்து யோசித்தால் அரசாங்கம் இப்படித்தான் நடந்துகொண்டிருக்க முடியும் என்று தெரிகிறது. சீர்திருத்தக்காரர்களின் சார்பாக இதைப் பொதுஜனங்கள் அறிந்து கொள்ள வேண்டும். பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைக் கையெழுத்துக்களின் மூலமாக, இந்த மசோதாவின் சார்பாகச் சேகரிக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட நிபுணர்களின் அபிப்பிராயத்தையே கோரினது. இது வெகு ஸ்பஷ்டமாக இந்தப் பத்திரிகையில் (ஹரிஜனன்) எழுதப்பட்டு இருக்கிறது. இந்த மசோதாவில் எழும் பிரச்னைகளை எல்லாம் பொதுஜனங்கள் சரியாக நிதானிக்க முடியாது என்று என்னுடன் வேலை செய்த நண்பர்களும் நானும் அபிப்பிராயப்பட்டோம். ஜாதி ஹிந்துக்களுடன் சரிசமானமாக ஹரிஜனங்கள் கோவிலுக்குள் போவதா அல்லது கூடாதா என்ற கேள்வியே இங்கு எழவில்லை. ஆலயப் பிரவேசத்திற்கு ஒரு சட்டம் தேவையா இந்த மசோதா அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதா என்பதுதான் இப்பொழுது ஏற்பட்ட பிரச்னை. இவை பொது ஜனங்களால் நிதானிக்க முடியாதவை என்பது விளங்குகிறதல்லவா? மதத்தின் சார்பாகச் சட்டம் எப்பொழுது தேவை என்பதை அவர்களால் தீர்மானிக்கவே முடியாது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். உண்மையில் இதே மாதிரி எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. பொதுஜனங்களின் ஆழ்ந்த அறிவைக் காட்டக்கூடியபடி வோட்டுச் சேகரிப்பது கஷ்டம். இந்த மசோதாவினால் பொது ஜனங்களின் மெஜாரிட்டியாரின் அபிப்பிராயத்தைப் பொறுத்துத்தான் கோவில்களைத் திறந்துவிட முடியும் என்பதை விளக்குவதும் சிரமம். பொதுஜனங்களின் அறிவை இம்மாதிரியானப் பிரச்னைகளைத் தீர்மானிக்கப் போதியபடி பண்படுத்துவதும் கஷ்டமல்ல. கட்சிப் பிளவுகளின் கோபதாபங்களும் சத்தியத்தின் அனுவசியமும் ஏற்பட்ட சமயத்தில் பொதுஜனங்களை இம்மாதிரி பண்படுத்துவது வெகு கஷ்டந்தான்.

ஆலயப் பிரவேசத்தைப் பற்றிய விவாதம் இன்னும் நடக்கவேண்டியதுதான். ஹரிஜனங்களுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்றி ஆலயங்களைத் திறந்துவிட வேண்டும். சட்டத்தின் தூண்டுதல் இல்லாமல் இது நடந்தால், சீர்திருத்தவாதிகளுக்குத்தான் அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருக்கும் சவர்ண ஹிந்துக்களின் மெஜாரிட்டி இதை ஆதரிக்காவிட்டால், அவர்கள் அபிப்பிராயத்திற்கு எதிரிடையாக ஒரு கோவிலையாகவாவது திறந்துவிடச் சீர்திருத்த வாதிகள் ஆசைப்படவில்லை. சவர்ண ஹிந்துக்கள் பூரணமாக ஆதரித்தாலும், ஆலயத்தைத் திறந்துவிட வேண்டிய கட்டுப்பாடு ஏற்படாது என்று சட்ட

ராடினால் தானே இறுதி. குமில் இந்த ஆவேசத்தை எதிர்க்கவில்லை. (உமது கனவு) என்று சொல்லி நம்பிக்கையின் மையில் பழிபோடுகிறது. பிறகு ஒரு நீண்ட கனவு. ஒரு காதலின் முடிவு பெருத இறுதி, இரத்தம், சோகம், கொலை.......இருள்.......குமில் அவன் கைகளில் விழுகிறது குமிரா.......கனவா! பெண்ணு! கவிதையா!..............எல்லாம் மறைகிறது.

குமில் கூவுகிறது.

கவிஞன் மனதில் ஒரு கற்பனை, சாந்தி.

நிபுணர்கள் சொல்லுவதினுல்தான் சட்டத்தின் உதவியை நாடவேண்டி இருக்கிறது. இது இப்படி இருந்தால், ஆலயப் பிரவேசத்தை அனுமதிக்கும் ஒரு சட்டம் அவசியந்தான். சட்டந்தான் சட்டத்தின் தவருன தீர்ப்புகளை நீக்க முடியும். அந்தத் தீர்ப்பு பாரம்பரியமாக வந்த வழக்கத்தை யொட்டியோ, அரசியல் சட்டசபையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டமாகவோ இருந்தாலும் அதனுல்தான் நீக்க முடியும். தடுக்க முடியாத அவசியம் ஏற்படும் சமயம் வரை சீர்திருத்தக்காரர்கள் பொறுத்திருப்பார்கள். இப்பொழுது அவசர அவசாமாக இந்த மசோதா திரும்ப வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டது நமக்கு ஒரு படிப்பினையைக் கற்பிக்கிறது. இனி ஏமாற்றத்திற்கு வழி இருக்காது. இப்பொழுது இருப்பதைவிடப் பன்மடங்கு அதிகமாக உழைக்கவேண்டும். ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசத்தை வேண்டுகிருர்களா, என்பதைத் தெரிந்து கொள்ளவோ, அல்லது அதை எடுத்துக் காட்டவோ அவசியம் ஏற்படவில்லை. தீண்டாமையின் தீமை ஹிந்து தர்மத்தின் உயிர் நாடியைக் கொல்லுகிறது, அது போகாவிட்டால் ஹிந்து தர்மம் நசித்துவிடும் என்று அறிந்த சவர்ண ஹிந்துக்களின் மனத்திருப்திக்காக, அவர்கள் பாபம் நீங்குவதற்காக இது மிக அவசியம்.

ஏஜண்டுகள் தேவை.

தஞ்சாவூர், கும்பகோணம், திருநெல்வேலி, சிதம்பரம், யாழ்ப்பாணம், நாகப்பட்டிணம், நன்னிலம், திருவாரூர், நீடாமங்கலம், விழுப்புரம், செங்கற்பட்டு, திண்டுக்கல், இராமனதபுரம், மணியாச்சி; திண்டிவனம், கடலூர், சீயாழி, மணப்பாரை, மானமதுரை, பரமக்குடி, காஞ்சீபுரம், திருவண்ணமலை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி முதலிய இடங்களில் நமது "ஊழியன்" பத்திரிகையை விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.

நிபந்தனைகட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,

ஊழியன் ஆபீஸ்,

56, தம்பு செட்டித் தெரு, சென்னை.

சூக்ஷம உலகின் செய்தி

பல்கேரிய தேசத்துப் பெண்மணி ஒருத்தி இறந்து போனவர்களுடைய ஆவிகளுடன் சம்பாஷிப்பதற்கு ஓர் யந்திரம் கண்டுபிடித்திருப்பதாகக் கூறுகிருள். அவள் பெயர் லேடி ஜோக்கெய்லார்ட். நான்கு வருஷத்திற்கு முன்பு இறந்த ஸர்வின்ஸன் கெய்லாட்டின் மனைவி.

"நான் இறந்தபின் எனது கணவனைச் சந்திப்பேன் என்ற நினைவினுல் மிகுந்த சந்தோஷத்துடன் இருக்கிறேன். நான் இந்தப் பூவுலகத்தை விட்டு சூக்ஷம உலகிற்குத்தான் செல்லுவேன். அவர் இங்கிருந்து சென்றதிலிருந்து என்னுடன் பேசிக் கொண்டுதான் இருக்கிருர்."

அவள் புருஷன் சூக்ஷம உலகில் இருந்து ஒரு புஸ்தகம் எழுதிக் கொண்டு இருக்கிருராம். அது அடுத்த உலகத்தைப் பற்றியதாம்.

"கம்யூனி கிராம் என்ற ஒரு யந்திரத்தின் உதவியால் நான் அதை இங்கு பெற்றுக் கொண்டிருக்கிறேன் ஏறக்குறைய அது முடிந்துவிட்டது."

"அந்தப் புஸ்தகம் முடிந்தவுடன் நான் சூக்ஷம உலகிற்குச் சென்று விடுவேன். நான் இறந்து போக மாட்டேன். இங்கிருந்து மற்ருெரு உலகத்திற்குத்தான் செல்லுவேன்," என்று பத்திரிகை நிருபரிடம் கூறியிருக்கிருள்.

200 பற்கள்

கன்ஸாஸ் பட்டணத்திலிருக்கும் மார்த்தா லார்ஸன் என்ற பெண் பல்வலி தாங்கமுடியாமல் பல் வைத்தியரிடம் சென்ருள். வாயைக் கவனித்ததில் அதில் ஒவ்வொரு பக்கத்திலும் வலி இருந்துகொண்டிருந்தது. X-ரே வழியாகச் சோதித்ததில் அவள் வாய் பூராவாகவும் சிறு சிறு பற்களாக நிறைந்திருப்பதைக் கண்டார்கள். 200 பற்களுக்கு மேல் பிடுங்கி அவளைக் குணமடையச் செய்து விட்டார்கள்.

குரங்குக் கிளான்ட்

புதாபெஸ்டில் 83 வயதுள்ள ஜோஸப் லிங்கோவிக்ஸ் என்ற புரொபஸர் தனக்குக் குரங்குக் கிளான்ட் ஆப்பரேஷன் செய்துகொண்டதால், குரங்கினுடைய குணங்கள் எல்லாம் பெற்றுவிட்டார். குரங்கைப்போல் பழ வகைகளைப் புசிப்பதும், குரங்கைப்போல் மாமேறுவதும், அதைப் போலவே சப்தம் செய்வதுமாகக் காலங்கழித்து இப்பொழுது சமீபத்தில் இறந்துவிட்டார்.

இனி

(இ. எம். டிலாபீல்ட் என்பவர் டைம் அன்ட் டைட் (Time and Tide) என்பதில் ஓர் அற்புதமான சிறு கதை. ஆங்கிலத்திலிருந்து அப்படியே தர்ஜமா செய்யப்பட்டிருக்கிறது.)

இதுவரை நடக்காததைப் பற்றி ஒரு கதை எழுதினால் என்ன?—அதைக் கதையின் போக்கில் அறிந்து கொள்ள முடியுமானால்...............

பதினைந்து இருபது வருடங்களுக்கப்புறம்.

ஓல்ட் பெய்லியில் (நியாயஸ்தலம்) நடக்கிறது.

ஒரு பெண் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனையை எதிர்பார்த்து நிற்கிறாள். யுத்த நெருக்கடியிலும் பொது ஜனங்களிடை ஒரு பரபரப்பை உண்டு பண்ணும் ஒரு கேஸ். இதற்கு நீண்ட காலமாகவில்லை. அந்தப் பெண் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டாள்.

சாட்சிக் கூண்டில் நிற்கிறாள். நடுத்தரமான வயது. தலை சற்று நரைத்துவிட்டது. குரல் சாந்தமானது. நல்ல படிப்பாளியினுடையது. தன்னுடைய சொந்தப் புத்திரனைக் கொன்றதாக ஒப்புக் கொள்ளுகிறாள்.

இருந்தாலும் குற்றத்தைப் பற்றிய சாட்சிகள் விசாரித்தாக வேண்டியதுதான்.

இந்தத் தேதியில் துப்பாக்கியால் சுடப்பட்டது.......................இன்னின்னார் குற்றவாளியைத் துப்பாக்கி கையிலிருக்கும் பொழுது பார்த்தார்கள்....... அவள் பத்தொன்பது வயதுள்ள புத்திரன் படுக்கையில் இறந்து கிடக்கிறான், தூங்கும் பொழுது மண்டையில் சுடப்பட்டு. குற்றவாளியும் போலீஸாரிடம், 'எனது மைக்கேலைக் கொன்றேன்' என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறாள்.

• • •

ஜட்ஜ்:—வயது சென்றவர்—முன் பக்கமாகத் தலையைச் சாய்த்து,

“ஏ குற்றவாளியே! உனது புத்திரனைக் குரோதத்தினால், நீ ஆலோசித்துக் கொன்றாய் என்று உன்மேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று நீ அறிகிறாயா?

“ஆம்! பிரபுவே!”

“நீ குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளுகிறாயா?”

“நான் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளுகிறேன் பிரபுவே”

இச்சமயத்தில் கோர்ட் நிசப்தமாக இருக்கிறது.

“உன்மீது மரணத் தீர்ப்புச் சொல்லாமலிருப்பதற்குக் காரணம் ஏதாவது உண்டா?”

“இல்லை”

“ஒன்றுமில்லையா? இந்தப் பயங்கரமானதும் இயற்கைக்கு விரோதமானதுமான ஒரு குற்றத்தைச் செய்யத் தூண்டும் காரணம் ஏதேனும் இல்லையா?”

குற்றவாளியின் கண்கள் கலங்குகின்றன. தேம்பியழுவதில் உடல் முழுவதும் குலுங்குகிறது. பேசவேண்டும் என்று சைய்கை செய்கிறாள். எதையோ ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறாள்.

ஒரு தம்ளரில் ஜலம் கொடுக்கிறார்கள்.

கடைசியாகப் பேச முடிகிறது.

• • •

“பிரபுவே—இந்த யுத்தந்தான் காரணம். முன்பு நடந்த யுத்தம் என் நினைவிலிருக்கிறது. அதுதான் அந்த உலக மகாயுத்தம் என்று சொல்லுகிறார்களே அதுதான். எனது தகப்பனார் அதில் ஈடுபட்டார். அவருடைய இரண்டு கால்களும் போய்விட்டன. அவர் இறந்து போகவில்லை. முடவனாக வாழ்ந்து வந்தார். யுத்தத்தின் கடைசி வருஷத்தில் எனது கணவனும் சென்றார். அவருக்கு ஷெல்லினால் மூளை கலங்கிவிட்டது. அதற்கப்புறம் குணப்படவேயில்லை. ஒரு வேலையையும் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. அவருக்காகவும் எனது மகனுக்காகவும் நான் உழைக்க வேண்டியதாயிற்று. என் அதிர்ஷ்டம்; என்னால் வேலை செய்ய முடிந்தது. எனது மகனுக்குக் கல்வி போதிக்க முடிந்தது. அவன் குழந்தையாக இருக்கும்பொழுது.......

மறுபடியும் பேச முடிந்தது.

“1914 வருஷத்தில் நடந்த யுத்தம் எனக்கு நினைவிலிருக்கிறது. அவர்கள் இருவருக்கும் அது என்ன கொடுத்தது என்று தெரியும். இந்த யுத்தம் வந்தவுடன் எனது மகனும் அதற்குச் செல்லவேண்டும் என்று எனக்குத் தெரியும். அவனை அது என்ன செய்யும் என்று யோசித்தேன். அதிலிருக்கும் பாஷாணப் புகை, காயங்கள், கொலைகள் அவைகள் மட்டுமல்ல, அதைப்பற்றிச் சொல்லவரவில்லை. சாந்தமாக இருக்கும்படி, மற்றவரிடம் அன்பு செலுத்தும்படி அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தேன். நாசம் செய்வதும் பின்னப்படுத்துவதும் தப்பிதம் என்று போதித்திருந்தேன். பகைமை தப்பிதமானது என்று கற்பித்திருந்தேன். அவனால் யுத்தத்தைத் தாங்க முடியாது......................அவனைப் போல் இந்தத் தலைமுறையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

இப்படிச் செய்வதுதான் நல்லதென்றுபட்டது. நான் என் மகனைக் கொன்றேன். அவன் தூங்கும்போது அவனுக்குத் தெரியாது...............ஒரே நிமிஷந்தான். அது சண்டைக்குப் போகிறமாதிரியல்ல..................”

* * *

“ஒரே வழிதான் உண்டு. கோர்ட்டில் உள்ளவர்கள் தீர்ப்பு அப்படித்தான் ஆகவேண்டும் என்று மனதிற்குள் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்கள்.

வைத்திய நிபுணர்களை யழைத்து அவள் செய்கைகளுக்கு அவள் உத்தரவாதியல்ல என்று காண்பிக்க முடியுமா? அதாவது பைத்தியக்காரி என்று.

ஒருவேளை முடியும்.

அவள் கொலை செய்தாள். அவள் அதற்குச் சொல்லும் காரணம், அதாவது போன யுத்தம் நினைவிலிருக்கிறது என்பது..................

* • *

அந்த வயோதிக ஜட்ஜ் கைகள் நடுங்கிக்கொண்டு கறுப்புக் குல்லாயை வாங்கிக் கொள்ளுகிறார். அவருக்கும் போன யுத்தம் நினைவிலிருக்கிறது. “கொலையும் பைத்தியமும்..............கொலையும் பைத்தியமும், போன யுத்தத்தை நினைவில் வைத்திருக்கிறவர்கள்..............”

பேரறிஞர் பெர்னார்டு ஷா

(டாக்டர் ஸஸைதார் ஸின்ஹா)

மேல்நாட்டுப் பிரபல நாடகாசிரியரான பெர்னார்டுஷாவின் பிரசித்திக்குக் காரணந்தான் என்ன என்று கேட்டால் அதற்குப் பதில் எளிதில் கூறிவிட முடியாது. எல்லோரும் அவரை ஒருமுகமாகப் புகழுகிறார்கள். ஆனால் காரணங்கள் வெவ்வேறு. சிலர் அவருடைய நாடகத்திற்காகப் புகழுகிறார்கள். சிலர் அவருடைய பொதுவுடைமைக் கொள்கைகளுக்காகப் புகழுகிறார்கள். சிலர் அவருடைய, அற்புதமான வாண வேடிக்கைபோன்ற, நடையைப் புகழுகிறார்கள். சிலர் அவருடைய ஹாஸ்யத்திற்காக ரஸிக்கிறார்கள். பலர் அவர் எதற்கும் இடக்கான பதில் கொடுக்கும் சொல்திறனில் மனதைப் பறி கொடுக்கிறார்கள். ஆனால் இவை எல்லாவற்றிலும் முக்கியமாக, முக்கால்வாசி ஜனங்கள், அவரைத் தப்பிதமாக அர்த்தப்படுத்திக்கொண்டு, எல்லோரும் புகழும் காரணத்திற்காகத் தாங்களும் கூடப் பாடுகிறார்கள்.

இலக்கிய உலகத்திலே காரணந் தெரியாமல், புகழுடன் பிணிக்கப்பட்டவர்களுள், தப்பிதமாக ரஸித்துக்கொண்டே புகழப்படுகிறவர்களுள், ஷேக்ஸ்பியரைப் போல் பெர்னாட்ஷாவும் ஒருவர்.

ஷா எப்பொழுதும் பொதுஜனக் கண்ணோட்டத்திலேயே இருந்து வருகிறார். பொதுஜனங்களை வசீகரிக்க ஏற்படும் சந்தர்ப்பங்களை அவர் ஒருநாளும் தவறவிடுவதில்லை. அசட்டுக் கூச்சமும் பொய் நாணமும் அவரிடம் மருந்திற்குக்கூடக் கிடையாது. அவரைப் புரிந்துக் கொள்ளக்கூடிய சக்தியில்லாத பலர் அவருடைய நாடகத் திறமையிலே, வாக்குச் சாதுரியத்திலே, அவருடைய தீக்ஷண்யமான ஆராய்ச்சித் திறனிலே மலைத்து விடுகிறார்கள். அவருடைய நடையின் கதியும் சக்தியும்,—அதே ஒரு தனிப்போக்கு. அறிவு உலகத்திலே 'ஷேவியன் சொல் வன்மை, ஹாஸ்யம்' என்ற ஒரு தனிப்பிரிவு வந்துவிட்டது. ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமாக ஷாவின் பெருமைக்குக் காரணம், புது நாகரிக உலகத்தின் சமூகப் பிரச்னைகளுக்குத் தனது தீக்ஷண்யமான ஆராய்ச்சித் திறமையினால் ஒரு புதுமாதிரியான, திடுக்கிடும்படியான, ஆனால் மறுக்க முடியாத அர்த்தம் கொடுப்பது தான். அதில் அவருடைய போக்கே ஒரு தனிப்போக்கு. அவரைவிட அறிவாளிகள் பலர் இருக்கலாம். அவ்வரைவிட விஷயங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் அறிந்த விஷய அகராதியாகப் பலர் இருக்கலாம். பொதுஜனங்கள் அறிந்துக் கொள்ளக்கூடிய நிலைமையிலே, குழப்பங்கள் இல்லாமல் சொல்லுவதில் ஷாவைத் தவிர வேறு கிடையாது.

ஷாவினுடைய மேதை பலதிறப்பட்டது. இதனால்தான் ஷாவின் பெருமையை எல்லோரும் பூராவாகக் கிரகிப்பதில்லை.

ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த துறையில் அவரைப் புகழ்வதனால் இலக்கியத்தில் அவருக்கு எந்த இடம் என்பதை பூராவாகக் கிரகித்துக் கணிக்க முடிவதில்லை. இதை நன்றாக அறிந்தால்தான் அவருடைய மேதை நன்கு புலப்படும். இந்த மாதிரியான பலதிறப்பட்ட அவருடைய சக்தியின் அடிப்படையான ஒற்றுமை என்னவென்று அறிந்துக் கொள்ள வேண்டும். அவருடைய கிரந்தங்களில் ஏதாவது ஒற்றுமை காணப்படுகிறதா? அதென்ன ஒற்றுமை? இலக்ஷியத்திலா? ஷாவிற்கு இலக்ஷியம் ஏதும் இருக்கிறதா? அல்லது இருப்பதை உடைக்கும் ஒரு எதிர்மறைத் தத்துவம்தானா? இவைதாம் அடிப்படையான கேள்வி. ஆனால் ஒன்று மாத்திரம் திட்டமாகத் தெரிகிறது. இருக்கிற தர்மமும் நியாயமும் நல்லதுதான் என்ற அசட்டுத்தனமான நம்பிக்கை ஷாவிற்குக் கிடையாது. 19-ம் நூற்றாண்டுக் கிரந்தகர்த்தாக்களான டிக்கன்ஸும், ரஸ்கினும் இப்பொழுது இருக்கும் சமூகக் கோளாறுகளை, சமூகச் சிக்கல்களை அறிந்துதான் இருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் வந்த ஆராய்ச்சித் திறனும், தீக்ஷண்யமான தரிசனமும் அவர்களுக்குக் கிடையா. ஷா இவர்களுக்குப் பின் வந்ததால் இந்த வசதிகளைப் பெற அதிர்ஷ்டமிருந்தது. இந்த நூற்றாண்டிற்குள் சமூகத்தைப் பற்றிய, அதன் ஊழல்களைப்பற்றிய, அறிவு மிகவும் அபாரமாக வளர்ந்து விட்டது. ஐரோப்பிய சமூகத்தைப் பிடித்த நோய் இன்னதென்று திட்டமாகச் சில பெரியார்கள் கூறிவிட்டார்கள். ஷாவிற்கு அந்த மேதாவிகளின் அறிவுப் பொக்கிஷம் கிட்ட வசதி இருந்தது. ஷாவின் மேதையை நிரந்தரமாகக் கணிப்பதற்கு அவருடைய கொள்கைகளுக்கு ஆதாரமான மூவரை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். ஒருவர் இப்ஸன் என்ற நாடகாசிரியர். இன்னொருவர் பொதுவுடைமைக்காரர்களின் வேதம் போன்ற 'முதல்' (Capital) என்ற பெரிய கிரந்தத்தை இயற்றிய கார்ல்மார்க்ஸ். மூன்றாமவர் அமெரிக்காவில் இருந்து 19 நூற்றாண்டின் இறுதியில் பொதுவுடைமைக் கிரந்தங்களை இயற்றிய ஹென்றி ஜார்ஜ் என்பவர்.

ஷாவின் சிருஷ்டிக் கலை

இப்ஸன் என்பவர் ஷாவிற்கு இரண்டு விதத்தில் வழி காண்பித்திருக்கிறார். பிரஞ்சு நாடகத்தைக் காப்பி யடித்துக் கொண்டு இருந்த ஆங்கில நாடக இலக்கியத்திற்கு ஒரு புதிய வழியைக் காண்பிக்க உதவிசெய்தார். அதிலும் முக்கியமாக நடப்பிலிருக்கும் சமூகப் பிரச்னைகளை மேடையில் காண்பிக்கும் ஒரு புதிய வழக்கத்தை உண்டுபண்ணினார். அப்படியே நேராக வாழ்க்கையின் உயிர் நாடியை நாடகத்தில் சிருஷ்டிக்க இப்ஸன் காட்டியவழி ஷாவிற்குப் பெரிதும் பயன்பட்டது. ஷா நாடகத்தைச் சமூகப் பிரச்னைகளை எடுத்துக் காட்டும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக உபயோகித்தார். ஷாவினுடைய நாடகங்கள் பிரிட்டிஷ் நாடக பரம்பரைக்கு ஒரு புரட்சி. வாழ்க்கையை 'அப்பட்டமாக' அதன் பயங்கர உண்மைகளுடன் எடுத்து அப்படியே சித்திரித்தார். அவருடைய நாடகங்களே ஒரு புரட்சி. அநியாயத்தையும், வறுமையையும், பொய் மாய்மாலத்தையும் எதிர்க்கும் எவையும் புரட்சிதான்.

இலக்கியத்தின் ஒற்றுமை

இப்ஸனுடைய வழிகள் நாடகக் கலையின் திருஷ்டியை மாற்றுவதற்கு ஷாவிற்குப் பெரிதும் உபகாரமாயிருந்தது.

ஷாவினுடைய கிரந்தங்களின் ஒற்றுமையைப் பூராவாக அறிவதற்கு, 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த சமூக வாதிகளான கார்ல் மார்க்ஸையும், ஹென்றி ஜார்ஜ் என்பவரையும் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆரம்பத்தில் ஷாவிற்கிருந்த நிலைமையும் அவருடைய கஷ்டங்களும் ஓரளவு இந்தப் புதிய கொள்கைகளுக்கு அவருடைய உள்ளத்தைப் பண்படுத்தின என்று கூறவேண்டும். ஆனல் வறுமையின் கொடுமையை இவரைவிட அதிகமாக அனுபவித்தவர்கள் எத்தனையோ பெயர் இருக்கிருர்கள். இந்தக் கொள்கைகள் அவர்களுக்குத் தோன்றவில்லை. இதற்கு ஷாவின் மனப்போக்கும் புத்தியின் நாட்டமும் தாம் காரணம். முதல் முதலாக இம்மாதிரியான புதிய கொள்கைகளுக்கு வசப்பட்டவர், ஐரோப்பிய கிரந்த கர்த்தாக்களில் இவர் ஒருவரே. ஷா ஓரிடத்தில் சொல்லுகிற மாதிரி "19 நூற்றாண்டின் இலக்கியம் எவ்வளவுதான் வாழ்க்கையின் சங்கடங்களைக்கண்டு, அதைப் பற்றி எழுதிய போதிலும், புரட்சி எண்ணங்களை உண்டாக்கும் கிரந்தங்களே அல்ல." மார்க்ஸ் காலத்திற்கு முந்தியவைஎன்பதைத்தானே எடுத்துக் காட்டி விடுகின்றன. மார்க்ஸ் இலக்கியத்தைப் படியாதிருந்தாலும் அவருடைய எண்ணங்களை இப்பொழுது எத்தனையோ நூலாசிரியர்கள் பிரதிபலிக்கிருர்கள். இதுதான் இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம்.

ஹென்றி ஜார்ஜினுடைய 'நாகரிக வளர்ச்சியும் வறுமையின் கொடுமையும்' என்ற புத்தகந்தான் புதிய நாகரிகத்தில் ஏற்படும் வறுமையின் உண்மையான அம்சங்களை, சமூகத்தில் அதற்கு இருக்கும் இடத்தை அவருக்கு எடுத்துக்காட்டியது. இந்தப் புதிய நாகரிகத்தில் வளர்ச்சி என்பதற்கும் வறுமை என்பதற்கும் அதிக வித்தியாச மில்லை. சிலருக்கு வளர்ச்சி, பலருக்கு வறுமை. வறுமையில்லாத காலம் இது வரை மனித சரித்திரத்தில் கிடையாது. ஆனல் அது இப்பொழுது நாகரிகத்திலே காணப்படும் அவ்வளவு கேவலஸ்திதிக்கு வரவில்லை. கார்ல்மார்க்ஸ் இந்தத் தத்துவத்தை இன்னும் அதிகத் தெளிவுடன் விளக்கினர். மார்க்ஸ் ஷாவிற்குத் தமது ஆராய்ச்சியின் போக்கைக் கொடுத்தார். ஷா சமூக முன்னேற்றத்தையும் வறுமையையும் பற்றி சம்பந்தப் படுத்தி எழுதுவதோடு நிறுத்திவிட வில்லை. அவர் வறுமையின் ஆழத்தை நன்கு கணித்தார். இதனல் தான் அவர் பொதுவுடைமைக் கொள்கைகளுக்குள் ஐக்கியப் பட்டார். முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த நாகரிகம், இம்மாதிரியான பொருளாதார அமைப்பிலேயே வளர்ந்து கொண்டு போனல் நாசமடைவது நிச்சயம் என்று கண்டார். அவருடைய நண்பரான பிளின்டர்ஸ் பெட்ரிக் புதைபட்டுப் போன ஆறு நாகரிங்களைத் தமது சரித்திர ஆராய்ச்சியினல் கண்டு பிடித்து வெளியிட்டிருக்கிருர். அதை மேற்கோளாக எடுத்துக்காட்டி எழுதுவதில் ஷா சளைப்பதே இல்லை. அம்மாதிரி வளர்ந்த நாகரிகங்கள் எல்லாம் உன்னத நிலைக்கு வந்ததும் நசித்துப் போனதற்குக் காரணம் என்ன? அன்னியர்களைத் தடுக்கச் சக்தியில்லாமலா? அல்லது உள்ளிருந்த குழப்பங்களை தடுக்கப் போதிய பலம் இல்லாமலா? சரித்திரம் எத்தனையோ காரணங்களைச் சொல்லிக் கொண்டு இருக்கும். அதற்கு ஒரே காரணம்தான். சமூகத்தைச் செல்வந்தர் என்றும் ஏழை என்றும் பிரித்து வைக்கும் பொருளாதார அமைப்புத்தான் காரணம். சிலருடைய செல்வமும் பலருடைய வறுமையுந்தான் நாகரிகத்தை அப்படியே விழுங்கி விட்டது.

நியாய உணர்ச்சி

இலக்கியத்தைப் பற்றிப் பல தத்துவங்கள் உண்டு. இலக்கியத்தினல் என்ன உபயோகம், என்ற பிரச்னை எழுந்தால், உபயோகம் என்ன வேண்டியிருக்கிறது, மனிதனின் கலையுணர்ச்சியைச் சாந்தி செய்தால் போதாதா, என்று கேட்கிருர்கள் பல ரஸிகர்கள். கலை அழகின் பிரதிமை. அதில் உபயோகத்தை எதிர் பார்ப்பவன் கோவிலில் போய்த் தேங்காய் உடைத்து விட்டு கடவுளிடம் பேரம் செய்வதை ஒக்கும் என்று அவர்கள் சொல்லுவார்கள். ஷா இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ளுகிறது இல்லை. இலக்கியம் மனிதனின் கலையுணர்ச்சியை மட்டும் சாந்தி செய்யும் ஒரு போதை வஸ்துவல்ல. அதற்கு ஒரு மகத்தான பொறுப்பு இருக்கிறது, உபயோகம் இருக்கிறது. இலட்சியத்தின் சக்தியாலே ஒரு புதிய உலகத்தையே சிருஷ்டித்து விடலாம். அந்தப்பொறுப்பை வீணே விரயம் செய்கிறவன் இலக்கிய கர்த்தா அல்ல என்ற ஒரு கொள்கையை யுடையவர் ஷா. அதனல் அவருடைய இலக்கியம் முழுவதும் பிரசார மனப்பான்மையில் பிறந்தவை. முதல் முதலாக ஷாவை வாசிப்பவர்களுக்கு அவர் சமூகக் கட்டுப்பாடுகளை அனுபாசமாக உடைத்தெறிவதுதான் படும். அசட்டுத்தனமும் பூமியை ஒட்டிக்கொண்டு இருக்கும் வெறும் லோகாயத வாதமும் அவருக்குப்பிடிக்காது. அதனல் உலக நாசத்தை எதிர்பார்த்து அதில் திளைக்கும் 'அழுக்கிணிச்சித்தன்' (Pessimst) அல்ல. உண்மையிலேயே நசித்துத்தான் போகும் என்று இருந்தாலும், சிருஷ்டியிலும், பரிணமத்திலும் அவருக்கு மகத்தான நம்பிக்கை உண்டு. இப்பொழுதிருக்கும் மனிதவர்க்கம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது நசித்துவிட்டாலும் சிருஷ்டியின் சக்தி இதைவிட இன்னும் ஒரு உன்னதமான வருக்கத்தைக் கொண்டு வராமல் போகாது என்ற அசையாத நம்பிக்கை யுண்டு. 'திரும்பவும் மெதுஸலாவிற்கு' என்ற நாடகத்தில் வரும் லிலித் கூறுகிறமாதிரி "ஜீவகசக்திக்கு முடிவுகிடையாது. கோடிக்கணக்கான நட்சத்திர மாளிகைகளிலே, எத்தனை காலியாகக் கிடக்கின்றன. எத்தனையோ இன்னும் முற்றும் கட்டி முடியவில்லை. ஆனல் எனது எண்ணங்கள் இந்த அகண்டமான ஆகாசங்களை நிறைத்துத் தழுவுகின்றன. அதற்குப்பிறகு என்ன என்ருல் லிலித்திற்குத் தெரியாது. அதற்கு அப்புறம் என்று ஒன்று இருக்கிறது என்று தெரிந்தால் போதாதா. அந்த நம்பிக்கையில் சாந்தி பிறக்கவில்லையா?"

இதுதான் ஷாவின் நம்பிக்கை, அவர் இலக்ஷியம்.

ஆச்சரியமாய் குணமாகும்.
முகப் பருக்கள், அம்மை, வைசூரி இவைகளின் வடுக்கள் டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்ம் கில்லர் சோப்பினல் மாறிவிடும். எல்லாவித சர்ம வியாதிகளும் இச் சோப்பினல் ஆச்சரியமாய்க் குணமாகும். பாஷாணம் சம்பந்தமில்லாதது.
3 சோப் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ. 2—4—0.
3 சோப்புக்கும் குறைந்து வி. பி. பி-யில் அனுப்ப முடியாது,
விலாசம்:- பி. எஸ். பொம்மையா அண்டு கோ., 125, பிராட்வே மதராஸ். 8

காந்தீயமும் பொதுவுடைமையும்

இரண்டிற்கும் உள்ள பேதா பேதங்கள்

திரு. எஸ். கே. பட்டில் 'பம்பாய் க்ரானிக்கலில்' எழுதுவதாவது:—

காந்தீயம் இந்தியாவின் இலக்ஷியம்; இந்தியாவின் குறைகளை நீக்க வல்லமையுள்ளது காந்தீயம் ஒன்றுதான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்தச் சமயத்தில்தான் காந்தீயத்தின் தத்துவத்தை முழுதும் ஆராயவேண்டியது நமது கடமை. ஆழ்ந்து யோசியாதவர்களுக்குக் காந்தீயமும் பாரமார்த்திகமும் ஒன்றுதான் என்றுபடும். ஆனால் உண்மையில் அதன் தத்துவங்களைப் பொருளாதார ரீதிப்படியும் அர்த்தப்படுத்தலாம்.

நூற்றைம்பது வருஷங்களாகச் சில பொருளாதாரச் சூத்திரங்களுக்கு அரசியல் சித்தாந்தங்கள் ஒத்துவரவேண்டும் என்று நாம் நினைத்து வருகிறோம். இதுவரை வந்த அறிவு வளர்ச்சி அதிகமாகப் பொருளாதாரத் துறையிலேயே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது வரை இருந்துவரும் இந்தத் தத்துவங்களுக்கு எல்லாம் காந்தீயம் மேற்பட்டது என்று நினைத்தால், அதுவும் சில பொருளாதார அரசியல் கொள்கைகளுக்கு ஒத்து வருகின்றனவா என்று கவனிக்கவேண்டும்.

ஜாதிச் சண்டை, நாட்டின் செல்வத்தை எப்படி நேர்முறையான வகையில் விநியோகிப்பது என்ற கொள்கைகளைக் கவனிக்குமுன், சரித்திர வளர்ச்சிக்குப் பொருந்திய லோகாயத வாதத்திற்கும் காந்தீயத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனிப்போம்.

லோகாயத சித்தாந்தம்

கார்ல் மார்க்ஸின் அரசியல் பொருளாதாரத் தத்துவம் லோகாயதபூர்வமாகச் சரித்திரத்தின் வளர்ச்சியை அடிப்படையான அஸ்திவாரமாகக்கொண்டு எழுந்தது. அந்த அஸ்திவாரத்தில் நாம் ஒரு பிசகு கண்டுவிட்டால் அந்தத் தத்துவம் முழுவதும் கீழே விழுந்துவிடுகிறது. மண்ணாசை, பொன்னாசை என்ற இரண்டைத் தவிர வேறு ஒரு தூண்டுதல் சக்தியும் மனிதனுக்குக் கிடையாது என்பது கார்ல்மார்க்ஸின் சித்தாந்தம். சிருஷ்டி காலந்தொடங்கி அதுதான் மனித வர்க்கத்தின் சகல அபிலாஷைக்கும் அடிப்படையான காரணமாக இருக்கிறது என்று சொல்லுகிறார். இதுவரை வந்த மனித வளர்ச்சியின் ஒவ்வொரு அம்சத்தையும் துருவிக் கவனித்தால் கடைசியாக இந்த இரண்டு மூலகாரணத்திற்குத்தான் கொண்டுவிடும். சரித்திரத்தின் மகத்தான சம்பவங்கள் எல்லாம் இந்தப் பொருளாதார ஆசையில் எழுந்த செய்கைகளே.

தேசீயம், ஜாதீயம், அன்பு, தயை, என்பனபோன்ற குணங்களும் இந்தப் பொருளாதாரத்தின் ஆசையில் எழுந்த குண வித்தியாசங்களே என்பது கார்ல் மார்க்ஸின் கருத்து. ஹாவலக் எல்லிஸ் மனிதனின் நடத்தை எல்லாம் காம உணர்ச்சியின் விகாசங்கள் என்று நினைப்பதுபோல் கார்ல்மார்க்ஸ் மனிதனுடைய செய்கையும் பொருள் ஆசையை முன்னிட்டு எழுந்தது என்று சொல்லுகிறார்.

மார்க்ஸின் தத்துவம்

மார்க்ஸின் தத்துவம் கொஞ்சகாலமாகத் துருவித் துருவி ஆராயப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகிறது. அதனால் இப்பொழுதும் அதன் தத்துவத்தையும் அதன் நடப்பு முறையையும் பற்றி அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. ஆதியில் மனிதர் நாகரிகமடையாதபொழுது இந்தப் பொருளாசைதான் அதன் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதிகாரணமாக இருந்திருக்கும் என்று ஒப்புக்கொண்டாலும் இப்பொழுது அதைவிடப் பெரிய ஆதர்சங்கள் மனித சமூகத்திற்கு எழுந்துவிட்டன என்று எத்தனையோ அறிஞர்கள் நினைக்கிறார்கள். மனித உள்ளம் எவ்வளவோ பண்பட்டு விட்டது. பூர்விகப் பொருளாதார ஆசை மட்டுந்தான் அவனை மகத்தான காரியங்களைச் சாதிக்கும்படி தூண்டவில்லை.

உலக யுத்தமும் அதன் பிறகும்

1914 வருஷம் ஆரம்பித்த உலக மகா யுத்தம் மார்க்ஸ் தத்துவங்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணியது. ஜனநாயக அரசியல்களும், ஏதேச் சாதிகார அரசியல்களும் எதிர்த்துப் போராடும்பொழுது லட்சக்கணக்கான படைவீரர்கள் தங்கள் உயிரை அப்படியே தியாகம் செய்தது வெறும் பொருளாசையின் மீதில் மட்டுமா? அந்த மகத்தான தியாகத்தின் காரணம் உள்ளத்தில் எழுந்தது. வெறும் உணர்ச்சியற்ற அறிவின் தர்க்க முடிபு அல்ல. இவை

டிராபிகல் கம்பெனியின் விருத்தியை நோக்குங்கள்!

1933-ல் இணையற்ற வெற்றி, முன்னேற்றம்.

ரூ. 1,000-க்கு முதல் மதிப்பு போனஸ் ரூ. 50 முடிவு செய்யப்பட்டது.

1933-ல் புதிதாக 31 லட்சம் ரூபாய்க்கு மேல் பிஸ்னஸ் கிடைபெற்றிருக்கிறது.

சுலபமானதும், லாபகரமானதுமான திட்டமுள்ள பாலிசி வேண்டுமா?

அல்லது மிகுந்த வருமானம் கிடைக்கும் ஏஜென்சி வேண்டுமா?

விவரத்திற்கு இவ்விலாசத்திற்கு எழுதுங்கள்:—

டிராபிகல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

289, எஸ்பிளனேட் 'சென்னை

தான் அந்த யுத்தத்தில் முக்கியமான சக்திகளாகி நின்றன.

அங்கு உயிரை அர்ப்பணம் செய்த ஒவ்வொரு வீரனையும் எதேச்சாதிகார அரசியல்கள் பிடர் பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தின என்பது நம்ப முடியாத விஷயம். இம்மாதிரி பயங்கரமான சண்டையினால் பஞ்சமும் பாழ்வெளியும் தவிர வேறு ஒன்றும் கிடையாது என்று தெரிந்திருந்தும் கோடிக் கணக்கான மக்கள் உயிரைப் பலி கொடுக்க முன் வந்தது வெறும் பொருளாசையை முன்னிட்டு என்றால் அதை யாரால் நம்பக்கூடும்.

இந்த உலக யுத்தத்தினால் ஏற்பட்ட மன மாற்றங்கள், போரைப் பற்றிய அபிப்பிராயங்கள் மார்க்ஸின் தத்துவங்களுக்கு ஒத்து வரவில்லை. மார்க்ஸின் சரித்திர லோகாயதத்தைச் சந்தேகாஸ்பதமான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது இந்த யுத்தம். நிரந்தரமான குழப்பங்களைப் போக்கி ஒரு வழி ஏற்படுத்தவேண்டும் என்பது வெகு அவசியமாகிவிட்டது. மார்க்ஸின் திட்டத்தால் இந்த நிலைமையை நிவர்த்திக்க ஒரு வழியும் சொல்ல முடியவில்லை.

பதினைந்து வருஷகாலமாக மார்க்ஸின் தத்துவங்களை ரஷ்யா நடத்திப் பார்த்ததில் புதிய பிரச்னைகள் எத்தனையையோ இழுத்து விட்டுவிட்டன. தொழில் வகுப்பின் புரட்சியால் உலகத்தை மோக்ஷ சாம்ராஜ்யமாக்க முயன்றும் முடியவில்லை. இதற்குப் பதிலாக, புரட்சி, ரஷ்யாவை மட்டும்தான் மாற்ற முடிந்தது. அதிலும் சர்வதேச ஒற்றுமையைக் கனவு கண்ட மார்க்ஸ் தத்துவம், ஒரு முரட்டுத்தனமான அசைக்கமுடியாத தேசியத்தை ரஷ்யாவில் உண்டுபண்ணிவிட்டது. அந்த தேசியம் தத்துவத்தையே பாழாக்கிக் கொண்டு இருக்கிறது.

உலக சமாதானம்

இந்தப் பிரச்னைகளுக் கெல்லாம் ஒரு முடிவு புரட்சியினால் வரும் என்று உலகம் வீணாகக் கனவு கண்டது. இதற்குப் பதிலாக இத்தாலியாவில் பேஸிஸமும், ஜெர்மனியில் தேசியப் பொதுவுடைமையும் நடைமுறையில் அனுஷ்டித்துப் பார்த்தாகிவிட்டன. எல்லா மக்களுக்கும் சுகவாழ்வைக் கொடுக்கும் ஒரு வழியும் தென்படவில்லை. உலகப் பிரச்னைகளுக்கு ஒரு முடிவும் வரவில்லை. இந்தச் சமயத்தில்தான் காந்தீயம் தனது புதிய விடையுடன் வந்து நிற்கிறது. அது தனிப்பட்ட கூட்டத்தின் பொருளாதார நன்மையை நாடுவது அல்ல. அதற்கும் மார்க்ஸின் தத்துவத்திற்கும் அடிப்படையான வித்தியாசங்கள் இருக்கின்றன.

மார்க்ஸின் தத்துவம் நாகரிகமடையாத, பண்படாத பூர்வீக மனிதனின் உள்ளத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு எழுந்தது. காந்தீயம் இதுவரை மனித வளர்ச்சியில் ஏற்பட்ட நன்மை தீமைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இருக்கிறது. இதனால் இயற்கையாகக் காந்தீயத்திற்கு ஒரு வசதி இருக்கிறது. மனித வளர்ச்சியில் ஏற்பட்ட தோல்விகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இருப்பதால் காந்தீயத்திற்கு இந்தச் சௌகரியம் எளிதில் கிடைத்துவிட்டது. இதை ஆழ்ந்து அறிந்துக்கொண்டால் காந்தீயம் பழைய வைதிக முறைகளில் இல்லாத ஒரு புதிய அளவை நிர்ணயிக்கிறது என்பது தெரியவரும்.

மார்க்ஸின் தத்துவத்தில் உணர்ச்சிக்கு இடமில்லை. அறிவு அதையப்படியே விழுங்கி விடுகிறது. இதனால் மனிதனது சுய ஆசையை ஆதாரமாகக் கொண்டு எழுகிறது. இம்மாதிரியாகப் பொருளாதார அர்த்தம் ஒவ்வொன்றிற்கும் கற்பித்துக் கொண்டு இருந்தால் அது, பரஸ்பரத் துரோகத்தையும் வகுப்புச் சண்டையையும்தான் அதிகமாக வளர்க்கும். அதைத் தடுக்க முடியாது. மார்க்ஸினுடைய தத்துவம் மனிதனுடைய உணர்ச்சிகளை எல்லாம் ஒரே பாதையில் நிரந்தரமாக அமுக்கி அதன் சுதந்திரத்தைப் போக்கி விடுகிறது.

அடிப்படையான பேதம்.

இம்மாதிரியான ஒரு பாதையிலிருந்து நீக்கி ஒரு புதுவழியில் செலுத்துவதற்காகத் தான் காந்தீயம் எழுந்திருக்கிறது. இந்தப் புதிய வழி அன்பின் மார்க்கம், சத்தியத்தின், ஒன்றுபட்ட ஒற்றுமையின் மார்க்கம். இவை எல்லாவற்றிற்கும் எதிரிடையானதுதான் மார்க்ஸின் தத்துவம். காந்தியத்தைப் போல் மனிதனை ஓர் உன்னத நிலைக்கும் கொண்டுவர மார்க்ஸின் தத்துவத்தால் முடியாது. அதைத் தடை செய்கிறது.

மார்க்ஸின் தத்துவத்தில் சமூகம் நிரந்தரமாகச் சண்டையிட்டுக் கொண்டே தான் இருக்க முடியும். விரோதத்தினால் அன்பை வளர்க்க முடியாது; சந்தேகத்தினால் நம்பிக்கையை உண்டாக்க முடியாது. மனிதனுடைய மனதில் அமோகமான பொருளாசையை வளர்த்து விட்டால் அதைச் சுலபத்தில் நீக்கி விட முடியாது. பொருளாசையைக் கிளப்பிவிடும் இந்த வழியை ஒரு நாளும் கட்டுப்படுத்த முடியாது.

மார்க்ஸின் தத்துவத்தின் குறைகள்

காந்தீயம் சத்தியத்தினாலும் அன்பினாலும் பெரிய தியாகத்திற்கு மனிதனைப் பண்படுத்தி விடுகிறது. மார்க்ஸின் தத்துவத்தால் இதைச் செய்யவே முடியாது. பொருளாசையைப் பெரிய வாழ்க்கை இலக்ஷியங்களுக்குக் கீழ்ப்படுத்துவதினால் சமூகத்தையே ஓர் உன்னத நிலைக்குக் கொண்டுவர முற்பட்டு நிற்கிறது. வகுப்புச் சண்டை ஏற்படக்கூடிய நிலைமைகளை அடியோடு ஒழித்துவிடுகிறது. காந்தீயம் தன்னைசையைத் தவிர்த்து மனிதனை ஓர் உன்னத நிலைக்குக் கொண்டுவருகிறது.

மார்க்ஸ் தத்துவத்திற்கும் காந்தியத்திற்கும் உள்ள அடிப்படையான வேற்றுமை, வாழ்க்கையானது தனிப்பட்ட வகுப்பின் பொருளாசை என்ற கொள்கையில்தான். இந்த மாதிரியான ஆசைதான் நிரந்தரமான வகுப்புச் சண்டைக்குக் காரணம்.

ஊழியன் சந்தா.

உள்நாடு வருடச் சந்தா	ரூ.	6–0–0
,, ஆறு மாதங்கட்கு	,,	3–0–0
வெளிநாடு வருடச் சந்தா	,,	10–0–0
,, ஆறு மாதங்கட்கு	,,	5–0–0

காரியஸ்தர்,
ஊழியன் ஆபீஸ்,
56, தம்புசெட்டித் தெரு,
சென்னை.

வைட்டமின்

(உடலுக்கு உரம் அளிக்கும் உணவுச் சத்து)


(மயிலை. சீனி வேங்கடசாமி)

Vitamin B. (இ வைட்டமின்)

(சென்ற இதழில் (A Vitamin) அ வைட்டமினைப் பற்றி எழுதினோம். இப்பொழுது, இரண்டாவதாகிய (B Vitamin) இ வைட்டமின் என்பதைப்பற்றி எழுதுவோம். (குறிப்பு:— வைட்டமின்களுக்கு ஆங்கில பாஷையின் எழுத்துகளின் பெயரைச் சூட்டி Vitamin A, B, C, D, என்று பெயரிட்டிருக்கிறார்கள். அம் முறையையொட்டியே, தமிழில் சொல்லும்போது, தமிழ் உயிரெழுத்தின் குற்றெழுத்துக்களின் பெயரைச் சூட்டி அ, இ, உ, எ, வைட்டமின்கள் என்று பெயரிட்டிருக்கிறோம். எனவே, ஆங்கிலத்தில் சொல்லப்படும் B Vitaminக்குத் தமிழில் இ வைட்டமின் என்று பெயர்.)

Vitamin B (இ வைட்டமின்.) வைட்டமின்களில் மிகவும் முக்கியமும் அவசியமுமானது இந்த வைட்டமின் தான். பொதுவாகக் கூறுமிடத்து எல்லா வைட்டமின்களைப் போலவே, இதுவும் உடம்பை வளர்ப்பதற்கும், உடம்பில் அன்றாடம் உண்டாகிற தேய்வு கழிவுகளை நிரப்புவதற்கும் அவசியமானது. சிறப்பாகக் கூறுமிடத்து இதன் உபயோகங்கள் பல. இந்த (Vitamin B) இ வைட்டமின், மூளையையும் நரம்புகளையும் சௌக்கியமாயும் பலமுடையதாயும் வைக்கிறது. இருதயம், ஈரல், குண்டிக்காய், (Kidney), என்னும் இவ்வுறுப்புகளுக்குப் பலங்கொடுத்து அவைகளை நன்னிலையில் வைக்கிறது. உடம்பிலுள்ள தசைக்கட்டுகளையும் ஜீரணக் கருவியாகிய குடல்களின் தசைக்கட்டுகளையும் பலப்படுத்துகிறது. இந்த வைட்டமின் பசியை உண்டாக்கவும் உண்ட உணவு சரியானபடி ஜீரணிக்கவும் உதவி செய்கிறது. சுருக்கமாகக் கூறுமிடத்து உடம்பில் உள்ள இராஜ கருவிகளாகிய மூளை, நரம்பு, இருதயம், ஈரல், குடல் முதலிய உறுப்புகளைப் பலப்படுத்தி அவற்றை ஆரோக்கியமுடையவைகளாகச் செய்கிறது.

இந்த வைட்டமின் உடம்பில் இல்லையானால், அஜீரணம், மலச்சிக்கல், பேதி முதலியவை உண்டாகும். நரம்புகளும் தசைக்கட்டுகளும் பலவீனமடையும். தொத்து நோய்களைத் தடுத்துக் கொள்ளும் சக்தி குறைவுபடும். பெரி பெரி (Beri beri) என்னும் நோய் உண்டாகும்.



பப்பிங் பில்லி என்ற பழைய காலத்து ரயில் வண்டி ஆஸ்திரேலியாவில், மரக் கட்டைகளைக் கொண்டு வர இன்னும் உபயோகப்படுகிறது.

—N. I. A.

[இனி, இந்த இ வைட்டமின் (Vitamin B) எங்கெந்த ஆகாரப் பொருள்களில் இருக்கிறது என்பதைக் கூறுவோம்.] இந்த வைட்டமின், கம்பு, சோளம், கேழ்வாகு, கோதுமை, அரிசி, பருப்பு, பயறு வகைகளிலும், பால் முட்டைகளிலும், ஆடுமாடுகளின் உறுப்புகளாகிய ஈரல், மூளை முதலியவைகளிலும் காணப்படுகிறது.

இந்த வைட்டமின் எப்படி உண்டாகிறது என்பதைச் சொல்லுவோம். மரம் செடி கொடிகளாகிய தாவரங்கள் பூமியிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் இந்த இ வைட்டமினை (Vitamin B) கிரகிக்கின்றன. ஆகவே, இந்த வைட்டமின் தாவரங்களில் அதிகமாகவும் குறைவாகவும் இருப்பது, அவைகளுக்கு இடப்படும் எருவை (உரத்தை)ப்பொறுத்ததாயிருக்கும். இவ்விதம் பூமியிலிருந்தும் வாயுவிலிருந்தும் செடிகளால் கிரகிக்கப்படுகிற இந்த இ வைட்டமின் (Vitamin B) முக்கியமாகத் தாவரங்களின் பழங்களிலும், பருப்புகளிலும், விதைகளிலும் அதிகமாகக் காணப்படுகிறது. பசுமையான இலைகளிலும் (கீரைகளிலும்) இந்த வைட்டமின் சிறிது உண்டு. ஆகவே, இலை தழைகளையும், பழம், விதை, கொட்டைகளையும் தின்று ஜீவிக்கும் பிராணிகளின் உறுப்புகளில் இந்த வைட்டமின் போய்ச் சேருகிறது. இந்த வைட்டமின் அதிக வேலை செய்கிற மூளை, இருதயம், ஈரல், குண்டிக்காய் முதலிய உறுப்புகளுக்கு அதிகமாகத் தேவையாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோமல்லவா? ஆகையால், இந்த வைட்டமின் தாவரங்களையுண்ணும் மிருகங்களின் இருதயம், ஈரல் முதலிய பாகங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இது போலவே, ஆடுமாடுகளின் பாலிலும், பறவைகளின் முட்டையிலும் இந்த வைட்டமின் காணப்படுகிறது.

இந்த வைட்டமின் மிக முக்கியமானதும் அவசியமானதுமாயிருக்கிறபடியால், இதைப்பற்றி இன்னும் விரிவாக எழுதுவோம். இந்த இ வைட்டமின் (Vitamin B) அரிசி, கோதுமை, கம்பு, சோளம், கேழ்வாகு முதலிய தானிய வகைகளில் இருக்கிறது என்று சொன்னோமல்லவா? இந்தத் தானியங்களில் உள்ள தவிடு எனப்படும் பாகத்தில்தான் இந்த வைட்டமின் இருக்கிறது. அதாவது உமிக்குக் கீழேயும் மணிக்கு மேல் பாகத்திலேயும் உள்ள பாகத்தில் இருக்கிறது. எனவே, அரிசித் தவிடு, கோதுமைத் தவிடு முதலிய தவிடுகளில் இந்த வைட்டமின் உண்டு என்பதை அறியவேண்டும். ஆனால், தவிடு போக்கப்பட்ட கோதுமை மாவு, அரிசிமாவுகளில் இந்த வைட்டமின் கிடையாது. நெல்லை மெஷினில் இட்டுத் தீட்டுவதால் (மெஷின் குத்தல் அரிசி)

அரிசியின் மேலுள்ள தவிடு அறவே எடுபட்டுப் போகிறது. ஆகவே மெஷின் குத்தல் அரிசியில் இந்த வைட்டமின் அறவே கிடையாது. அதுபோலவே, மெஷினில் குத்தி எடுக்கப்பட்ட கோதுமையிலும் இந்த வைட்டமின் அறவே எடுபட்டுப் போகிறது. ஆனால், கைக்குத்தல் அரிசியில் (உலக்கையால் குத்தப்படும் அரிசியில்) இந்த வைட்டமின் எடுபடுகிறதில்லை. கைக்குத்தல் அரிசியையும் நாம் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். ஏனென்றால், அரிசியின் மேல் ஒட்டியிருக்கும் தவிடு தண்ணீரில் கரைந்துவிடும் தன்மையது. ஆகையால், கைக்குத்தல் அரிசியைக்கூட தண்ணீரில் நன்றாய்ப் பிசைந்து பல முறைக்கழுவி விட்டால் தவிட்டிலுள்ள இ வைட்டமின் (Vitamin B) எடுபட்டுப் போகிறது என்பதை வாசகர் கவனிக்க வேண்டுகிறேன். பழந்தமிழ்த் தாய்மார், சிறுவர் சிறுமிகளுக்குத் தவிட்டை வெல்லத்தில் பிசைந்து உண்ணக் கொடுப்பது வழக்கம். இதைத்தின்றும் சிறுவர் இந்த வைட்டமினைப் பெற்று உடல் உரத்துடன் தேகாரோக்கியம் மிகுந்தவர்களாய் இருந்தார்கள் என்பதில் ஆச்சரியமில்லை. (இதில் இன்னொரு விஷயம் கவனிக்கவேண்டும். தவிட்டில் இந்த வைட்டமின் இருப்பது போலவே வெல்லத்திலும் இந்த வைட்டமின் சிறிதளவு உண்டு. ஆனால் சுத்தம் செய்யப்பட்ட வெள்ளைச் சர்க்கரையில் இந்த வைட்டமின் சிறிதளவுகூட இல்லை.)

இக்காலத்துத் தமிழ்த்தாய்மார், பழந்தமிழ்த் தாய்மாரைவிட அதிக நாகரிகம் அடைந்துவிட்டதாகக் கருதிக்கொண்டிருக்கிறவர்களாதலின், பிள்ளைகளுக்குத் தவிட்டுப் பலகாரம் கொடுப்பது அநாகரிகம் என்று நினைக்கிறார்கள் போலும்! அப்படிக் கொடுக்க நினைத்தாலும், மெஷின் அரிசியை உபயோகிப்பதால் அவர்களுக்குத் தவிடு எங்கிருந்து கிடைக்கப் போகிறது!

இக்காரணத்தினால்தான் — தவிடு போக்கிய அரிசியை உண்பதனால்தான்— தமிழர் நாளுக்கு நாள் தேக உரம் குன்றி பலவீனர்களாகிறார்கள். ஆனால், கேழ்வரகு, சோளம், கம்பு, இவை முதலியவைகளைக் களியாகவும் கூழாகவும் செய்து உண்ணும் மக்கள் அரிசியுண்போர்களைவிட திட தேகமும் உரமும் உடையவர்களாய்க் காணப்படுவதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால், அவர்கள் கேழ்வரகு, கம்பு, சோளம் முதலியவைகளைத் தவிடு போக்காமல் அரைத்து (முழுதானியங்களாகவே அரைத்து) உணவு செய்து உண்ணுகிறபடியால் இந்த வைட்டமின் அவர்கள் உடம்பில் சேருகிறது. சோள உணவு, கேழ்வரகு உணவுகளை உண்போர், தங்கள் ஆகாரத்துடன் பால், தயிர், முட்டை போன்றவைகளையும் சேர்த்துக்கொண்டு வந்தால் அவர்கள் இன்னும் தேக பலமுடையவர்களாயிருப்பார்கள் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

ஆனால், அரிசியுண்ணும் தமிழர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதென்னவென்றால் அரிசியை அவலிடித்துத் தின்னவேண்டும் என்பதுதான். அவல் இடிப்பதனால், தவிடு அவலிலேயே தங்கி விடுகிறது. ஆகையால் இந்த வைட்டமின் அவலில் உண்டு. ஆனால், தினசரி உணவில் அரிசியை உபயோகப்படுத்தும் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்? முதலாவது, மிஷின் அரிசியை உபயோகப்படுத்துவதால் இந்த இ வைட்டமின் (Vitamin B) சாதத்தில் அறவே கிடையாது. இரண்டாவதாக, சாதத்தில் உள்ள கஞ்சியை வடித்து விடுவதால், தவிட்டுடன்கூடிய அரிசியாயிருந்தபோதிலும், சாதத்திலிருந்து வடிக்கப்படும் கஞ்சி நீரோடு இந்த வைட்டமின் கழிந்து விடுகிறது. எனவே தமிழர் உண்ணும் தினசரி அரிசி உணவில் இந்த வைட்டமின் அறவே கிடையாது என்று ஏற்படுகிறது. இதற்காக, இந்த இ வைட்டமினை (Vitamin B) வேறு ஆகாரத்தின் மூலமாகப் பெறவேண்டும். அவ்விதம் பெறப்படும் இந்த வைட்டமின் உள்ள வேறு ஆகாரம் சொற்ப விலையுள்ளதும் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். அந்த பொருள் என்னவென்றால் சீமைத்தக்காளிப்பழமே (Tomato).

இந்தத் தக்காளிப் பழத்தை நமது வாசகர்களுக்கு, சென்ற இதழில் எழுதிய அ வைட்டமின் என்னும் கட்டுரையில் பலமாக சிபார்சு செய்திருக்கிறேன். இப்பொழுதும் எனது வாசகர்களுக்கு இந்த தக்காளிப் பழத்தைப் பலமாக சிபார்சு செய்கிறேன். இனி எழுதப்போகும் அடுத்த வியாசத்திலும் இந்தப் பழத்தை உங்களுக்குக் கட்டாய உணவாகச் சிபார்சு செய்யப்போகிறேன். ஏன் என்று கேட்கிறீர்களா? இந்தப் பழத்தில் அ வைட்டமின் (Vitamin A) இருக்கிறது. இ வைட்டமின் (Vitamin B) அதைவிட அதிகமாக இப்பழத்தில் இருக்கிறது. அடுத்த கட்டுரையில் எழுதப்போகிற உ வைட்டமினும் (Vitamin C) இப்பழத்தில் உண்டு. அன்றியும் இப்பழம் சொற்ப விலையுள்ளது. இன்னும் புறக்கடைகளிலும் தொட்டிகளிலும் இந்த தக்காளிச் செடியைச் சுலபமாகப் பயிரிட்டுக் கொள்ளலாம். இவ்வளவு உபயோகமுள்ள இந்தத் தக்காளிப் பழத்தை நாம் தினந்தோறும் உண்ணப் பழகவேண்டும். இப்பழத்தைச் சமைத்துச் சாப்பிடுவதைவிட சமைக்காமல் சாப்பிட்டால் அதிக பலன் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி, இந்த இ வைட்டமினைப்பற்றி (Vitamin B) முக்கியமாகச் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு. அதாவது, இந்த வைட்டமின் அனலில் (உஷ்ணத்தில்) அழிந்து விடுகிறதில்லை யானாலும் சோடாமாவு சேர்த்துச் சமைத்தால் இந்த வைட்டமின் அறவே அழிந்து விடுகிறது. ஆகையால், உங்கள் ஆகாரத்தைச் சமைக்கும்போது அவற்றுடன் சோடா மாவைச் சேர்த்துச் சமைக்க வேண்டாம். பொதுவாக வைட்டமின்களெல்லாம் சோடா மாவினால் அழிந்து விடுகின்றன என்பதை வாசகர்கள் அவசியம் கவனிக்கவேண்டும்.

இந்த இ வைட்டமின் (Vitamin B) அதிகமாக உள்ள உணவுப் பொருள்களாவன:—சீமைத் தக்காளி (Tomato), முட்டை, அக்ரோட்டுப் பருப்பு (Walnut), பசலைக்கீரை (Spinach) முதலியனவும், தவிடு போக்கப்படாத தானியங்கள் (அதாவது முழுகோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, பருப்பு வகைகள்) வாதுமைப் பருப்பு முதலிய கொட்டை வகைகள், பால், மிருகங்களின் மூளை, ஈரல், முதலிய உறுப்புகள் முதலியன.

ஹரிஜனங்களை

ஆதரியுங்கள்



மூளையின் சக்தியைக் கணிக்க

அமெரிக்காவில் மூளையின் சக்தியைக் கணிக்க ஒரு புதுவிதமான யந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதனால் மூளையின் கனம், சக்தி முதலியவைகளைக் கணக்கிட முடிகிறது.

உலகத்தில் சிறிய "பிடில்"

காலிபோர்னியாவிலிருக்கும் பிடில் உற்பத்தி செய்கிறவன் உலகத்திலே மிகச் சிறிதான பிடிலைச் செய்திருக்கிறான். அது 1/32 அவுன்ஸ் எடையுள்ளது. இதைச்செய்து முடிக்க அவனுக்கு அனேக மாதங்கள் பிடித்தனவாம்.

மோட்டார் டயருக்கு நைட்ரஜன்

பிராண வாயு காற்றில் இருந்து வருகிறது. பிரணவாயு ரப்பரை வெகு சீக்கிரத்தில் கெடுத்து விடும். அதனால் இப்பொழுது நைட்ரஜன் என்ற வாயுவைச் சக்கரத்தில் அடைப்பதினால் மோட்டார் டயர்கள் வெகு நாட்களுக்கு உழைக்கும் என்று கண்டு அதைப் பிரிட்டனில் உபயோகித்து வருகிறார்கள்.

நினைத்தவுடன் மழை

அமெரிக்காவில் மஸாச்சஸட்ஸ் ஸயன்டிபிக் ஸ்தாபனத்தில் வானத்திலிருக்கும் நீராவியை ஜலமாக மாற்றக் கூடிய குணமுள்ள ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். மூடுபனி நிறைந்த ஒரு பிரதேசத்தில் இந்த மருந்து நிறைத்த குழாய்களை வைத்து மருந்தை ஆகாயத்தில் தெளித்தால் அவ்வளவும் மழையாக மாறி விடும்.

ஆகாயத்திலிருந்து வெடிகுண்டு எறியாமலிருக்க

இப்பொழுது யுத்த முறைகள் மாறி வந்துக் கொண்டிருக்கின்றன. திடீரென்று எதிரி ஆகாய விமானத்தில் வந்து வெடிகுண்டு எறிந்து எந்த நகரத்தையும் நாசமாக்கி விடலாம். இப்படி வரக்கூடிய ஆகாய விமானங்களை இருட்டில் கண்டு பிடிப்பதற்காக பெரிய ஸர்ச் லைட்டுக்களை கண்டு பிடித்திருக்கிறார்கள்.



உலக இரட்சண்ய சேனையில் இப்பொழுது நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற கம்மாண்டர் மிஸ். இவான்ஜலின் பூத். இவர் இந்தச் சங்கத்தின் மூல ஸ்தாபகரின் புதல்வி.

—P. P. B.

நகரத்தின் உஷ்ணத்தைத் தடுக்க

அமெரிக்காவில் பெரிய நகரங்களில் உஷ்ணத்தைத் தடுத்து தேகாரோக்கியத்தை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற சுகந்த மெல்லிய குளிர்ந்த காற்றுக்களை நகரம் முழுவதும் குழாய்களின் வழியாய்ப் பரப்புவதற்குத் தயார் செய்துக் கொண்டு இருக்கிறார்கள். சிக்காகோவில் ஒரு பெரிய ஸயன்டிஸ்ட் இதைப்பற்றி ஆராய்ச்சிசெய்து வருகிறார்.

கை விரல் அடையாளங்கள்

இருபத்தைந்து வருஷ ஆராய்ச்சியின் பயனாக டாக்டர் ஹென்ரிக் பால் என்ற பெர்லின் வைத்திய நிபுணர் பின் வரும் முடிவிற்கு வந்திருக்கிறார்.

இது வரை கை விரல் அடையாளம் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்குத் தான் உபயோகப்பட்டு வந்தது. இவர் கை விரல் அடையாளத்தினால் வியாதிகளையும், மனித வர்க்கத்தில் இருக்கும் தனித்தனியான பாகுபாடுகளான ஜாதி (Race)ப் பிரிவையும் கண்டு பிடிக்க முடியும் என்கின்றார்.

மோட்டார்க் கொலைகள்

மோட்டார்களை அதிக வேகமாக ஓட்டிச் செல்லுவதால் அபாயத்தில் திடீரென்று நிறுத்தமுடியாமல் பாதசாரிகள் மேல் ஏற்றிவிடுவது சர்வ சாதாரணமாக இருக்கிறது.

லண்டனில் உள்ள ஒரு மோட்டார் ஓட்டி இதைத் தடுப்பதற்கு ஒரு விதமான யந்திரத்தை செய்திருக்கிறான். அதை மோட்டாரில் வைத்துப் பிணித்து விட்டால் அது முன்னே விழுகிறவர்களை யாதொரு சேதமும் இன்றித் தூக்கிக் கொள்ளும்.

சக்கரமுள்ள கடல் விமானங்கள்

இப்பொழுது ஒரு புதுமாதிரியான ஆகாயக் கப்பல், அதாவது தண்ணீரிலிருந்தபடியே நேரே உயர எழுந்து ஆகாயத்தில் பறக்கக்கூடிய கப்பல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் புதுமாதிரியான கப்பல்களின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு சக்கரங்கள் இருக்கின்றன. ஆகாயக் கப்பல் ஜலத்திலிருக்கும்பொழுது சக்கரத்தின் மீதுதான் மிதக்கும். சக்கரம் மணிக்கு 100 மைல் வேகத்தில் சுற்றுவதினால் உடனே எழுந்து பறக்க ஆரம்பிக்கிறது.

புதிய மதம் வேண்டும்

(கேட் ரிச்சார்ட்ஸ் ஒஹேர்)

இந்தப் புதிய நாகரிகத்தின் உத்வேகத்தினால் எத்தனையோ மதங்கள் அர்த்தமற்றுப்போய் விட்டன. எத்தனையோ கோவில்கள் பாழாகிக் கிடக்கின்றன. மதத் தலைவர்கள் எல்லாம் சோர்ந்து வலியிழந்து விட்டனர். எல்லோருக்கும் சம்மதமான ஒரு பெரிய மதத்தைச் சிருஷ்டிக்கத் தெய்வமே கருணை கூர்ந்து இச்சமயத்தை நமக்குக் கொடுத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். முதலாளித்துவத்தின் கையளவாக இல்லாத, நமது தேவைகளுக்கும் நமது அவசியத்திற்கும் தகுந்த ஒரு பொதுவான மதத்தைச் சிருஷ்டிக்க நமக்குத் தைரியம் வேண்டும்.

இதுவரை, அரசியலைப் போன்ற, ஒரு திட்டத்திற்குக் கட்டுப்பட்ட, மதம் இருந்து வந்தது. அது மனித வர்க்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. ஆத்மிக சாந்தியை யளிக்கும் மதத்தின் தேவை மனிதனுக்கு வேண்டாம் என்று நாம் நினைக்கக் கூடாது. உலகத்தின் போக்கு சர்வநாசத்தை நோக்கியிருக்கும் தருணத்தில்தான் மதத்தின் தேவையும் கடவுளின் உண்மையும் மனிதனுக்கு நன்றாகத் தெரிகிறது. வாழ்க்கையின் முக்கிய வசதிகளே இல்லாமல் போய் விட்டது. இதுவரை இருந்து வந்த மதங்கள் அவனுடைய கஷ்டங்களுக்கு, அவனுடைய முக்கிய அவசியத்திற்குத் தகுந்தபடியான பதில்களைக் கொடுக்க முடியவில்லை. இதனால் மதங்களுக்கு இருந்து வந்த மதிப்புப் போய் விட்டது.

நான் சிறையில் இருக்கும் பொழுது இந்த உண்மைகள் என் மனத்தில் வெகு ஆழமாகப் பதிந்தன. மொத்தமாகக் கவனித்தால் கைதிகள்தாம் அதிகமதப் பற்றுடையவர்களாக இருக்கிறார்கள். நரகத்தின் ஆழத்தைக் கண்ட அவர்கள், தங்களுக்குத் தாங்களாகவே ஒரு சாந்தியைத் தேடிக் கொள்ளும் திறனில்லாமல், மதத்தின் தேவையை அதிகமாக நாடுகிறார்கள். ஒவ்வொருவனும் தன் தேவைக்குத் தக்கபடி ஒரு மதத்தைக்கற்பித்துக் கொள்ளுகிறான். அவை பலமாதிரியான நிலைமைகளில் காணப்படும். பொதுவாக அவை பூர்வ அநாகரிக மனிதனின் மதத்தின் தன்மைக்குத்தான் கொண்டு வந்துவிடும். கைதி இந்த சுகபோகத்திலிருந்து தத்துவம் பேசி வரும் நமதுகிறிஸ்தவ மதத்தை வெறுக்கிறான். ஆனால் அவனது மனம் தாவீதையும், லாயத்தில் பிறந்து சமூகப் பிரஷ்டம்செய்யப்பட்ட அந்த இயேசுவையும் தன்னுள் இருத்திக் கொள்ளுகின்றது.

1917க்குப் பிறகு நரகத்தை நாம் எங்கும் நேரிலேயே பார்க்கக்கூடிய நிலைமையில் உலகம் வந்துவிட்டது.எங்கு பார்த்தாலும் சுபிட்சத்தின் மத்தியில் வறுமையைக் கண்டு, மனது தெளிந்து புதிய புதிய கொள்கைகளை, அந்தக் கைதிகள் சிறைக்குள் இருந்து உண்டாக்கிக்கொள்ளும் ஆவேசத்துடன், நாம் பிறப்பித்து விடுகிறோம். இப்பொழுது சமூகம் ஒப்புக்கொள்ளும் புதிய கொள்கைகள் எல்லாம், இதுவரை இருந்து வந்த கிறிஸ்தவக்கொள்கைகளுக்கு விரோதமானவைகளே.

புதிய தலைமுறைகள் எல்லாம், எதிலும் பற்றில்லாமல், எதிலும் நம்பிக்கையில்லாமல், ஒரு பாரமார்த்திகக் கொழுகொம்பு இல்லாமல், வளர்ந்து வருகிறார்கள். உலக யுத்தம் சமூக மத, அமைப்புக்களை எல்லாம் போக்கி விட்டன. அதற்குப் பதில் ஒன்றும் இல்லாமல் பகுத்தறிவற்றஅநாகரிக மனிதனின் மதமற்ற தன்மையைத் தனது முழுமனதுடனும் ஒப்புக்கொண்டு வளருகிறார்கள் வாலிபர்கள். எங்கு பார்த்தாலும் உடலின் தேவைகளுக்கும், ஆத்மாவின் தேவைகளுக்கும் இதுவரை இருந்து வந்த சமயங்கள் ஒன்றும் செய்ய முடியாது இருப்பதுதான் காரணம் என்று நினைக்கிறேன்.

இம்மாதிரியாகத் தறிகெட்டுச் சிதறி இருளடைந்த நிலைமையிலே, மனச்சோர்வினால் ஏற்பட்ட வேடிக்கையான கொள்கைகள்தாம், இனி வரப்போகும் ஓர் புதிய சமயத்தின் எழுச்சியைக் குறிக்கின்றன. இனி வரும் சமயம் சமூகத்தின் பல திறப்பட்ட அறிவுகளுக்கும் ஒரு சாந்தியை அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். சமூகத்தின் தர்ம உணர்ச்சியை நிலைநிறுத்தி மனிதனைக் கடவுளுடன் ஐக்கியப்பட வைக்கும் ஒரு மதம் வேண்டும். நாம் கடவுளை நமது சாயையில்தான் சிருஷ்டிக்கிறோம். ஆனால் அந்தக் கடவுள், நமக்குச் சாந்தியையும் அன்பையும் நிலைநிறுத்துவதாக இருக்கவேண்டும்.

சமூகத்தைப் பண்படுத்திச் சமூகப் பிரச்னைகளைத் தீர்த்துவைத்து, சமூக தர்மத்தை அதிக சக்தியுடன் நிலைநிறுத்திப் பொருளாதார, சமூக முன்னேற்றத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு சமயந்தான் நமக்கு இப்பொழுது வேண்டும்.

ஒரு பெரிய சமயத்தை ஸ்தாபிப்பதற்கு இப்பொழுது இருக்கும் வசதிகளைப்போல் சரித்திரத்தில் இதுவரை இருந்ததே கிடையாது. எல்லோருக்கும் கல்வியைப் போதித்து, அறிவை வளர்த்து, பழைய கொள்கையின் அநாவசியத்தைக் காண்பித்தது இந்தக் காலம்தான். வாழ்விற்கு அவசியமான ஒரு மதம் தேவை என்பதை இப்பொழுதுதான் நாம் அறிகிறோம். அறிவையும் ஆத்மாவையும் சாந்திசெய்யக்கூடிய, வீண் படாடோபங்கள் இல்லாத, ஆதியில் நஸரேயனாகிய இயேசுவின் உள்ளத்தில் எழுந்த நேரான உண்மைகள் போன்ற ஒரு புதிய மதத்தின் தாபம் பொதுமக்களிடை அதிகமாக இருந்து வருகிறது. இனி வரப்போகும் அந்தப் புதிய சமயம், சமூகக்கொடுமைகளையும், அடிமைத் தனத்தையும் அறவே தொலைத்து, சமூகத்தின் சிறுமைக் குணங்களை ஒழிக்க முற்பட வேண்டும்.

உலக மகாயுத்தம் எல்லாவற்றையும் நாசமாக்கியது. பொருளாதார மந்தத்தின் கஷ்டங்கள் ஹிருதயத்தை இரும்பாக்கி விட்டது, ஏகமான கட்சிப்பிளவுகளை உண்டுபண்ணி விட்டது. இவ்வளவு துன்பங்களும் பழைய கொள்கைகளைச் சக்கை சக்கையாகப் பிரித்து அது தானே அழிந்துபோகும் மார்க்கத்தைச் செய்து வைத்தன. பழைய கட்சிப் பிரிவுகள் எல்லாம் இப்பொழுது பொது மக்களிடையே இல்லை. மூட நம்பிக்கையிலும், மூடப் பெருமையிலும், பிறந்த குறுகிய நோக்கங்களை யுடைய பழைய சமயத்தைச் சமூகம் உதறித் தள்ளி விட்டது. நமது தேவைக்குத்தக்க மதம் வேண்டும் என்று எல்லோரும் நாடுகிறார்கள்.

இந்தப் பிரச்னைகளுக்கு எல்லாம் ஒரு முடிவைத் தரக்கூடிய ஒரு புதிய மதம் அவசியம். காலத்தின் போக்கும் அதன் வரவைக் காண்பிக்கின்றன.

ராயில் போக்கு வரவு

மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35
கார்டு லைன்.		
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15


மதராஸ்—ஸெண்ட்ரல்

கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
,, எக்ஸ்பிரஸ் ...,	மாலை 1 0	மாலை 2 10
,, பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
,, ,, ...	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
,, ...	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளூமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

"இதோ நான் வருகிறேன் !

— பெரிய அளவான L. O. B. — லிட்டில்ஸ் ஓரியண்டல் பாமில் வீடுகளில் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு ஒன்றைத் தயாரிக்குமாறு பொது மக்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க நான் வருகிறேன்.

இந்த ஸ்பெஷல் பாக்கிங்கில் இருமடங்கு பெரிய அளவு ஜாடியும், லிட்டில்ஸ் ஓரியண்டல் ஸோப்பிஸ் வெகுமதிப் பெட்டியுமிருக்கின்றன. அழகான பெட்டியில் டஜன் 1-க்கு ரூ. 1-4 வீதம் தனியாக விற்கப்படுகிறது. எல்லா வியாபாரிகளும் L. O. B ஐ விற்கின்றனர்.



"சிறந்த இந்திய நிவாரணி"

கீல் பிடிப்பு, சுளுக்கு, வாதம், முதுகு வலி, நரம்பு வலி, தலை வலி, காது வலி, பல் வலி, சிராய்ப்புகள், தசை வலிகள் முதலியவற்றைப் பூரா நிவர்த்திக்க லிட்டில்ஸ் ஓரியண்டல் பாமை உபயோகியுங்கள்; நீண்ட காலமாகப் பெயர் பெற்று விளங்கும் இந்நிவாராணி உங்கள் வலியைத் தீர்க்கத் தவறாது.

Made in India (Madras City) for Half a Century

LITTLE'S Oriental BALM

the World Renowned Relief for Aches and Pains

(லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மஸியூடிகல்ஸ் லிமிடெட்.,
(பெட்டி 67) மதராஸ்.

காரைக்குடி.
பாரதி பள்ளிக்கூடம்

இப் பள்ளிக்கூட ஐந்தாவதாண்டின் மூன்றாவது மாணவர் கழகக் கூட்டம் ஆவணி-மீ 17ந்தேதி மாலை 5-மணிக்கு ஊழியன் உதவியாசிரியர் தோழர் இ. சிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என காரியதரிசி மெ. பெரிய கருப்பன் அறிவிக்கிறார்.

லெக்ஷ்மிபுரம்.

ஸ்ரீ மீனாக்ஷி சங்கத்தின் ஒன்பதாவதாண்டு 5ம் மாதக் கூட்டம் நாளது பவ ஆவணித் திங்கள் 15ம் நாள் பிற்பகல் 4 மணிக்கு கும்பகோணம் போஸ்டல் இன்ஸ்பெக்டர் திரு. M. K. நாயுடுகாரு அவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது.

காரைக்குடி சா. சு. குருகுலம்

பவஹு ஆவணி மீ 8உ பௌர்ணிமை அன்று பகல் 3-30 மணிக்கு ஆசிரியர் கே. அப்பாத்துரை பிள்ளை அவர்கள் தலைமையில் இரண்டாவது கூட்டமாக திருவாளர் ப. திலகர் அவர்கள் வீடு கட்டவேண்டிய முறையைப் பற்றிப் பேசினர். திரு. பி. முத்துச்சாமி அவர்கள் பயிற்சியைப் பற்றி நாம் தினந்தோறும் ஒரு மணி நேரம் பயிற்சி செய்ய வேண்டுமென்றும் காலையிலும், மாலையிலும் உலாவ வேண்டுமென்றும் தினந்தோறும் பந்து முதலியவைகள் விளையாட வேண்டுமென்றும் பேசினர். திரு. பெ. ஷண்முகம் அவர்கள் உணவைப் பற்றிப் பேசினர். திரு. மு. சா. சுப்பையா அவர்கள் தண்ணீரைப் பற்றி நாம் குடிக்கும் தண்ணீர் சுத்தமாக இருக்க வேண்டுமென்றும் அத் தண்ணீர் காய்ச்சி ஆறிய பிறகு சாப்பிட வேண்டுமென்றும் காய்ச்சினல் அநேகம் புழுக்கள் இறந்து விடுமென்றும் பேசினர். திரு. தெ. நாராயணன் அவர்கள் உணவைப் பாதுகாக்கும் முறையில் ஈயினல் உண்டாகும் வியாதிகளையும் தெளிவாகப் பேசியதோடு அக்கொடிய பிராணி உணவுகளில் உட்காராமல் தடுக்கும் வழிகளைப் பற்றியும் விரிவாகப்பேசினர். திரு. மெ. சுந்தரம் அவர்கள் உடற் பயிற்சி என்னும் விஷயத்தில் பயிற்சியிலுள்ள நன்மைகளிலும் அவைகளைப் பயில வேண்டும் முறைகளையும் பற்றிப் பேசியதோடு கால் நடை, தண்ணீர் இறைத்தல், நீந்துதல், பந்தாடுதல் இவைகளினல் உடலுக்கு ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் விரிவாக எடுத்து விளக்கினர். மாணவர்களுடைய விரிவுரை சாரங்களை எல்லாம் தலைவர் திரட்டி இவற்றை முற்றும் அனுசரிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர் என்று காரியதரிசி திரு. ராம. கணபதி எழுதுகிறர்.

பட்டேலுக்குத் தண்டனை

ஸ்ரீ அஷபாய் வல்லபாய் பட்டேல் என்ற பிரபல காங்கிரஸ்வாதி 'தொண்டர்களுக்கள்' என்று ஒரு பத்திரிகையில் எழுதிய கட்டுரைக்காக அச்சுச் சட்டத்தின் மீறுதலுக்குக் கைது செய்திருக்கிறர்கள்.



திரு. எஸ். முனுசாமி ரெட்டி சமீபத்தில் சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 'மாம்பலம் ரிக்ரியேஷன் கிளப்' பச்சையப்பன் கலாசாலை புரொபஸர் திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யரின் தலைமையில் ஒரு விருந்து நடத்தியது. —P. P. B.


ஜெயோ போன்ஸ்

சிறந்த தொனியை பரப்புவது.

5 வருஷ உத்திரவாத முள்ளது.

கிராமபோன் சம்பந்தமான எல்லா வித ஸ்பேர் ஸாமான்களும் ஸ்டாக் வைக்கிறோம்.

எல்லாம் பிரிட்டிஷ் சாமான்களே.



எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.


விபரங்களுக்குக் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஜெயோ போன் கம்பெனி,

2/15, லக்முதாஸ் தெரு, பி. டி. மதராஸ்.

வைஸ்ராயிக்கு மூன்று வருஷம்

வில்லிங்டன் பிரபுவிற்கு வைஸ்ராய் பதவி இன்னும் மூன்று வருஷகாலம் நீடித்து இருக்கும். இந்திய மந்திரி இவரை இப்பதவியை வகிக்கும்படி வற்புறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. வைஸ்ராய் ஆலோசித்து கூறுவதாகத் தெரிய வருகிறது.



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஷூ ஆடி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஷூ ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கோழும்பு நடப்பு வட்டி.

ஆகஸ்டு	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஷூ சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0
ஆடி	0—6—6
ஆவணி	0—6—0

உண்டியல் விலை.

ஸ்டெரயிட்ஸ் விற்பனை	157¼
,, 30 நாள் தவணை வாங்குவது	150

ரப்பர்.

லண்டன், செப்., 3உ

புகைப்போட்ட ரப்பர் (ஸ்டாண்டர்டு)

வாங்குவோர் விலை	7½ பென்ஸ்.
விற்பவர் விலை	7 9/16 பென்ஸ்.

ரப்பர் இருப்பு

இவ்வாரம் லண்டனில் கையிருப்பு ரப்பர் 48255 டன். செப்டம்பர் 1-ந் தேதியோடு முடிவான வாரத்தில் செலவான ரப்பர் 698 டன். லிவர் பூலில் ரப்பர் இருப்பு 56388 டன். சென்ற வாரம் அங்கு செலவான ரப்பர் 303 டன்.

கோழும்பு

செப். 3—

இன்று நண்பகல் ரப்பர் விலை:—கிரேப் 38 செண்டு. ஷீட் 37¼ செண்டு. நேற்றைய முடிவுவிலை கிரேப் 38 1/8 செண்டு. ஷீட் 37 3/8 செண்டு.

தேயிலை

லண்டன், செப்., 3.

இன்று இந்தியத் தேயிலை 30 ஆயிரம் கட்டுகள் ஏலம் விடப்பட்டன.

தங்கம், வெள்ளி.

சென்னை, செப். 4உ

சவான் (சில்லரை)	22—2—6
,, மொத்தமாக	22—2—0
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—15—6
மூலா தங்கம் ,,	34—9—0
வெள்ளி	
1 ரூபா எடைக்கு	0—10—6
100 ரூபா எடைக்கு	61—4—0

கப்பல்.

லண்டன் கிளாஸ்கோ

கிளான் மாக்பி: செப்டம்பர் 11-ந் தேதி வந்து செப்டம்பர் 13-ந் தேதி புறப்படும்.

கிளான்மகநில்: செப்டம்பர் 25-ந் தேதி வரும்.

ரங்கூன்


எரின்புரா: செப்டம்பர் 7-ந் தேதி சென்னையிலிருந்து புறப்படும்.

எதோபியா: செப்டம்பர் 10-ந் தேதி வந்து 14-ந் தேதி புறப்படும்.

மலேயா

ரஜுலா: செப்டம்பர் 8-ந் தேதி வந்து 11-ந் தேதி புறப்படும்.

ரோஹ: செப்டம்பர் 22-ந் தேதி வந்து 25-ந் தேதி புறப்படும்.



நயம் மூக்குகண்ணுடிகள் கிடைக்கு மிடம். இதுவே மூக்குகண்ணுடி வியாபாரிகளுக்கும் கண் வைத்திய டாக்டர்களுக்கும் எல்லாவிதமான பிரேம்களும் (Frames) நெம்பர் வாரியாக கண்ணுடி பில்லைகளும் சமீப திருஷ்டி தூர திருஷ்டி என்னும் கண்ணுடிகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் தயாராக கிடைக்கும். வெளியூர் வியாபாரிகளுக்கு தகுந்த இடம்.

ஆர். ஜெ. ராம் அண்டு கோ,

மூக்குக்கண்ணுடி வியாபாரிகள்,


நெ. 23, பிராட்வே, மதருஸ்.

ரூ. 600.
ரொக்கப்பரிசு.

1-வது பரிசு ரூ. 350. 2-வது பரிசு ரூ. 250.

விடை கண்டுபிடிக்கும் விதம்.

பக்கத்திலுள்ள படத்தில் ஒவ்வொரு கட்டத்திலுள்ள படம் கோவலன் பாட்டின் முதலடியை குறிப்பிடுகிறது. அந்த பாடல்களின் குறிப்பு கீழேதரப்பட்டிருக்கிறது. முதல் படம் மாதவி மாலை ஒன்றைக் கையில் கொண்டு சுழற்றிடுகிறாள் பாட்டின் குறிப்பைக் கவனித்தால் சாரியான விடை மாலை ஒன்றுக் கையில் கொண்டு சுழற்றிடுவேன் என்பது தெரியவரும். இதேபோல் மற்ற படங்கள் குறிப்பிடும் ஐந்து பாட்டுகளையும் கண்டுபிடித்து தனிக் காகிதத்தில் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டியது.



நிபந்தனைகள்.

ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணு 6. (6-ம் சேர்த்து ஒரு விடை) கட்டணத்தை மணிஆர்டர் மூலம் அனுப்ப வேண்டியது ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். மணியார்டர் கூப்பனிலும் விடை அனுப்பும் கவர்மேலும், சங்கீத போட்டிப் பந்தயம்—2 என்று எழுதி அனுப்பவேண்டியது.

பத்திராதிபரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியான விடை அனுப்பு பவருக்கு முதற்பரிசும்,அடுத்தபடி சரியாய்யிருக்கும் விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும். 1-க்குமேல் சரியான விடைகள் வந்தால் பரிசுத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்படும்.

☞ பத்திராதிபரின் விடை ஸீல் போட்ட கவரில் ஒலவக்கோடு மலபார் இண்டர் நேஷனல் ஆபீஸில் டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகளும் பிரவேசக் கட்டணமும் 6-10-34 தேதிக்குள் வந்துசேரும்படி அனுப்பவேண்டியது. சரியான விடையும் பரிசு பெற்றவர்களின் விபரமும் 19-10-34 தேதி ஊழியன் வாரப் பத்திரிகையில் வெளிவரும். இந்தப் போட்டிப் பந்தயம் 20-9-34 தேதி வஸந்த விகடன் பத்திரிகையிலும் வெளிவரும்.

குறிப்பு:—மாலை ஒன்று கையில் கொண்டு சுழற்றிடுவேன்—கழுத்தினில் மாங்கல்ய மிருக்குதென்று—ஆ, என் கண்மணியே—நாரிஎன் நேசம் மோசமே சகோதரரே—நின் அடைக்கலமே அடைக்கலமே—ஐயோ வைத்த அடையாளங்கள்—என்னையும் அடிப்பவர்கள்—அம்மா மாதவர் குலத்துதித்ததாயே—ஆடைபொருள் ஆபரணம்—மாங்காய் மல்லிகைப் புஷ்பம் தீபம்.

விடை அனுப்பவேண்டிய விலாசம்:— **சங்கீத போட்டிப்பந்தயம். 2.**

மானேஜர், மோதிலால் நிலையம்,

ஒலவக்கோடு, (எஸ். மலபார்.)

யுனைடெட் இந்தியா

லைப் அஷியூரென்ஸ் கம்பெனி லிமிடெட், மதராஸ்.

லைப் அஷியூரென்ஸில் முதன்மையா யிருப்பதனைத்தையும் மிகவும் சல்லிஸாக அளிப்பது
யுனைடெட் இந்தியா.

பணத்தைப் பத்திரப்படுத்திப் பாதுகாப்பதற்கு யுனைடெட் இந்தியாவில் ஒரு பாலிஸி இருப்பது நலம். ஒருவருடைய விருத்தாப்பிய காலத்திற்காகட்டும், அல்லது குடும்ப ஸ்வாதிபத்திய நிலைமைக்காகட்டும், அது முதல்தரமும் பூர்ணமும் ஆன பாதுகாப்பாகும்.

தென்னிந்தியாவிலுள்ள சிறப்பும் புகழும் படைத்திலங்கும் பிராசீன கம்பெனியாகும்
யுனைடெட் இந்தியா.

முழு விவரங்களும் இன்ஷியூரென்ஸ் சம்பந்தமான சகல அம்சங்களும் தெரியவேண்டுமானல் அடியிற் குறித்த எந்த விலாசத்திற்கேனும் எழுதுக :—

ஹெட் ஆபீஸ்:

"யுனைடெட் இந்தியா அஷியூரென்ஸ் பில்டிங்க்ஸ்"

செம்புதாஸ் தெரு, மதராஸ்.

அல்லது கிளையாபீசுகள் எதற்காவது, அல்லது பல விடங்களிலுள்ள ஏஜெண்டுகளுக்காவது எழுதவும்



நேர்த்தியான நகைகள்

ஒரு ஜன சமூகத் தேவையாகும். அவை அதிகப் பணச் செலவினுல்தான் கிடைக்கக்கூடிய தென்பதில்லை. மக்களால் எப்போதும் விரும்பப்படுவதும், ஆனல் அபூர்வமாக அடையக்கூடியதுமான ஒரு மேன்மையை நாகரிக அமைப்புடைய ஒரு நம்பத் தகுந்த நகை கொடுக்கிறது.

☞ நம்பத் தகுந்த நாகரிக அமைப்புடைய நேர்த்தியான எல்லாவித நகைகளும் நாங்கள் செய்கிறோம்

M. சுகாநந்தம்,
ஜிவெல்லர் அண்டு எனமலர்
6, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

N. B :—நவீனமான எவா, எனமல் நகைகள் எங்களிடம் ஒரு விசேஷமான தாகும்.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd.,
at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.